بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# கியாமநாள் விசளம்.

கல்வியில் சிறந்த உலமாக்களுக்கெல்லாம் இராஜாவான

மஹ்மூது கியாஸூத்தீன் ஆலிம் ஸாஹிபு

அவர்களால் இயற்றப்பட்ட பிரதிக்கிணங்க,

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹூல் ஹமீது & ஸன்ஸ்

அவர்களால் பிழையற திருத்தி,

தங்களது

ஷாஹூல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

1955

இதன் விலை] [ரூபாய் ஒன்று.

OFFICE OF THE REG...
7 APR 1955
MADRAS
Q7:3
N55

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# கியாமநாள் விசளம்.

### கடவுள் துதி.

#### அறபு வசனம்.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன். வல் ஆகிபது லில் முத்தகீன் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலாறஸுலிஹி ஸெய்யிதிநா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன்.

---

## முகவுரை.

அல்லாஹுத் தஆலாவுடைய அடியார்களில் மெத்தவும் தூஷணிப்பையும் பாவத்தையுமுடைய பகீறு மஹ்மூது கியாசுத்தீ னென்பவனாகிய நான் சொல்லுகிற தென்னவெனில்,

கல்வியிற் சிறந்த உலமாக்களுக்கெல்லாம் இராஜாவாகிய மௌலானா ஷாஹ றபீ உத்தீன் என்கிறவர் பாரிசு பாஷையில், கியாமநாள் விசளத்தையோர் கிதாபாகக் கோர்வை செய்தார்கள். அப்பாரிசு பாஷை தெரியாத தமிழ் பாஷையை யுடைய பேர்களில் என்போலொத்த அவாம்களுக்குப் பிரயோஜனங் கொடுக்கும்படியாய் அதைத் தமிழ் பாஷையில் தறுஜுமாச் செய்தேன்.

என்றாலும் இதில் யாதேனுங் குற்றங்குறை யிருக்கில் மெத்தவும் புத்தி விபரீதத்தையுடைய மூஃமீன் முஸ்லிமானவர்கள் பொறுத்து நற்றயையோடு மன்புகூர்ந்து ஆசீர்வதிப்பீர்களாகவும். ஆமீன் யாறப்பில் ஆலமீன்.

---

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# கியாமநாள் விசளம்.

## கடவுள் துதி.

### அறபு வாக்கியம்.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன். வல் ஆகிபது லில் முத்தகீன் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா றஸூலிஹி ஸெய்யிதினு முஹம்மதின் வஆலிஹி, வஸஹ்பிஹீ அஜ்மஈன்.

---

## நூலினுட் சரிதை.

இமாம் ஜமாலுத்தீனஸ் சுயூத்தி கசுபென்கிற றிசாலாவிலே சொன்னார்கள்: அதாவது அந்த வும்மத்துகளுடைய காலமாகிறது ஆயிரம் வருஷத்துக்குமேலே அதிகமாய் அதற்குமேலே ஐந்நூறு வருஷத்துக்குள்ளாலே யாகவிருக்கும். அதன்பேரில், ஹதீதுகளறிவிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும், துனியாவுடைய காலம், ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் துவர்க்கம் எழாயிரம் வருஷத்துக்கு மேல் எண்ணாயிரம் வருஷத்துக் குள்ளாலே யென்றும், ஆனால் நம்முடைய நாயகம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஆறாயிரம் வருஷத்துடைய ஒடுக்கத்திலே அனுப்பப்பட்டார்களென்று மிகுதியான ஹதீதுகள் வந்திருக்கின்றது. இந்தக்காலம் சுயூத்தி றஹ்மதுல்லாஹி அலைஹி சொன்னார்கள். அந்தத் தறுஜுமாவை ஷாஹ்றபீவுத்தீன் சொல்லுகிறார்: கியாம நாளுடைய அடையாளங்களில் முந்தின அடையாளமாகிறது, நம்முடைய நாயகம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் துனியாவிலே யுண்டானதும், வபாத்தானதுமாக விருக்கும். ஏனெனில் துன்யாவிலே றஸூல் நாயக முண்டானது கொண்டு நுபுவ்வத்தும் றிஸாலத்தும் துனியாவை விட்டும் தீர்மானமாய்ப்

போயிற்று. ஆனதால் றஸூல் நாயகம் வபாத்தானதைக் கொண்டு வஹியுடைய இல்மும், வானத்துடைய விசளமும் நின்று போயிற்று. அதனாலே, பூமி பஸாது செய்கிற பேர்களை விட்டும் சாலிஹாகும் படியாய் றஸூல் நாயகமவர்களுக்கு ஷஹீதென்று சொல்லப்பட்ட பீஸபீலுடைய ஹக்குமுண்டாயிற்று. இவைகளெல்லாம் கியாம நாளுடைய தொப்புளாக விருக்கும்.

இன்னும் கியாம நாளுடைய அடையாளங்களில் நம்முடைய நபி நாயகம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள், மிகுதியான ஹதீதுகள் திருவுளமா யிருக்கிறார்கள். அந்த ஹதீதாவது இரண்டு வகையா யிருக்கும், அதிலே ஒன்று சின்ன அடையாளம், மற்றொன்று பெரிய அடையாளம். ஆனதால், றஸூல் நாயகத்துடைய காலந் தொடுத்து, இமாம், மஹ்தி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வெளியாகிற வரைக்கு முண்டாகிற அடையாளங்கள் சின்ன அடையாளம். இமாம் மஹ்தி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வெளியான நாள் முதற் கொண்டு சூறூதுகிற வரைக்கு முண்டாகிற அடையாளங்கள் பெரிய அடையாள மென்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானதாய் அலி றலியல்லாஹு அன்ஹு றிவாயத்துச் செய்தார்கள். இன்னும் கியாம நாளுடைய அலாமத்திலுள்ளது, பூமியிலுண்டாகிற வருமானங்களைத் தங்களுக்குத் தவுலத்தாக்கி கொள்கிறதும், ஸக்காத்துகள் தங்களுடைய ஹக்கென்று மிஸ்கீன்களுக்குக் கொடாமலிருக்கிறதும், காபிரான பேர்களுடனே படை செய்து கொள்ளையிடப்பட்ட முதல்கள் எந்த படிக்கு ஹலாலாக இருக்குதோ அது போலே அமானதங்களை ஹலாலானதென்று தின்று போடுகிறதும், புருஷன் தன் பெண்ஜாதிக்கு வழிப்பட்டு நடக்கிறதும், தாய்க்குப் பிள்ளைகள் வழிப்படாம லிருக்கிறதும், தகப்பனைத் தூரப்படுத்தி விட்டுக் கெட்ட நடத்தையுடைய கூட்டாளிமார்களை யுவந்திருக்கிறதும் தீனுடைய இல்முகளை துனியாவுக்காகப் படிக்கிறதும், அந்தக் கூட்டத்தில் கெட்ட மனிதனைக்கெட்ட அசலும், அவட்கையுங் கெட்ட குணமுமுள்ளவன் அந்தக் கூட்டத்துக்குத் தலைமையா யிருக்கிறதும், மனிதர்களுடைய காரியங்களுக்கு லாயக்கல்லாதவன் காரியஸ்தனாக இருக்கிறதும், வாயைக் கொண்டு அல்லது கையைக் கொண்டு நோவினை செய்கிறதைப் பயந்து மனிதர்களுக்குத் தார்லீம் செய்கிறதும், கள்ளு சாமாயத்துடைய பரிமாற்றம் வெளியரங்கமா யிருக்கிறதையும், கேளிக்கை யாடுகிறதை

யும், இராகம் பாடுகிறதையும், வீணை வாசிக்கிறதையும், ஆதத்தான நடப்பாக்கிக் கொள்ளுகிறதும், ஸினு அதிகமாகிறதும், உம்மத்து களிலே பின்னுண்டானவர்கள் முன்னுண்டானவர்களை லஃனத்து செய்கிறதும், ஆகிய இவர்கள் மூதேவியான ரூபுலிகளாக விருக்கும்.

ஆனால் இவ்விதங்களான அடையாளங்களுண்டாகிற தெவ்வித மென்றால் சிவப்பு நிறமான அடிசாகிய காற்றும், பூமி சொரிய வாங்கிக் கொள்ளுகிறதும், வானத்தி லிருந்து கல் மழைகள் பெய்கிறதும், சூறத் தென்னும் நிறங்கள் பேதகமாகப் போகிறதும், கோர்வையாய்க் கொத்தமணிகள் அக்கோர்வையற்றுப் போனால் ஒன்றுக்குப் பின்னு லொன்று எப்படி விழுகுமோ, அப்படியே மற்று முண்டான அதா பாகிய அடையாளங்க ளுண்டாகிறதை வழி பார்க்கிறதாக விருக்கும். இன்னும் வேறே ஹதீதுகளில் வந்திருக்கிறது: கியாம நாளுடைய அடையாளங்களிலுள்ளதா யிருக்கும், வெள்ளாட்டியுடைய பிள்ளைகள் அதிகமாகிறதும் இல்முடைய அதபு இல்லாதவர்கள் தலைமைக்காரரா கிறதும், ஆண் பிள்ளைகளுடனே ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைக ளுடனே பெண் பிள்ளைகளும், ஷஹ்வத்தை நடப்பிக்கிறதும், பள்ளி வாசல்களில் விளையாடுகிறதும், மனிதர்கள் ஒருவரை யொருவர் சந்தித் தால் சலாஞ் சொல்லுகிறதற்குப் பகரமாகத் திட்டிக் கொள்ளுகிறதும், விளையாடிக் கொள்ளுகிறதும் இல்மு குறைந்து போகிறதும், பொய் சொல்லுகிறதை ஹிக்குமத்தாக எண்ணிக் கொள்ளுகிறதும், மனிதர்க ளுடைய கல்பை விட்டும் அமானதம் தூரப்பட்டுப் போகிறதும், பாசிக் கான கெட்ட நடத்தை யுடையவர்கள் இல்மு படிக்கிறதும், வெட்கந் தூரப்பட்டுப் போகிறதும், நாலா புறத்தாலேயும் இஸ்லாமானவர்கள் பேரிலே காபிரானவர்கள் மேலிட்டிருக்கிறதும், மனிதர்களுக்குக் காவற்பாடு, கார்மானங் கிடையாமற் போகுமென்னத்தக்க மிகுதியாகிய அனந்தங்களுண்டாகிறதும், பாத்திலான மதஹபுகளையும், பொய்யான ஹதீதுகளையுங், கெட்ட பிதுஅத்தாகிற நடத்தைகளையும், ஆதத்தாக எடுத்து நடக்கிறதும் இந்த அடையாளங்க ளெல்லா முண்டான வேளையில் நசாறாவுடைய கௌமுகள் மேலிட்டு வெகு ராஜ்ஜியங்களை ஆளுவார்கள். அப்படி யிருக்க,

சிறிது காலத்திற்குப் பிறகு அறபு தேசத்திலுள்ள அபூசுபியா னுடைய பிச்சளத்தில் ஒரு மனிதனுண்டாகி ஷாமு தேசத்திலுள்ள ஸெய்துமார்களை யெல்லாம் வெட்டுவான். அவனுடைய அனியாயம்

ஷாமு தேசத்திலும், மிசுறு தேசத்திலும், பிரசங்கமாகும். அப்போது றூம் பாத்ஷாவுக்கும், நசாறுவுடைய கூட்டத்தில் நின்றுமொரு கூட்டத்தாருக்கும் சண்டை யுண்டாகும். மற்றொரு கூட்டத்தாருடனே பாத்ஷா சுல்ஹாகவிருப்பார். பகையர்கள் காலிபாய் றூமைப்பிடித்துக் கொள்வார்கள். பாத்ஷா றூமைவிட்டும் ஷாமுக்கு வந்துவிடுவார். நசாறுக்களிலே சேர்ந்திருக்கிற கூட்டத்தாருடனே பாத்துஷாவுக்கும் பகையராகிய கூட்டத்தாருக்கும் கடிசாகிய சண்டை யுண்டாகி இஸ்லாத்துடைய கூட்டத்தார் பத்துக் கூட்டமாகிய பகையர்கள் முடிந்து போனதற்குப் பின்னாலே பாத்துஷாவுடனே சேர்ந்த நசாறுவுடைய கூட்டத்தாரில் ஒருவன் குறுசென்பவன் மேலிட்டுப் பத்துக் கூட்டமாக்கி வைத்ததென்று சொல்லுவான். அப்போது இஸ்லாமானவர்களில் ஒருவன் அவனை யடித்து இஸ்லாத்துடைய தீன் மேலிட்டதென்று சொல்லுவான். அப்போது இஸ்லாமானவர்கள் இஸ்லாமானவருடனே நசாறுக்கள் நசாறுவுடனே கூடி அந்தப்படியிலேயே ஒருவர்க்கொருவர் சண்டை செய்வார்கள். அதிலே பாத்துஷா ஷஹீதாவார்கள். அந்த நசாறுக்கள் பகையாகிய நசாறுக்களுடனே கூடிக்கொண்டு ஷாமு தேசத்தையும் ஆள்வார்கள். மிச்ச முண்டான இஸ்லாமானவர்கள் மதீனத்துக்கு வந்துவிடுவார்கள். மதீனத்துக்கு அடுத்தாமையாக விருக்கிற கைபறென்னுந் தலம் வரைக்கும் நசாறுக்களுடைய அமலாக விருக்கும்.

அப்போது இஸ்லாமானவர்கள் அந்த பலாயில் நின்றுந் தட்டுண்டு போகிறதற்கு இமாம் மஹ்தி றலியல்லாஹு அன்ஹுவைத் தேடிக்கொண்டிருப்பார்கள். அந்த வேளையில் இமாம் மஹ்தி றலியல்லாஹு அன்ஹு மதீனத்திலிருப்பார்கள். இந்த வலுப்பமான காரியத்துக்குத் தாம்லகிபானவருக்கு மனிதர்கள் வருத்தங் கொடுப்பார்களென்று பயந்து மதீனத்திலிருந்து மக்கத்துக்குப் போவார்கள். அந்தக் காலத்திலுள்ள பெரிய பெரிய அப்தாலாகிய அவுலியாக்களும் மற்றுமுண்டான அவுலியாக்களும், இமாம், மஹ்தி றலியல்லாஹு அன்ஹுவைத் தேடிக்கொண்டிருப்பார்கள்.

சிறிதுபேர்கள் நான்தான் மஹ்தி யென்று பொய்த் தக்குவாச் செய்வார்கள். அப்போது இமாம், மஹ்தி றலியல்லாஹு அன்ஹு கஃபாவில் இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாத்துடைய மகாமுக்கும், றுக்குனுக்கும் இடையிலே தவாபு செய்துகொண்டிருப்பார்கள். அப்போது

சிறிது பேர்கள் அவரைக் கண்டுபிடித்து இவர்கள்தான் இமாம் மஹ்தி றலியல்லாஹு அன்ஹு வென்றறிந்து, வலுத்து காரராகப் பட்டங் கொடுப்பார்கள். அந்த விசளத்துக்கு அடையாளம் இதற்கு முன்னுலே சென்றுபோன றமலான் மாதத்திலேயே பொழுது நிலவுடைய கிரா ணம் இரண்டு மூன்ருகும். இமாம், மஹ்தி றலியல்லாஹு அன்ஹுக் குப் பட்டம் கொடுக்கிறபோது வானத்திலிருந்து ஒரு சப்தமுண்டா கும். அதென்னவெனில். இவீர் அல்லாஹுத் தஆலாவுடைய கலிபா வாகிய மஹ்தி றலியல்லாஹு அன்ஹுவாக இருக்கும். ஆனதால் அவருடைய சொல்லைக்கேட்டு வழிப்படுங்களென்றுண்டாகும். அந்தச் சப்தம் அவ்விடத்திலுள்ள பெரிய மனிதர்கள், அவாம் கல்குகளெல்லா ருங் கேட்பார்கள். இமாம், மஹ்தி றலியல்லாஹு அன்ஹு, பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவுடைய பிச்சளத்திலுள்ள ஸெய்துமார்களி லுள்ளவராயும், உயர்ந்தவராயும், நடுத்தரமான டருப்பத்தை யுடைய வராயும், தெளிவான நிறத்தை யுடையவராயு மிருப்பார்; அவருடைய முகமாகிறது, நம்முடைய நாயகம் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய திருமுகத்துக்குச் சமானமாக விராது. என்கிலும் அவருடைய குணமாகிறது அவர்களுடைய குணத்திற்குச் சமானமாக விருக்கும். அவருடைய பெயர் முஹம்மது, அவருடைய தகப்பனர் பெயர் அப்துல்லா; அவருடைய தாயார் பெயர் ஆமினு, அவருடைய நாவிலே கொஞ்சம் தொத்தலுண்டா யிருக்கும். அவர் பேசுகிறபோது ஒரு வேளை பேச்சு வராமற்றங்குமானல், கையைத் துடையிலடிப்பார். அவருடைய இல்மாகிறது படிக்காமல் வந்ததாக விருக்கும். இவ்விதமான இமாம் மஹ்தி றலியல்லாஹு அன்ஹுக் குப் பட்டமுண்டானது தேசங்களிற் பிரசங்கமாகும்.

அப்போது மதீனத்திலுண்டான கூட்டமெல்லாம் மக்கத் துக்கு வருவார்கள். ஷாம்-இராக்கு-எமன் இந்த இராஜ்ஜியத்தி லுள்ள பெரிய பெரிய அப்தாலாகிய அவ்லியாக்களும் மற்றுமுண் டாகிய அவுலியாக்களும் அவருடைய கிதுமத்தில் வருவார்கள். அறபியர்களும் வெகுபேர்கள் கூட்டங் கூட்டமாக வருவார்கள். கஃபாவிலே தாஜுல் கஃபாவென்று சொல்லப்பட்ட இடத்தில் முன் னுலே புதைத்திருந்த கஸானுவென்னும் புதையல்களை யெல்லாம் மஹ்தி றலியல்லாஹு அன்ஹுக் குதவி செய்கிறதற்கு வருவார். அப்போது பாதையில் மிகுதியான நசாறுக்கள் பதவிகளை வெட்டிக்

கருவறுத்துப் போடுவார்கள். ஸெய்யிதுமார்களுக்குப் பகைவனுகிய சுபியானுடைய பிச்சளத்திலுள்ள அந்த மூதேவியானவன் மஹ்றி றலியல்லாஹு அன்ஹு பேரிலே சண்டை செய்கிறதற்கு மிகுதியான பேர்களை யனுப்பி வைப்பான். அந்தக் கூட்டமாகிறது மக்கத்துக்கும், மதீனத்துக்கு மிடையிலிருக்கிற மைதானிலொருமலைக்கு அருகாமையாக வந்து இறங்குவார்கள். அப்போது அவர்களடங்கலும் பூமியிலே சொரிய வாங்கப்பட்டுப் போவார்கள். ஆகிறத்தில் அவரவர்களுடைய நிண்ணயப்படிக்கு எழுப்பப்படும். அப்போது அந்தக் கூட்டத்திலுள்ள நன்மையான பேர்கள், தீமையான பேர்களில் இரண்டு பேர்கள் தவிர மற்றொருவரும் தப்ப மாட்டார்கள். அதிலொருவன் அந்தச் செய்தியை மஹ்றிறலியல்லாஹு அன்ஹுக்கு அறிவிப்பான். அந்தச்சுபியான் பிச்சளத்திலுள்ள மூதேவிக்கும் நசாறுக்களுக்கும், அறிவிப்பான். இவர்கள் நாலா புறத்தாலும் றூமிலிருக்கிற பேர்களையும், கூட்டங்களையுஞ் சேர்த்துக் கொண்டு மஹ்றி றலியல்லாஹு அன்ஹுடனே சண்டை செய்கிறதற்கு வருவார்கள். வருகிற நசாறுக்களுடைய கூட்டங்களுக்கு 80-கொடி யுண்டாயிருக்கும். அதில் ஒவ்வொரு கொடியின் கீழே பன்னீராயிரம் பேர்க ளிருப்பார்கள்.

பின்னர், மஹ்றிறலியல்லாஹு அன்ஹு மக்கத்தை விட்டும் புறப்பட்டு மதீனத்துக்கு வந்து ஸியாறத்துச் செய்துக்கொண்டு ஷாமுக்குப் போகிறபோது திமிசுக்கென்கிற பட்டணத்துக்கு வருவார்கள். அப்போது மறுபக்கத்திலிருந்து மிகுதியாக நசாறுக்கள் சண்டை செய்கிறதற்கு வந்து நேரிடுவார்கள். அப்போது மஹ்றி றலியல்லாஹு அன்ஹுடைய கூட்டத்தார் மூன்று பிரிவாயும், சிறிது பேர்கள் நசாறுக்களுக்குப் பயந்து அவர்களுடைய படையை விட்டும் அப்புற மோடிப்போவார்கள். அல்லாஹுத் தஆலா அவர்களுடைய தௌபாவை ஒருபோதும் கபூல் செய்ய மாட்டான். சிறிது பேர்கள் மஹ்றி றலியல்லாஹு அன்ஹுடனே யிருந்து நசாறுக்களுடனே சண்டை செய்கிறபோது சிறிது பேர் ஷஹீதாய்ப் போவார்கள். அவர்களுக்கு பதுறுப்படை உஹதுப் படையில் ஷஹீதான ஷஹீதுகளுடைய தவாபு கிடைக்கும். சிறிது பேர்கள் பத்ஹு செய்து அல்லாஹுத் தஆலாவுடைய வுதவியினலே பித்னவழி கேட்டில் அகப்படாமல் சலாமத்தாக இருப்பார்கள். அப்போது மஹ்றி றலியல்லாஹு அன்ஹு நசாறுக்களுடைய பெரிய கூட்டத்துடனே

சண்டை செய்கிறதற்கு மனிதர்களை மிகுதியாகச் சேர்த்துக்கொண்டு போவார்கள். அந்தப்படையில் ஒரு பெரிய கூட்டத்தார் நசாறுக்களுடனே பத்துஹு செய்யாமற் திரும்புகிறதில்லை யென்று சத்தியஞ் செய்து மஹ்தி றலியல்லாஹு அன்ஹுடனே போய் நசாறுக்கள் கூடச் சண்டை செய்து ஷஹீதாய்ப் போவார்கள். பின்னர், மஹ்தி றலியல்லாஹு அன்ஹு கொஞ்சம் பேருடனே படையில் வந்து சேருவார்கள்: மறுநாளும் ஸுபுஹிலே ஒரு பெரிய கூட்டத்தார் பத்துஹு செய்யாமற் திரும்புகிறதில்லை யென்று சத்தியஞ் செய்து மஹ்திறலியல்லாஹு அன்ஹுடனே போய் நசாறுக்களுடனே சண்டை செய்து ஷஹீதாய்ப் போவார்கள். அப்போது மஹ்தி றலியல்லாஹு அன்ஹு மக்றிபுநேரங் கொஞ்சம் பேர்களுடனே படைக் கூடாரங்களிலே வந்து சேர்வார்கள். மூன்றும் நாளும் மிகுதியான பேர்கள் சத்தியத்துடனே சண்டை செய்து ஷஹீதாய்ப் போவார்கள். பின்னர் மஹ்தி றலியல்லாஹு அன்ஹு கொஞ்சப் பேருடனே தங்களுடைய கூடாரங்களில் வந்து சேர்வார்கள். நாலா நாட்கூடாரங்களிற் காவலாயிருந்த சிறிது பேர்களுடனே போய் மஹ்தி றலியல் லாஹு அன்ஹு சண்டை செய்வார்கள். அன்றைத் தினம் அல்லாஹுத் தஆலா இவர்களுக்கு நிறப்பமான பத்துஹைக் கொடுப்பான். அப்போது நசாறுக்களில் மிகுதியான பேர்களை வெட்டிப் போடுவார்கள். அவர்கள் மிகுந்த பேர்களில் ஒருவன் தலைமையாகவிருந்தும் படை செய்கிறதற்குச் சக்தியில்லாமல் விரண்டோடிப் போவார்கள். அப்போது மஹ்தி றலியல்லாஹு அன்ஹு பத்ஹு செய்த பேர்களுக்கு மிகுதியான இனும் என்னும் வெகுமதி பங்கிட்டுக் கொடுப்பார்கள். ஆனுல் இவர்களில் மிகுதிபேர்கள் ஷஹீதாய் போய்க் கொஞ்சம் பேர்கள் மீந்திருப்பார்கள். அதனல் அந்த இனும்கள் தௌலத்துகளைக் கொண்டு அவர்களுக்கு சந்தோஷ முண்டாக மாட்டாது.

பிறகு, மஹ்தி றலியல்லாஹு அன்ஹு இஸ்லாமாகிய பட்டணங்களைக் கெட்டி பத்திரஞ் செய்து கொண்டு மனிதர்களுடைய ஹக்குகளை வாங்கிக் கொடுத்துக் கொண்டு அது காரியத்திற் பராக்காகவிருந்து நாலா புறத்திலும் பௌதிகளனுப்பி வைப்பார்' அவர்களுக்கு கணக்கிலகப்படாத மிகுதி இனும்கள் கொடுப்பார்; அந்தக் காரியங்களை விட்டும் பராக் கொழிந்ததற்குப் பிறகு, மஹ்தி றலியல்லாஹு

அன்ஹு இஸ்தம்பூலே பத்துஹு செய்ய வேணு மென்று நாடி யூம் கடலோரம் வருவார். அப்போது பனியிசுஹாக்குக் கிளையில் 70,000 பேர்கள் கப்பலேறி இஸ்தம்பூலே பத்துஹு செய்கிறதற்கு மஹ்தி றலியல்லாஹு அன்ஹுக்கு உதவியாக வருவார்கள். அப்போதந்த கூட்டத்தார், அந்த ஊருடைய கோட்டை மதில்களுக்கு நேராய் நின்று கொண்டு உயர்த்தியான சத்தத்துடனே தக்பீறு சொல்வார்கள். சொன்ன போது அல்லாஹு தஆலாவுடைய திருநாமத்துதவியினுலே யவர்களுக்கு நேராக விருக்கப்பட்ட மதில்தானுக யிடிந்து விழும். இப்படி யிடிந்து விழுந்த மதிலிடம் பாதையாகக் கொண்டு இஸ்லாமானவர்கள் அந்த ஊருக்குள்ளே புகுந்து காபிரானவர்களை எல்லாம் வெட்டிக் கருவருத்து அங்கே யிருப்பவர்களை நெறி நீதமாக நடப்பித்து கொண்டிருப்பார்கள். இவ்விதம் மஹ்தி றலியல்லாஹு அன்ஹு வெளியான நாள் முதல் அந்த பத்துஹு வரைக்கும் 6, 7 வருஷம் சென்றிருக்கும்.

இவ்விதம் மஹ்தி றலியல்லாஹு அன்ஹு அந்த ஊரைக் கெட்டி பத்திரஞ்செய்து கொண்டிருக்கிற போது சிலர்கள் வந்து அவர்களோடும் நீங்கள் இவ்விடத்தி லிருக்கிறீர்களே தஜ்ஜால் வெளியாகி உங்கள் பேரில் பித்துனுபிதுஅத்துகள் செய்து கொண்டு வருகிறு னென்ற விசளம் சொல்வார்கள். அது கேட்டுடனே மஹ்தி றலியல்லாஹு அன்ஹு ஷாமுக்கு போகிறவர்களோடுந் தஜ்ஜாலுடைய விசளம் தஹ்கீக்கு செய்கிறதற்காக 9-குதிரைக்காரரை படைக்கு முன்னுலே போகும் படியாய் அனுப்பி வைப்பார். அவர்கள் இன்னும் தஜ்ஜால் வெளியாக வில்லை யென்கிற விசளம் தஹ்கீக்கு செய்து மஹ்தி றலியல் லாஹு அன்ஹுடைய படை தீவிரமாகப் போகிறதை நிறுத்தி மெதுவாகப் போகும்படி சொல்லுவார்கள். அது கேட்டவர்கள் மஹ்தி றலியல்லாஹு அன்ஹுடைய விசாரணை செய்து கொண்டு போவார்கள். சிறிது நாளைக்குப் பிறகு தஜ்ஜால் வெளியாவான். தஜ்ஜாலாகிறவன் எஹுதிகளுடைய கௌமிலுள்ளவன், அவனுக்கு பட்டப்பேர் மசிஹு, வலது கண் பொட்டையாய்க் கொடி முந்திரிப் பழம் போலே புறப் பட்டுக் கொண்டிருக்கும், அவன் ஏறுவாகனம் ஓர் பெரிய கழுதை; அவன் ஷாமுக்கும் இறுக்குக்கு மிடையில் முதல் வெளியாவான். அவ்விடத்திலே நபிப் பட்டத்ஸதக் கொண்டு தாவாச் செய்வான். அவனுக்கு வலது புறமும் இடது புறமுமாய் பிசாசுகளதிகமாகும்.

மிகுதியான தேசங்க ளெல்லாம் பிடித்துக் கொள்வான், மிகுதியான பேர்கள் அவனை நாயனென்கிறதாய் நிண்ணயங் கொள்வார்கள். அல்லாஹு தஆலா அவனுடைய அடியார்களைச் சோதிக்கிறதற்காக அவனுடைய கையைக் கொண்டு மிகுதியும் வலுப்பமாகிய கருமத்துகளை வெளியாக்குவான். என்கிலும் அவனுடைய நெற்றியில் காபிரென் றெழுதி வெவ்வேறாக இந்தப் படிக்கு இன்னானென் றெழுதி யிருக்கும். அதை ஈமானுள்ள இஸ்லாமானவர்கள் அடங்கலுக்கும் பிரசங்கமாகத் தெரியும். அதை ஓதினவர்கள் ஓதாதவர்கள் எல்லாரும் படிப்பார்கள். ஈமானில்லாதவர்களறிய மாட்டார்கள்.

அவனுடனே ஒரு பெரிய நெருப்பிருக்கும், அதில் நரக மென்றோர் பெரிய தோட்ட மிருக்கும். அதை யவன் சுவர்க்க மென்றுஞ் சொல்வான். அவனுக்கு வழிபடாத பேர்களை நெருப்பிற் போடுவான், வழிபட்டவர்களை தோட்டத்தில் விடுவான். அந்த நெருப்பாகிறது உள்ளரங்கத்திற் குளிர்ந்த காற்றையுடைய தோட்டமும்' அந்தத் தோட்டமாகிறது சூடாகிய நெருப்புமாக விருக்கும். அவனுடனே சில ரொட்டிகளும் தண்ணீரு மிருக்கும், அதை யவனுடைன சில பேர்களுக்குக் கொடுப்பான். சில பேர்களுக்குக் கொடுக்க மாட்டான். அவனை நாயனென்கிறதாய் ஒரு கூட்டத்தார் நிண்ணயங் கொண்டால் மேகத்தை மழை பெய் யென்கிறதாயும், பூமியைப் பயிருண்டா கென் கிறதாயும், மரங்களைப் பழமுண்டா கென்கிறதாயும், ஆடு மாடுகளை மாங்கிஷம் பாலுண்டா கென்கிறதாயும் சொல்வான். உடனே யவன் சொன்ன படிக்குண்டாகும். ஒரு கூட்டத்தார் அவனுக்கு வழிப்படாமற் போனால் மழை, பயிர், பழ வர்க்கம், பால் இவைகளைக் கட்டுப்பண்ணிப் போடுவான்.

ஆடு மாடுகளும் மெலிந்து போகும், தஜ்ஜால் வெளியாகிற தற்கு முன்னே 2-வருஷம் பஞ்சமாக விருந்து 3-வருஷம் அதிக மான பஞ்சத்தையுடையதா யிருக்கும். பூமிக்குள் ளிருக்கிற கசா னுக்களை வெளியே வாவென்று சொல்வான். உடனே அது தானாய் வெளியே வந்து அவனுடனே போகும். சிறிதுபேர்களைப் பார்த்து நானுங்கள் தகப்பன் மார்களை கபுறிலிருந்து எழுப்பி நான் நாயனென்கிறதாய்ச் சாட்சி சொல்லும்படியாய்ப் பண்ணிவைக்கிறே னென்று சொல்லிச் சைத்தான்களை மனிதருடைய ஸூறத்துக் கொண்டு வரும்படியா யேவுவான். அதுக ளந்தப்படிக்கு வந்து

சொல்லும். இந்தப்படி இஸ்லாமானவர்களுக்கு வகை வகையான நோவினையை யுண்டாக்கிவைப்பான். அல்லாஹுத் தஆலாவுடைய வருசையினாலே தசுபீஹும் தஹ்லீலும் இஸ்லாமானவர்களுக்கு ரொட்டியுந் தண்ணீருமாகும். தாகம் பசியுடைய அதாபு அவர்களுக்கு உண்டாகமாட்டாது. அந்தப்படிக்கு மிகுதியான தேசங்களைப் பிடித்துக் கொண்டு எமனுக்கு வந்து சேர்வான். நாலாபுறத்திலிருந்து முறுத்தத்தான காபிரான பேர்களை மிகுதியாகக் கூட்டிக் கொண்டு மக்கத்துக்குக் கடுத்தாப்போல் வந்திறங்குவான், மக்கத்தில் மலாயிக்கத்துடைய காவலினாலேயவன் புகுதுகிறதற்குச் சக்திபெறுமல் மதீனத்துக்குப் போவோமென்று புறப்பட்டு வருவான். வரும்போது மதீனத்துக்கு எழு வாசற்படி யுண்டாயிருக்கும், அல்லாஹுத் தஆலா ஒவ்வொரு வாசற்படியிலுருவின கத்தியுடனே இரண்டிரண்டு மலாயிக்கத்துகளை அனுப்பி வைப்பான், அவர்கள் தஜ்ஜாலுடைய கூட்டத்தாரை பட்டணத்துக்குள் வரவொட்டாமற் றுரத்துவார்கள். அப்போது மதீனத்திலே மூன்று தரம் பூமி குலுங்கும், அதனால் அங்குள்ளவர்களில் மனதிலே முனாபிக்குத்தனங்கொண்டு கெட்ட நிண்ணயமுடையவர்கள் குலுங்குதலைப் பயந்து மதீனத்துக்கு வெளியே வந்து தஜ்ஜாலுடைய தீங்கிலகப்பட்டு அவனுடனே சேர்ந்து போவார்கள்.

அப்போது, மதீனத்திலிருக்கும் ஒரு பெரியவராகிய வாலிபகாரர் தஜ்ஜாலுடனே தர்க்கம் பண்ணுகிறதற்காக வெளியே வருவார். தஜ்ஜாலுடைய படைக்குக் கிட்டப்போனவுடனே தஜ்ஜாலெங்கேயிருக்கிறானென்று கேட்பார். அவனுடைய கூட்டத்தாரிற் சிறிது பேர் இவருடைய பெருமையான சொல்லைப்பார்த்து வெட்டிப்போடவேணுமென்று நாடுவார்கள். அப்படி நாடினவர்களைச் சிலர்கள் பார்த்து உங்களுடைய நாயன் தஜ்ஜால் தன்னுத்திரவில்லாமல் ஒருத்தரையும் வெட்டவேண்டா மென்று உங்களை விலக்கினது நினைவில்லையா வென்று விலக்குவார்கள். அப்போதவர்கள் தஜ்ஜாலிடத்திற்போ யிந்தப் பெரியோருடைய செய்தியைச் சொல்லுவார்கள். அது கேட்டுத் தஜ்ஜாலவரைத் தன்னிடத்திலழைப்பான். அவர் தஜ்ஜாலைக் கண்டவுடனே நம்முடைய நாயகம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் உன்னுடைய அஹ்வால்களைக் கொண்டும், அகியாய வழிக்கேட்டைக்கொண்டும் எங்களுக்கு விசளமறிவித்தார்

களே அந்த மல்ஊனுகிய தஜ்ஜால் நீயாக விருக்கு மென்று சொல்லுவார்.

அது கேட்டுத் தஜ்ஜால் கோபமாய் வாளைக்கொண்டு அவரை இரண்டு பிளப்பாக பிளந்து ஒரு பிளப்பை அவனுக்கு வலது புறமும் மற்றொரு பிளப்பை இடதுபுறமும் போடும்படியாய் உத்திரவு செய்வான். அந்தப்படி செய்த தற்குப் பின்னுலே யந்த விரண்டு பிளப்புக்கு மிடையிலே நடந்து அப்புறம்போய்த் தன்னுடைய கூட்டத்தாரிற் பெரிய மனிதர்களையும் பார்த்து நானிந்த மனிதனை மறுபடியும் ஹயாத்தாக எழுப்பினுல் உங்கள் மனதில் நான் நாயனென்கிறது கெட்டியால் எகீனுகுமோ அல்லது சந்தேகப்படுமா வென்று கேட்பான். அதற்கவர்கள் எப்போதும் எங்கள் மனதில் சந்தேகமில்லை. அப்படிச் செய்தால் எகீன் பெலமாகுமென்று சொல்லுவார்கள். அப்போதிரண்டு பிளப்பையு மொன்றுகச் சேர்த்து ஹயாத்தாகென்று சொல்லுவான், அல்லாஹுத் தஆலாவுடைய நாட்டப்படிக்கு அவர் ஹயாத்தாகித் தஜ்ஜாலைப் பார்த்து நம்முடைய நாயகம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எங்களுக்கு உன்னைக்கொண்டு விசளம் அறிவித்தார் களே அந்த மல்ஊனுகிய தஜ்ஜால் நீயாக விருக்குமென்று சொல்வார். அது கேட்டுத் தஜ்ஜால் மெத்தவும் கோபமாய் அவருடைய கழுத்தை யறுக்கும்படியாய் உத்திரவு செய்வான். அதுபோலே அவனுடைய ஏவலோர்கள் செய்வார்கள். அவருடைய கழுத்திற் கத்தி கொஞ்சம் அறுத்தலைச் செய்யமாட்டாது. அதனுல் தஜ்ஜால் வெட்கங்கெட்டு அவரை வெளியரங்கம் நெருப்பும், உள்ளரங்கம் குளிர்ந்த காற்றையுமுடைய தோட்டமுமாகவிருக்கின்ற அவனுடைய நெருப்பிற் போடுவான். அதற்குப் பின்னுலே மையத்துகளை யெழுப்புகிறதற்குத் தஜ்ஜாலுக்குச் சக்தி யிருக்கமாட்டாது.

பிறகு, அவ்விடத்திருந்து தஜ்ஜால் ஷாமு தேசத்தை நாடி வருகிறபோது, திமஸ்க்குக் கடுத்தாமையாக வருவான், அப்போது இமாம் மஹ்தி றலியல்லாஹு அன்ஹு திமஸ்கிற் படையுடைய சாமான்கள் செய்து மனிதர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துக் கொண்டு அது காரியத்திற் பராக்காக விருப்பார்கள். அப்போது முஅத்தீன் அஸறுடைய தொழுகைக்கு பாங்கு சொல்வார். சொல்லும் போது மனிதர்கள் தொழுகைக்கு ஆயத்தப்படுவார்கள். அவ்வேளையில் ஈஸா அலைஹிஸ்ஸலாம் இரண்டு மலாயிக்கத்துகளுடைய

தோளின் பேரில் சாய்ந்து கொண்டு அவ்விடத்திலுள்ள ஜும்ஆப் பள்ளியில் மஷ்ரிகுப் புறமிருக்கிற மனாறவில் வந்திறங்கி யேணி கொண்டு வாருங்க ளென்று மனிதர்களைக் கூப்பிட்டுச் சொல்வார்கள். மனிதர்கள் கொண்டு வந்து வைப்பார்கள். அதின் பேரில் ஈஸா அலை ஹிஸ்ஸலாம் கீழே யிறங்கி மஹ்தி றலியல்லாஹு அன்ஹுடனே சந்திப்பார்கள். மஹ்தி றலியல்லாஹு அன்ஹு ஈஸா அலைஹிஸ்ஸலா முக்கு மெத்தவும் தஃலீம் செய்து அல்லாஹுடைய நபியே! தாங்கள் முன்னாலே நின்று இமாமத்துச் செய்யுங்களென்று சொல்வார். அது கேட்டு ஈஸா நபி யவர்கள் மஹ்தி றலியல்லாஹு அன்ஹுவைப் பார்த்து உங்களிலே சிறிது பேருக்குச் சிறிதுபேர் இமாமாக விருக்கிறது கொண்டு அல்லாஹு தஆலா இந்த உம்மத்துக்களுக்குச் சங்கை செய்திருக்கிற படியினாலே நீரே இமாமத்துச் செய்யுமென்று சொல்வார்.

பிறகு மஹ்தி றலியல்லாஹு அன்ஹு இமாமத்துச் செய்வார். அப்போது ஈஸா அலைஹிஸ்ஸலாம் மௌமூமாகத் தொழுவார். தொழுது தீர்ந்த பிறகு மஹ்தி றலியல்லாஹு அன்ஹு ஈஸா அலை ஹிஸ்ஸலா மவர்களைப் பார்த்து அல்லாவுடைய நபியே! தாங்க ளெந்தபடிக்கு நாடுகிறீர்களோ அந்தப்படி படைகளைத் தங்கள் கையைக் கொண்டு ஆயத்தப் படுத்த வேணு மென்று சொல்வார். அது கேட்டு ஈஸா அலைஹிஸ்ஸலாம் மஹ்தி றலியல்லாஹு அன்ஹுவைப் பார்த்து அது என்னுடைய வேலையல்ல, என்கினும் உங்களுடைய வேலையாக விருக்கும், நான் தஜ்ஜாலை வெட்டுகிறதற்காக வந்தேன். அவனை யென்னுடைய கையைக் கொண்டு வெட்டும் படியாய் அல்லாஹு தஆலா தக்தீர் செய்திருக்கிறா னென்று சொல்வார்கள். பிறகு இரவு போய் சுபுஹாகும். அப்போது மஹ்தி றலியல்லாஹு அன்ஹு படைகளைக் கூட்டிக் கொண்டு சண்டைக்குப் போவார்கள். ஈஸா அலைஹிஸ்ஸலாம் எனக்கு குதிரை கொண்டு வாருங்கள், வல்லைய மொன்றை என் கையிற் கொடுங்கள், அந்த காபிரை ஹலாக்காகிப் போட வேண்டு மென்று சொல்லி யந்த படையி லிருந்து புறப்பட்டுத் தஜ்ஜாலை நாடிப் போவார்கள். இஸ்லாமானவர்கள் தஜ்ஜாலுடைய படையுடனே சண்டை செய்வார்கள். அந்த வேளை ஈஸா அலைஹிஸ்ஸ லாத்துடைய மூச்சானது பார்வை யெத்தனை தூரம் விழுகிறதோ அத்தனை தூரம் விழுகிறதா யிருக்கும். ஈஸா அலைஹிஸ்ஸலாத்துடைய மூச்சு எந்தக் காபிரானவன் பேரிற் படுகிறதோ அவன் உடனே யழிந்து

பனுவாகப் போவான். தஜ்ஜால் ஈஸா அலைஹிஸ்ஸலாமைப் பார்த்த வுடனே விரண்டோடுவான். ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவனைத் துரத்து வார்கள். பாபுலதி யென்று சொல்லப்பட்ட தலத்தில் ஈஸா அலை ஹிஸ்ஸலாம் தஜ்ஜாலைப் பிடித்து அவனைத் தங்களுடைய வல்லை யத்தைக் கொண்டு காயப்படுத்தி இரத்தத்தை மனிதர்களுக்குக் காண்பிப்பார்கள்.

அவனை ஹலாக்காகிறதில் ஈஸா அலைஹிஸ்ஸலாம் தீவிரமாக மாட்டார்கள். என்கிலும், அவர்களுடைய மூச்சைக் கொண்டு தண்ணீரி லுப்புக்கரைகிறுப் போலே தஜ்ஜால் கரைந்து போவான். இஸ்லாமானவர்களுடைய படையும், தஜ்ஜாலுடைய படையும் சண்டை செய்வதிலே, தஜ்ஜாலுடைய படை முறிந்து அவனுடைய படையி லுள்ள எஹூதிகளானவர்கள் மரங்களுக்குப் பின்னுலே யொளிக்கப் போவார்கள்! அப்போதந்தக் கல்லுகள், மரங்கள் அல்லாஹுதஆலா வுடைய அடியார்களே! இங்கே எஹூதிக ளிருக்கிருர்க ளென்று கூப்பிட்டுச் சொல்லுங்கள்; அது கேட்டுடனே யவர்களைப் பிடித்துக் கொன்று விடுவார்கள். கறுகா வென்கிற மரம்மட்டும் எஹூதிகளுக் குதவி செய்யும், அவர்களைக் காண்பிக்க மாட்டாது. பூமியிலே தஜ்ஜா லிந்தப் பஸாதுகளைச் செய்துக் கொண்டு நாற்பது நாள் வரைக்கு மிருப்பான். அதிலொரு நாள் ஒரு வருஷம் போலேயும், ஒரு நாள் ஒரு மாதம் போலேயும், ஒரு நாள் ஒரு கிழமை போலேயும், மற்ற நாள்கள் நாள்களை போலேயு மிருக்கும். இதை குறித்துச் சில ஹதீது வந்திருக் கிறது. அந்த நாள்களிப்படி நீளமாக விருக்கிறது. அல்லாஹுதஆலா தஜ்ஜாலுக்குக் கொடுத்த வேண்டுதலாக விருக்கும். அந்த மல்ஊன் பொழுதைத் தடுத்துக் கொள்ளும்படி நாடுவான். அல்லாஹு தஆலா அவனுடைய குதறத்துக் கொண்டு அந்த மல்ஊனுடைய நாட்டத்தின் படிக்குப் பொழுதைத் தடுத்து வைப்பான். அசு ஹாபிகள் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மிடத்தில் ஒரு நாள் ஒரு வருஷம் போலா யிருந்தால் அந்த ஒரு நாளையில் ஒரு நாளுடைய தொழுகை தொழுகிறதா, அல்லது ஒரு வருஷத் துடைய தொழுகை தொழுகிறதா வென்று கேட்டார்கள். அதற்கு றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அந்த வேளையில் மனிதர்கள் தொழுகையை வகுத்த மட்டிக்கொண்டு ஒரு வருஷத் துடைய தொழுகை தொழவேண்டு மென்று திருவுளமானுர்கள்.

கஷ்புடைய பேர்களில் முஹியித்தீனிபுனி அறபி யென்கிற பெரியோர். அந்த நீளமாகிய நாளில் வானத்திலே பெருப்பமாகிய மேகஞ் சூழ்ந்திருக்கும்; வெளிச்சங் கொஞ்சமாயிருக்கும். அந்த நாளையிற் கடிசாகிய இருள் உண்டாகமாட்டாது. பொழுதுடைய வட்டமும் தெரியமாட்டாது. மனிதர்கள் நேரத்தை மட்டிட்டுக் கொண்டு ஷறஹுப்படிக்குத் தொழுதுகொண்டு வரவேண்டு மென்று தங்கள் கிதாபி லெழுதியிருக்கிறார்கள். தஜ்ஜாலுடைய காரியம் தீர்ந்து போனதற்குப் பின்னாலே மஹ்தி றலியல்லாஹு அன்ஹும், ஈஸா அலைஹிஸ்ஸலாமும், அந்த ஊர்களுக்குப் போய்த் தஜ்ஜாலுடைய அதாபிலே யகப்பட்ட பேர்களுக்குத் தேறுதல் சொல்வார்கள்.

அவனுடைய சபபினாலே துனியாவுடைய லொக்சானுண்டான இஸ்லாமானவர்களுக்குப் பிரயோஜன முண்டாக்கி வைக்கிறதுகொண்டு பொருந்துவார்கள். ஈஸா அலைஹிஸ்ஸலாம் கின்ஸீறுகளைக் கொன்று போடுகிறது கொண்டும், இராஜங்கத்தை யுடைத்துப் போடுகிறது கொண்டுங் காபிரான பேர்களிடத்திலே திறை கபூல் செய்யாமலிருக்கிறது கொண்டும், எல்லாரும் இஸ்லாமாக வேணுமென்றும், அப்படி இஸ்லாமாகாத பேர்களை வெட்டிப்போட வேணுமென்றும், நம்முடைய நாயகம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸலமுடைய ஷறஹுப் படிக்கு ஹுக்கும் செய்வார்கள். அப்போது எல்லாத் தேசத்திலும் இஸ்லாமானவர்களாக யிருப்பார்கள்.

அதே தவிர காபிரான பேர்கள் ஒருவரையுங் காணப்படாது. எல்லாத் தேசமும் மஹ்தி றலியல்லாஹு அன்ஹுடைய நெறி நீதத்தைக் கொண்டு நிரப்பப்பட்டிருக்கும். பசாதுகள் கியாயத்துடைய வேரைப் பிடுங்கப்பட்டுப் போயும் எல்லாரும் அல்லாஹுத் தஆலாவுடைய இபாதத்திலே மெத்தவும் பூணிப்பாக விருப்பார்கள். மஹ்தி றலியல்லாஹு அன்ஹுடைய கிலாபத்து நாள் எழு வருஷம், அல்லது எட்டு வருஷம், அல்லது ஒன்பது வருஷமாயிருக்கும். அதாகிறது எழு வருஷம் ரூஹத்தாக இருப்பார்கள். ஒரு வருஷம் தஜ்ஜாலுடனே படைசெய்து கொண்டிருப்பார்கள். ஒன்பதாம் வருஷம் ஈஸா அலைஹிஸ்ஸலாமுடனே சேர்ந்திருப்பார்கள். அந்தக் கணக்கின்படிக்கு இமாம் மஹ்தி றலியல்லாஹு அன்ஹுவுடைய வயதாகிறது நாற்பத்தொன்பதாகவிருக்கும். பிறகு மஹ்தி றலியல்லாஹு அன்ஹு உபாத்தாய் போவார்கள். ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்பேரில் ஜனுஸாவுடைய

தொழுகை தொழுது அவரை நல்லடக்கஞ் செய்வார்கள். பிறகு தேசத்துடைய காரியங்கள் ஈஸா அலைஹிஸ்ஸலாம் கையிலே சாட்டப் பட்டிருக்கும்.

அப்போது மனிதர்கள் மெத்தவும் சிதேவியான நடத்தையுடைய வர்களா யிருப்பார்கள். இருக்கும்போது அல்லாஹுத் தஆலா ஈஸா அலைஹிஸ்ஸலாத்திற்கு, 'என்னுடைய அடியார்களிற் சிறிது பேர் அவர்கள் பிறந்த தலத்தை வீட்டும் வெளியே வருகிறார்கள். உங்களி லொருவரு மவர்களுக் கிடு கொடுக்க மாட்டார்கள். ஆனபடியினால் இந்தச் சிதேவியான அடியார்களைத் தூறுஸினா என்கிற மலையிலே கார்மானப் படுத்திக் கொள்ளும்' என்று வஹி யனுப்பிவைப்பான். அந்த வஹியின் பிரகாரம் ஈஸா அலைஹிஸ்ஸலாம் தூறுஸினா என்கிற மலையிலிப்போ திருக்கிற கோட்டையில் மனிதர்களைக் கூட்டிக்கொண்டு போய் படை யுடைய அசுபாபுகளைச் செய்து கொண்டிருப்பார்கள்.

அப்போது யஃஜூஜு மஃஜூஜு சிக்கந்தருடைய அடப்பையிடித்து வெளியே வந்து எறும்புகள், கொசுகள் போல் நாலாபுரமும்போய் மொய்த்துக் கொள்வார்கள். அந்தக் கோட்டையைத் தவிர மற்றவிட மொன்று மவர்களை விட்டுத் தப்பமாட்டாது; வெட்டுகிறதிலும், ஹலாக்காக்கிறதிலும் கொஞ்சமும் பயப்பட மாட்டார்கள். அவர்கள் ஆதமுடைய மக்களில் நூஹு அலைஹிஸ்ஸலாத்துடைய மகன் யாபிதுடைய பிச்சளத்திலுள்ளவர்களாக விருக்கும். அவர்களுடைய தேசமாகிறது தேசங்களுக்கெல்லாம் வடபக்கத்தில் ஏழு மண்டலத் துக் கப்புரமாக விருக்கும். அவர்களுக்கு வடபுறம் பெருப்பமான கடலாயிருக்கும் அந்தக் கடலுடைய தண்ணீராகிறது குளிருடைய கடிசாய்த் தடிப்பமாக விருக்கும். அதினாலே கப்பல்கள் அக்கடலிலே போகிறதற்குக் கூடாது. அவர்களுக்கு மகரிபுப் புறத்தில் நின்று மோர் பெரிய மலை சுவர் போலே யுண்டா யிருக்கும். வெளியே வரு கிறதற்கும், உள்ளே போகிறதற்கும் பாதை யிருக்க மாட்டாது. அவர்களுக்குத் தென்புறத்திலே மெள்ள மெள்ளவாகத் தோண்டிக் கொண்டு வந்தார்கள். கொஞ்சம் பாக்கியிருந்தது. அப்போது சிக் கந்தர் துல்கறுனைன், அவ்விடத்திலே யிரும்பினாலே சுவர் போட்ட டைத்தார். அந்தச் சுவருடைய உயரம் மலையுடைய உயரமாகவும் அகலம் 60-முழமாகவும் இருக்கும். அந்த மூதேவிகள் அதை யெந் நேரமு மிடித்துக் கொண்டிருப்பார்கள்.

அல்லாஹுத் தஆலா அவனுடைய காவற்பாட்டாலிரவிலிடிந்து போனதை முன்னிருந்தது போலவே செம்மையாக்கிப் போடுவான். நம் நாயகம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லத்துடைய பெரு விரலுங், கலிமாவிரலுஞ் சேர்த்தா லெவ்வளவு வளையமுண்டாகுமோ அவ்வளவு பாதையுண்டாயிற்று. இதுவரையிலு மவர்களில் ஒருவன் வெளிப்படத்தக்க பாதையுண்டாக்கிக் கொள்ளவில்லை. அப்படி உண்டாக்கினல் அன்றையதினம் அந்தச் சுவரிடிந்து போகும், அவர்கள் வெளியே வருவார்கள், அவர்கள் மெத்தவும் பெருங்கூட்டத்தை யுடையவர்கள். தபுறுஸ்தானில் புஹைறு தபுரிய்யாவென்கிறதா யொருகுளம் நல்ல சவுக்கமாய் நாலாபுறமும் 7-அல்லது 10-காத முடையதாயும் அதிகமாக ஆழத்தையுடையதாயு மிருக்கு மென்னத் தக்க தடாகத்தில் அவர்களில் முந்தின கூட்டத்தார் வந்தவுடனே யதினுடைய தண்ணீரடங்கலும் குடித்து வற்றடித்துப் போடுவார்கள். இது முன்னலே தண்ணீரிருந்த தலமென்று சொல்வார்களே யல்லாம லொருதுளி தண்ணீரு மதிலிருக்கும்படியாய்க் காணமாட்டார்கள்.

அந்தப் பெருங் கூட்டத்தையுடைய மூதேவிகள் வகை வகையாகிய அநீதங்கள் செய்கிறதும், வெட்டுகிறதும் கொள்ளையிடுகிறதும் கடிசாகிய அதாபுகள் செய்கிறதும் மனிதர்கள் ஆடுமாடு பூச்சிபொட்டுகளைத் தின்கிறதைக்கொண்டும் பராக்காக விருப்பார்கள். அந்தப்படியே ஷாமுக்கும் வருவார்கள். அப்போது நாம் பூமியிலொரு வஸ்துவையும் பாக்கி வைக்கவில்லை. இனி வானத்திலிருக்கிற பேர்களை வெட்டிப்போட வேணுமென்று வானத்தைப்பார்த்து அம்புகளெறிவார்கள். அல்லாஹுத் தஆலா அந்த அம்புகளை யிரத்தக் கடலிலே வைத்துப் போடச் சொல்வான்.

அதைப்பார்த்து, மெத்தவும் சந்தோஷமாய் இப்போது நம்மைத் தவிர வொருவஸ்துவும் பாக்கியில்லையென்று சொல்வார்கள். அந்த பித்துனவுடைய காலத்தில் ஈஸா அலைஹிஸ்ஸலாத்துடனே யிருக்கின்ற இஸ்லாமானவர்கள் பேரிலொரு மாட்டினுடைய பால் நூறு தீனருக்கு விற்கும்படியான கடிசாகிய பஞ்ச முண்டாகும். அப்போது ஈஸா அலைஹிஸ்ஸலாம் துஆச்செய்வார்கள், அவருடனே யிருக்கிறவர்கள் பின்னலே யிருந்து ஆமீன் சொல்வார்கள். அல்லாஹுத் தஆலா நஃபென்கிற பலாயை யிறக்குவான். நஃபென்கிறது, மூக்கிலாவது கழுத்திலாவது ஒரு சிறிய தானியம் போலே கொப்புள முண்

டாகும். தாவூனைக் கொண்டு ஹலாக்காக்கிறது போல அது கொண்டு ஓரிரவிலேயே யந்தக் கூட்டமடங்கலும் ஹலாக்காக்கப்பட்டுச் செத்து போவார்கள்.

அந்தச்செய்தி ஈஸா அலைஹிஸ்ஸலாமறிந்து கோட்டையுடைய வாசற்படியைத் திறந்து மனிதர்களை வெளியிற்போய் அவருடைய ஹால்களைப் பார்க்கும்படியா யனுப்பிவைப்பார்கள். அவர்களுடைய விடக்குடைய கடிசாகிய நாற்றத்தைக் கொண்டு மனிதர்களுக்கு மெத்தவும் வருத்தமுண்டாகும். மறுபடியும் ஈஸா அலைஹிஸ்ஸலாம் துஆச் செய்வார்கள். மற்றபேர்கள் ஆமீன் சொல்வார்கள். அப்போது அல்லாஹு தஆலா நீளமாகிய கழுத்தையும், நீளமாகிய சடலத்தையுமுடைய அறபுப் பாஷையில் அன்காவென்று சொல்லப்பட்ட பக்கிசாரத்தை யனுப்பிவைப்பான். அதுகளிற் சிறிது அந்த விடக்குகளைத் தின்னும், சிறிது அதுகளைக் கடலிலே கொண்டு போய்ப் போடும். அந்த விடக்குகளுடைய இரத்தம், சீள்கள் போகிறதற்காக, மாளிகைகள் வீடுகள், குடிசைகள் இவைகளில் ஒன்றுவது ஒழுகாமலிருக்க மாட்டாதே அப்படிக்கொத்த கடிசாகிய மழை 40-நாளைக்குப் பெய்யும். அந்த மழையுடைய சபபைக்கொண்டு மிகுதியாகிய பறக்கத்துகளும் அதிகமாகிய வஜீபனங்களும் உண்டாக்கி வைப்பான். அதினுடைய பறக்கத்தினாலே ஒரு மாதலம் பழங் கொண்டும், ஓர் ஆட்டினுடைய பாலைக் கொண்டும், ஓர் வீட்டினுடைய குடும்பத்தார் தின்று வயிறு நிரம்பித் தாகந் தீர்ந்திருப்பார்கள்.

மனிதர்களுக்கு மிகுதியாகிய ரூஹத்து; மவுத்தாய்ப் போன பேர்களிருந்தால் இந்த ரூஹத்து அவர்களுக்கு முண்டாயிருக்குமே யென்று ஆசை வைப்பார்களே அப்படிக் கொத்த ரூஹத்துண்டாகும். பூமியில் ஈமானை யுடையவர்கள் தவிர வேறொருவரையுங் காணப்படாது. அவர்களுடைய கல்புகளிலே ஹசதுபோகும். கோபம் பகையென்கிறது கொஞ்சமு மில்லாமல் நீங்கிப்போகும். ஐவாய் மிருகம், பாம்பு இவைகள் மனிதர்களை நோவினை செய்ய மாட்டாது. அந்த மூதேவிகளுடைய அம்பு, வில், கத்தி இவைகளுடைய யுறைகள் மனிதர்களுக்குச் சில வருஷங்களுக்கு அடுப்புக்கு உதவும்.

அதற்குப் பிறகு தேசங்களில் அல்லாஹு தஆலாவுடைய இபாதத்தும் நன்மைகளு மதிகமா யிருக்க, மனதிச்சைப்பட்ட தீமையும் கொஞ்சம் கொஞ்சம் வெளியாகத் துடங்கும். இவைக ளெல்லாம் ஈஸா

அலைஹிஸ்ஸலாத்தினுடைய பறக்கத்தாகிய காலத்தி லுண்டாகும். ஈஸா அலைஹிஸ்ஸலாம் துனியாவிலே 40-வருஷம் ஹயாத்தாக யிருந்து நிக்காஹூம் செய்து பிள்ளைகளும் பிறக்கும். பிறகு உபாத்தாவார்கள். அவர்களை நம்முடைய நாயகம் றஸூல் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்ல மவர்களுடைய சிறப்பாகிய றவுலாவில் நல்லடக்கஞ் செய்யப்படும். பிறகு எமனி ராஜ்ஜியத்தில் கஹூத்தானுடைய கிளையிலுள்ள ஜம்சாத்து என்கிறவர் ஈஸா அலைஹிஸ்ஸலாத்துக்குக் கலிபாவாயிருந்து சாலி ஹான நடத்தையுடனேயும் நெறிநீதத்துடனேயும் ராஜாங்கஞ் செய்வார். அவருக்குப் பிறகு, சிறிது பாத்ஷாக்களுண்டாய் மனிதர் களுக்கிடையிலே குபிரும் மொரட்டு தனமுமதிகமாகும், இல்மு குறைந்துபோகும்.

அப்போது மகரிபு ராஜ்ஜியத்தில் ஒரு தலத்தை சுரியவாங்கப் படும். அவ்விடத்திலுள்ள மனிதர்கள் பூமிக்குள்ளாகப் போய்விடு வார்கள். அந்தக்கூட்டத்தார் அல்லாஹூத் தஆலாவுடைய கற்பனை யில்லையென்று நிண்ணயங் கொண்டவர்களாக இருக்கும். இன்னு மப்போது வானத்திலிருந்து ஒருவலுப்பமாகிய புகையுண்டாகிப் பூமியிலிறங்கி மனிதர்களுக்குக் கிட்டுமையுண்டாக்கும். அதினலே மூஃமினன பேர்களுக்குத் தடுமல் மூளை, வறச்சியுண்டாகிச் சத்தமாறக் குரலெல்லாம் பேதகமாகும். முனபிக்கானவர் காபிரானவர் களுக்குப் பேதக்கேடுண்டாகும். சிறிதுபேர் ஒரு நாளையிற், சிறிது பேர் இரண்டாம் நாளையிற் சிறிதுபேர் மூன்றும் நாளையிற் றெளிவு பெறுவார்கள். அந்தப்புகை நாலுநாளிருக்கும். பிறகு வானம் தெளிவாய்ப் போகும். இன்னுமப்பொழுது துல்ஹஜ்ஜு மாதம் ஹஜ்ஜுப் பெருநாளுக்குப் பிறகு இரவு நீளமாகும். அப்போது முஸாபிர்கள் பொழுது விடியவில்லை யென்று மெத்தவும் கிட்டுமை யாவார்கள். பிள்ளைகள் நித்திரையை விட்டு விழித்து அழும், நாற்கால் மிருகங்கள் மேய்ச்சலுக்குத் தடுமாறி யோடித் திரியும். கொஞ்சமும் ஸுப்ஹாகமாட்டாது.

அப்போது மனிதர்கள் பயந்து கலங்கியழுது சப்தம் போட்டுத் தௌபாச் செய்வார்கள். அந்த இரவு 3-அல்லது 4-இரவுடைய நீள மாக மனிதர்களெல்லாம் பயந்து தளம்பிக்கொண்டிருப்பார்கள். அப் போது பொழுதுடைய வட்டமாகிய நிலவுக்குக் கிராணம் பிடித்தா லெக்தப்படிக் கிருக்குமோ அப்படிப்போலே கொஞ்சம் ஒளியுடனே

மகரிபுலே நின்று முதயமாகும். அந்த வேளையில் அல்லாஹு தஆலாவை ஒருமைப்பாடா வணங்கப்பட்டவர்கள் ஒருவரு மிருக்க மாட்டார்கள். அப்படிப் பொழுது மகரிபுப் பிறத்திலேயிருந்து உதய மாகிறபோது எங்காளும் திறந்திருக்கு மென்னத்தக்க 70-வருஷத்து அடிப்பாடு அகலத்துடைய தௌபாவுடைய வாசலை யடைக்கப்படும். பிறகு யாதொருவருடைய தௌபாவும், ஈமானுங் கபூலாகமாட்டாது. அப்போது .பொழுதானது •மகரிபென்னு மேல்புறத்தி லெழுந்து துயர்ந்து மஷ்றிக் கென்னுங் கீழ்புறத்தில் ஒருவல்லைய வுயர்த்தி வரைக் கும்போய் அல்லாஹு தஆலாவுடைய• ஹுக்குமென்னும் கட்டளை யினல் மறுபடியும் கீழே பணிந்து வழக்கப்படிக்கு மகரிபுடைய புறத் தில் வந்தடையும். மறுநாள் மஷ்றிக்குடைய புறத்தில் அதிகமாகிய வொளியுடனே வழக்கப்படிக்குப் பொழுதுதயமாகும். இப்படி இருக்கிறபோது, கஃபாவுடைய மஷ்றிகு புறத்தில் வலது புறமாக இருக்கிற சபா என்கிற மலைகுலுங்கிப் பிளக்கும். அதில் நின்றும் அபுரூ பமான ஸூறத்துடைய வொருமிருகம் வெளியே வரும்; இதற்கு முன்னுலு மந்தமிருக மொருதரம் எமனிலும் நஜ்திலும் வெளியாச்சு தென்று மனிதர் சொல்லிக் கொள்வார்கள்.

ஆனல், முன்னல் அந்த மிருகம் வெளிப்பட்டதிலே சுறுக்கிலே மறைந்து போயிற்று. இப்போது மூன்றுந்தடவை நிரப்பமாகிய ஸூறத்துடனே எல்லாருக்கும் வெளிரங்கமாகப் புறப்படும். ஆன லதினுடைய . ஸூறத்து 7 உயிர் பிராணிகளுடையது. மனிதரு டைய முகம், ஒட்டகைக்கால் குதிரைக்கழுத்து ரோமஞ் செறிந்த மாட்டு வால், மானின் பின்தட்டு கலைமான் கொம்பு குரங்கின்கை, இவைகளோடு நாகரிகமான பேச்சையுடையதாக, வொருகையிலே மூஸா அலைஹிஸ்ஸலாத்துடைய ஆசாவும், மற்றொருகையிலே சுலை மான் அலைஹிஸ்ஸலாத்துடைய முத்திரை மோதிரமு மிருக்கும். என்றாலும், அது ஓடுகிறவன் எத்தமாட்டானே யத்தனை தீவரத் துடனே நடந்து எல்லாத் தேசத்துக்கும் போகும். அதின் கையி லகப்படாமல் ஓடிப்போகிறதற்கு ஒருவரும் சக்தி பெற மாட்டார்கள். எந்த நாற்கால் மிருகமும் அதை விட்டும் காவற் படமாட்டாது. மனிதர்களுக்குக் கெல்லாம் அடையாளம் போடும் ஈமானுள்ள பேர்களுடைய நெற்றியில் மூஸா அலைஹிஸ்ஸலாத்துடைய ஆஸாவைக்கொண்டு வோர் கீற்றிருக்கும். அதினலவனுடைய முகம்

வொளிவு ஷீனத்தைக்கொண்டு நிரப்பப்பட்டிருக்கும். ஈமானில்லாத வர்களுடைய மூக்கிலாவது, கழுத்திலாவது சுலைமான் அலைஹிஸ்ஸலாத்துடைய மோதிரத்தைக் கொண்டு கறுத்த முத்திரைபோடும். அதினாலே யவனுடைய முகம் கருப்பாய் பங்கப் பழிப்புள்ளதாகப் போகும்.

பின்னர் எல்லாரும் ஒரு மஜ்லிசிலிருக்கிறபோது அவரவர்களுடைய ஈமானும் குபிரும் வெளிரங்கமாகத் தெரியும். அதற்கு பேர் தாபத்துல் அறலு என்று சொல்லப்படும். அது அந்த வேளையை விட்டும் ஒழிந்த பிறகு மறைந்துபோகும். மக்ரிபுப் புறத்திலிருந்து பொழுது உதயமானது தொடுத்துத் தாபத்துல் அறலு வெளியானவுடனே சூறாதுகிறவரைக்கும் நூறு வருஷமாக இருக்கும். தாபத்துல் அறலு மறைந்துபோன பிறகு குளிர்ந்த காற்றுத் தென்புறத்திலிருந்து வீசும். அதினுடைய சபபினால் ஈமானுள்ளவர்களுடைய கை மூலமென்னும் அக்குள்களுக்குங் கீழே வருத்தமுண்டாகும். அதினாலே முதல் அபுலானவர்கள் அதற்குப் பிறகு அபுலல் அல்லாதவர்கள் அதற்குப் பிறகு பாசிக்கானவர்கள் ஒருத்தருக்கு பின்னையொருத்தராக மௌத்தாய்ப் போவார்கள்.

பின்னர் கியாமநாள் முடுகினபோது ஊர்வினை, பறவினை, ஆடு மாடுகள் நாகரீகமாய் பேசுகின்றவர்களைபோலே பேசும். அதுகள் வீடுகளுடைய விசள மற்று முண்டான காரியங்களுடைய விசளங்கொண்டு அறிவிக்கும். ஈமானுடையவர்கள் பூமியிலே பற்றற்றுப் போவார்கள். அப்போது ஹபஷிகள் மேலாடியவர்களுடைய ராஜாங்கம் எல்லா தேசத்திலுமுண்டாகி, அதற்குப்பின் ஹபஷிகள் கஃபாவை யிடித்துப் போடுவார்கள். ஹஜ்ஜு நின்றுபோகும். குர்ஆன் பாடம் நாவுகளையும், கல்புகளையும், கடிதாசிகளையும் விட்டு நீக்கப்பட்டும் அல்லாஹுத்தஆலாவை இபாதத்துச் செய்கிறதும், அவனை யறிகிறதும், ஆகிறத்தைப் பயப்படுகிறதும் இவைகளுடைய அடையாளங்கள் மனிதர்களை விட்டு மொழிந்துபோகும். வெட்கம் மனிதர்களுக் கிடையில் நீக்கப்பட்டுப் போகும். மனிதர்கள் பாதையிற் கழுதைகள் நாய்கள்போலே புணர்ச்சி செய்வார்கள். கொஞ்சங் சொஞ்சமாக மொசட்டுத் தனம் ராஜாக்களுடைய அநீதங் குடிகளுக்கிடையில் வம்பு வினையதிகமாகும், வெகு ஊரழிந்துபோகும். சிற்றூர்கள் பெரிய பட்டணமாயும், பட்டணங்கள் சிற்றூராயும் போகும், ஆபத்துகள் பஞ்சங்கள் உபாக்கள்

ஒன்றுக்கு பின்னுலொன்று அதிகமாகும். மனிதர்கள் புணர்ச்சி யதிக மாகச் செய்வார்கள். பிள்ளைகள் கொஞ்சமாகப் பிறக்கும்.

அல்லாஹுத் தஆலாவின் இபாதத்து மனிதர்களிலே காணப் படாது. மொரட்டு தனமதிகமாகி அல்லா என்ற சொல்லொருவருஞ் சொல்லமாட்டார்கள். அப்போது ஷாமு ராஜ்ஜியத்திலே அச்சந்தீருதல், தானிய மலிவு மெத்தவும் அதிகமாகும். மனிதர்கள் தொழில் செய் கிறதற்கும், பாடுபடுகிறதற்கும், சேகவப்பாடிகள் தங்களுடைய சாமான்களை யேறுவாகனத்திலேற்றிக் கொண்டு எல்லாரும் ஷாமுக்குக் குடித்தனமாய்ப் போவார்கள். சிறிது பேர்கள் வருத்தத்துடைய சபபினுலே ஒரு ஒட்டகையில் மூன்று பேர் ஐந்து பேராக ஏறிக் கொண்டு அந்தந்த ஊரைவிட்டும் ஷாமுக்கு வருவார்கள். சிறிது காலத்துக்குப் பின்னர் தென்புறத்திலிருந்து ஒரு வலுப்பமாகிய நெருப்புண்டாகி மனிதர்கள் பேரில் வந்துவிழும். அதைக் கண்ட மனிதர்கள் விரண்டோடுவார்கள். நெருப்பு அவர்களைத் துரத்துப் இரண்டு ஜாமத்துக்குப் பிறகு மாட்டாங்கியாக அங்கங்கே விழுந்து விடுவார்கள். நெருப்படங்கி யிருக்கும். பொழுது சூடதிகமானவுடனே நெருப்பு மனிதர்களைத் துரத்தும், மக்ரிபானவுடனே நெருப்புத் தன்னு டைய தலத்துக்கு வந்துவிடும். மனிதர்கள் ஓடுகிறதைவிட்டு மொரு தலத்திலிறங்கி யிருப்பார்கள். மறுபடியும் பொழுது சூடானவுடனே நெருப்பு மனிதர்களைத் துரத்தும். மனிதர்களுமோடுவார்கள். இந்தப் படிக்கு நெருப்பு மனிதர்களை ஷாமிலே கொண்டு வந்து சேர்க்கும். பிறகு அந்த நெருப்புக் காணுமற்போகும். பிறகு மனிதர்கள் தங்களு டைய வூர்களை நினைத்துப் பிரிவு பிரிவாகப் போவார்கள். ஷாம் நல்ல பரிபாலனமா யிருக்கும். இவைகளெல்லாம் கியாம நாளைக்கு முடுகுத லான அடையாளங்களாக விருக்கும்.

கியாம முண்டாகிறதற்கு முந்தின அடையாள மாகிறது முதல் முதல் 3, 4-வருஷம் மனிதர்கள் தங்களுடைய வேலைகளைக் கொண்டும், துனியாவுடைய நிஃமத்துகள், இரணங்கள், முதல்கள், ஷஹுவத்துகள் இவைகளின் பேரிற் பராக்காக விருப்பார்கள். முஹர்றமாதம் பத்துநாள் ஜும்ஆவுடைய நாளாக விருக்கும். அன் றைய தினம் சுபுஹானவுடனே மனிதர்களிற் சிறிது பேர்கள் கொள் வினை விற்பனைக்கொண்டும், சிறிதபேர்கள் ஆடுமாடு மேய்க்கிறது கொண்டும், சிறிது பேர்கள் ஆடுமாடுகள் தண்ணீர் குடிக்கிற தலத்

திலே துப்புரவாக்கிறது கொண்டும், சிறிது பேர்கள் பயிர் செய்கிறது கொண்டும், இப்படியே அவரவர்கள் தங்கள் தங்கள் வேலைகளைக் கொண்டு பராக்காக இருக்கிறபோது நினையாப் புறத்தாலே ஒருமெல்லிய நீளமாகிய சப்தம் சூறாதுகிறது மனிதர்களுடைய காதில் எல்லோருக்கும் ஒன்று போலே கேட்கும். எல்லாம் இது என்ன சப்தம், எங்கிருந்துண்டாகுதென்று ஹைறானாக விருப்பார்கள்.

அப்போதந்தச் சப்தங் கொஞ்சங் கொஞ்சமாக அதிகமாய்க் கடிசாகிய இடியுடைய சப்தம் போலாகும். பிறகு அதற்கு மதிகமாகும். அதை மனிதர்கள் கேட்டுப் பயந்து கலங்கி மௌத்தாகிறதற்குத் துடங்குவார்கள். பூமியுங் குலுங்கும்; மனிதர்கள் வீடுகளை விட்டும் மைதான்களிலே பயந்து வருவார்கள். காட்டு மிருகங்களும் பயந்து மனிதர்களிடத்தில் வரும். பூமி யங்கங்கே பிளந்து போகும். கடலுடைய ஓரங்களும் பிளந்திடிந்து போவதினாலே கடல் நாலா புறமும் அலைமோதும். நெருப்பினால் அதிகமாகிய சூடுண்டாகும். அதினுடைய கடிசினாலே மலைகளெல்லாம் பொடிப் பொடியாய் இடிந்து போகும். அதிகமாக வீசுமெனத் தக்க காற்றுடைய சபபினாலே மலையுடைய துண்டுகள் புழுதிகள் போலே பறக்கும். வானம், பூமி, மேகம் மற்றுமுண்டாகிய வஸ்துகள் ஆகாயத்திலே யெல்லா மொன்றாகப் பறந்து கொண்டிருக்கும். அந்த சப்தமும், நேரத்துக்கு நேர மதிகமாகிக் கொண்டிருக்கும். கடிசாகிய பயங்கரமான காற்று வீசுகிறது கொண்டு வானங்கள் துண்டு துண்டாகக் கிழிக்கப்பட்டு நட்சத்திரங்கள் கீழே விழுந்து துண்டு துண்டாகிப்போகும்.

அப்போது மனிதர்கள் ஒருவராகிலும் பாக்கியில்லாமல் ஒருவருக்குப் பின்னாலே யொருவராக எல்லாரும் மௌத்தாகிப்போவார்கள். அந்த வேளையில் மலக்கல் மௌத்து இபுலீசுடைய றூஹை வாங்க வருவார். அந்த மல்ஊன் அவரைப்பார்த்து ஓடிக்கொண்டு திரிவான். மலாயிக்கத்துகள் நெருப்புத் தடியைக் கொண்டவனை யடித்துப் பூமியில் விழுத்தாட்டுவார்கள். முன்னாலே மௌத்தாய் போன ஆதமுடைய மக்களுக்கு றூஹு வாங்குகிறபோது எத்தனை வருத்தங்களுண்டாயிற்றோ அந்த வருத்தங்க ளடங்கலைக் கொண்டும், அவனொருவனுடைய றூஹை வாங்கப்படும். ஒரு மூச்சுடைய குல்தாகிறது ஆறுமாதம் வரைக்கு மிருக்குமே அப்படிக்கொத்த சூறாதினதற்குப் பின்னாலே வானம், பூமி, மலை, நட்சத்திரம், கடல் மற்ற வஸ்துகள்

யாதொன்றும் இருக்கமாட்டாது. எல்லாம் பனாவாய் அழிந்துபோகும். மலாயிக்கத்துகளும் மௌத்தாய்ப் போவார்கள். அறஷு, குறுசு, லௌஹு, கலம், சுவர்க்கம், நரகம் இவைகளெல்லாம் சூறுடைய றூஹு தவிர மற்றதெல்லாம் பனாவாகப் போகுமென்றும், றூஹு களுக்குக் குவ்வத்துக் கேடுண்டாகிக் கபுருடைய அதாபை விட்டுத் தப்பிப் போகுமென்று சிறிது கௌலில் வந்திருக்கிறது. இன்னும் ஒரு கவ்லில் அவைகளில் ஒரு லஹ்ஸா நேரம் பனாவாகு மென்றிருக் கிறது. அல்லாஹுத் தஆலாவுடைய ஸாத்த் தவிர மற்றதெல்லாம் பனாவானதற்குப் பின்னாலே;

வலுப்பத்தையுஞ் சிறப்பையுமுடைய நாயன் திருவுளமாவான், ராஜாங்கத்தைக் கொண்டு வழக்காடின ராஜாக்களெங்கே? நானுய னென்று வழக்காடின வழக்காளிகளெங்கே? யென்று அதற்குச் சவாபும் இராஜாங்கமாகிற கல்குகளை யடக்கி யாளுகிற நாயனுக்கா யிருக்கு மென்று திருவுளமாவான். சிறிது காலம் ஒருமை பாட்டுடையா வெளி ரங்கமாகவே யிருக்கிறது. சிறிது காலம் அந்த காலத்துடைய மட்டு திட்டம் அல்லாஹுத் தஆலாவுக்கு தெரியுமேயல்லாமல் மற்றொரு வருக்குந் தெரியாது. அந்த காலத்துக்கும் பின்பு மறுபடியும் படைக்க நாடி, வானம், பூமி, மலாயிக்கத்துகளைப் படைப்பான். வீடுகள், புற் பூண்டுகள், மலைகள், சடல்கள் இவைகளுடைய அடையாளங்களில்லா மல் பூமிமட்டுமிருக்கிறது. யாரை யாரை எந்த இடத்திலே படைக்க வேணுமென்று நாடுகிறானோ, அந்த இடத்தி லவர்களுடைய வசுபு சன்னை வைப்பான். மற்றுமுண்டாகிய உறுப்புகளை யந்த வசுபுசன் புடனே சேர்த்து வைக்கப்படும். வசுபுசனென்கிறது முதுகிலே பின் துவாரம்வரையுமிருக்குமே அந்த எலும்புடைய ஒரு சின்னத்துண்டாக விருக்கும்.

அல்லாஹுத் தஆலாவுடைய ஹுக்கும்படிக்கு மலாயிக்கத் துகள், அந்த வசுபுசன்புக்கு ஆபத்துகள், நெருப்புடைய சூடுகள் படா மற் கார்மானமாக வைத்திருப்பார்கள். அந்த வசுபுசன்புடனே மற்று முண்டாகிய உறுப்புக்கள் சேர்ந்ததற்குப் பின்னாலே அல்லாஹுத் தஆலா அவனுடைய நிறப்பமாகிய குதறத்துக் கொண்டு அறஷுக்குங் கீழேயிருந்து மழையை யனுப்புவான். அதில் மனிதர்களினது இந்திரி யத்துடைய குவ்வத்துண்டா யிருக்கிறது. பின்பு அந்த உறுப்புக் களுக்குச் சதை, தோல், நரம்பு, எலும்பு, மூளை இவைகளெல்லா முண்

டாகும். இந்தப்படிக்குச் சடலம் செவ்வையான பின்பு அதினுடைய றாஹூகளடங்கலையும் சூறுக்குள்ளாலே புகுதவைத்து, இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாத்துடைய குவ்வத்து அடங்கலைக்கொண்டு ஊதும் படியா யுத்திரவாகும். அல்லாஹூத் தஆலாவுடைய புறத்தாலே யொரு சப்தம், என்னுடைய சிறப்பைக்கொண்டும், வலுப்பத்தை கொண்டும், சத்தியமாகச் சொல்லுகிறேன், யாதொரு றாஹூம் தன்னுடைய சடலத்தை விட்டும் கதாவாக வேறே சடலத்தில் போகாமற், பறவைகள் தங்களுடைய கூண்டுகளிலே தப்பாமல் எப்படிப் புகுதுகிறதோ அப்படிப்போல் றாஹூகள் தங்களுடைய சடலங்களிற் புகுதுமென்றுண்டாகும். சூறிலே றாஹூகளுடைய எண்ணிக்கைக் கொண்டு பொத்தல்களிருக்கும். எல்லா றாஹூகளும் எறும்பு கொசுவுபோல் சூறுடைய பொத்தல்களில் இருந்து புறப்பட்டு அதினுடைய சடலத்தின் கிட்டவரும்.

பின்பு இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாம் சூறாதுகிற குவ்வத்துக் கொண்டு எந்நாளுஞ் சீவித்திருக்கும்படியாய் அந்த றாஹூகள் சடலத்திற் சேர்ந்து எல்லா சடலத்துக்கும் ஹயாத்துண்டாகும். அந்த சூறுதுகிற குவ்வத்துக் கொண்டு பூமி பிளக்கும். அவரவர்கள் கபுறிலிருந்து அந்தச் சப்தத்துடனே விழுகிறதும் எழுந்திருக்கிறதுமாக வருவார்கள். பைத்துல் முகத்தசிலே கொழுகப்பட்டிருக்கிற கல்லுடைய தலமாகவிருக்கும். சூறாதுகிறதில் முந்தின சூறுக்கும் இரண்டாஞ் சூறுக்குமிடையில் நாற்பது வருஷத்துடைய கதரு இருக்கும். மனிதர்கள் கபுறுகளிலிருந்து எழுந்திருக்கிறபோது தாயுடைய வயிற்றிலிருந்து எப்படிப் பிறந்தார்களோ அப்படிப்போலே உடுமானங் காலுக்குச் செருப்பு, கத்தனு, தாடி யிவைகளில்லாது தலையிற் மட்டும் ரோமமிருக்கும்படியாய் எழுப்படுவார்கள், எங்கிலும் பல்லுகளுண்டாயிருக்கும். மனிதர்கள் தங்கள் கபன்களுடனே யெழுப்பப்பட்டுக் கொஞ்ச நேரத்திலே கபன் கீழே விழுந்துவிடுகிறது கொண்டு உடுமான மில்லாமையாய்ப் போவார்களென்று ஒரு லஃபான கௌலில் வந்திருக்கிறது.

இன்னும் சிறுபிள்ளை, வாலிபக்காரர், கிழவர், இவர்கள் தங்களுடைய வயதைக்கொண்டு எவ்வளவு உயரமாக இருந்தார்களோ அவ்வளவாகவே எழுப்படுவார்கள். என்கிலும் பொட்டையர், செவிடர், ஊமையர், முடவர், லயீபானவர், கைதறிக்கப்பட்டவர், ஆகிய இவர்

களுடைய உறுப்புக்களெல்லாஞ் சலாமத்தாகவே எழுப்பப்படுவார்கள். நம்முடைய நாயகம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களே யெல்லாருக்கு முதலிலெழுப்பப்படும். பின்பு ஈஸா அலைஹிஸ்ஸலாம், பின்பு மற்றும் அன்பியாக்கள், பின்பு சித்தீகீன்கள், பின்பு பாசிகான வர்கள், காபிரானவர்கள் இவர்களெல்லாம் கொஞ்ச நேரத்திலே யெழுப்பப்படுவார்கள். அபூபக்கர் உமறு றலியல்லாஹு அன்ஹுமா இவர்களிரண்டு பேரையும், நமது நாயகம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்கும், ஈஸா அலைஹிஸ்ஸலாத்துக்கு மிடையி லெழுப்பப்படும். அப்போது நாயகம் றஸூல் ஸல்லல்லாஹு அலை ஹிவஸல்லத்துடைய உம்மத்துகள் அவர்களுடனேயும், மற்றும் அன்பியாக்களுடைய உம்மத்துகள் அவரவர்களுடனேயும் கூட்டமாக விருப்பார்கள்.

அப்போது மனதிலே யுண்டாயிருக்கிற பயங்கரத்துடைய கடி சினாலே அவர்களுடைய பார்வையை வானத்தளவிலுயர்த்தப்பட்டி ருக்கும். ஒருவருடைய அபிமானத்தை யொருவர் பார்க்க மாட்டார்கள். பார்த்தபோதிலும் சிறுபிள்ளைகள் பார்க்கிறது போலே ஷஹுவத்தை விட்டுக்காலியாக விருக்கும். மனிதர்களெல்லாம் அங்கங்கே தரிபட்டி ருக்கிறபோது பொழுது ஒரு மயில் இரண்டு நாழிகை உயரத்திலே வந்து முடுகியிருக்கும். வானத்திலிருந்து கடிசாகிய மின்னலும் பயங்கரமாகிய சப்தங்களும் ஒன்று பின்னு லொன்றுண்டாகும். பொழுதின் சூட்டுடைய சபபினாலே சரீரத்திலிருந்து எல்லாருக்கும் வேர்வைகளோடு வேர்வையாகிறது அந்த அன்பியாக்கள் முஃமினான பெரியோர்களுக்குக் காலுடைய பாதம் நனையும்படியா யிருக்கும். மற்றும் முஃமினான பேர்களுக்கு அவர்களுடைய அமலின்படிக்குப் பாதம் வரைக்கும், நெஞ்சி வரைக்கும், கழுத்துவரைக்கும் அந்த வேர்வை யெத்திருக்கும்.

மனிதர்கள் அதிகமாகிய பசிதாகத்தைக்கொண்டு ஆஜிசாய்ப் பசிதீருகிறதற்காக மண்களைத் தின்பார்கள். அந்த மண்களாகிறது இன்பமான கோதுமை மாவைப்போலேயிருக்கும். தாகந் தீருகிற தற்காக ஹௌலுல் கௌதருக்கு வருவார்கள். மற்றும் அன்பியாக் களுக்கும் ஹௌலுகளுண்டாயிருக்கும். ஆனால் விஸ்தீனத்திலும், இன்பத்திலும் ஹௌலுல் கௌதறைப்போ லிருக்க மாட்டாது. பொழுதின் சூட்டுடைய அமளியுடனே அமளியான சப்தமும்

பயங்கரமான ரூபங்களு முண்டாகும். ஆயிரம் வருஷத்துடைய மட்டுதிட்டம் வரையும் மனிதர்கள் அவ்வித அமளிகளிலிருப்பார்கள். ஆனல் ஏழு கூட்டத்தார் அவர்களுடைய விசளம் பின்னலே வரும். அவர்கள் மட்டும் நிழலிலே யிருப்பார்கள். மனிதர்கள் மெத்தவும் ஆஜிசாக ஆதம் அலைஹிஸ்ஸலாத்தை வஸிலாத்தேடி யவர்களிடத்தில் வந்து சொல்லுவார்கள். அதென்னவெனில், மனிதர்களுக் கெல்லாந் தகப்பனுனவரே! அல்லாஹுத் தஆலா தன்னுடைய குதுரத்தென்கிற கையைகொண்டு தங்களைப் படைத்து, அவனுடைய மலாயிக்கத்துகளைத் தங்களுக்குச் சஜதாச் செய்வித்துத் தன்னுடைய சுவர்க்கத்திற் குடி யிருத்தாட்டி எல்லா வஸ்த்துவுகளுடைய பேர்களையும் அறிவித்து அவர்களைக் கொண்டு தங்களைச் சங்கை செய்தானே, அப்பேர்ப்பட்ட நீங்கள் இன்றைய தினம் எங்களுக்கு ஷபாஅத்துச்செய்து எங்களை யிந்த வருத்தங்கள் அமளிகளை விட்டுஞ் சலாமத்தாக்க வேண்டுமென்று சொல்லுவார்கள்.

அது கேட்டு பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் சொல்வார். இன்றைக்கு ஒரு போதுமில்லாத விதமாய் அல்லாஹுத் தஆலா மெத்தவும் கோபமாக விருக்கிருன். என்னைக் கோதுமை தின்ன வேண்டாமென்று விலக்கியிருக்க, நானதைத் தின்றேன். அதைக் கொண்டு என்ன கேள்வி கேட்பானேவென்று பயந்துக்கொண்டிருக்கிறேன். ஆதலால் எனக்கு ஷபாஅத்துச் செய்கிறதற்கு முகமில்லை. நீங்கள் நூஹு அலைஹிஸ்ஸலாமிடம் போங்கள்; அவர் றசூல்மார்களில் முந்தினவராக யிருக்குமென்று சொல்லுவார்கள். மனிதர்கள் அவரிடத்தில் வந்து நூஹு அலைஹிஸ்ஸலாமே! தாங்கள் றஸூல்மார்களில் முந்தினவர், தங்களுக்கு அல்லாஹுத் தஆலா ஷுக்று செய்யப்பட்ட அடியாரென்று பட்டபேர் கொடுத்திருக்கிருன். ஆதலால் எங்கள் பேரிலே கிருபை செய்து அல்லாஹுத் தஆலாவிடத்தில் எங்களுக்கு ஷபாஅத்துச் செய்யவேணு மென்று சொல்லுவார்கள். நூஹு அலைஹிஸ்ஸலாம், அல்லாஹுத் தஆலா இன்றையில் ஒரு போதுமில்லாத கோபமுள்ளவனுக விருக்கிருன். என்னுடைய பிள்ளைகள் வாழுந்தப் பெருவெள்ளத்திலே ஹலாக்காய்ப்போனபோது அதபில்லாமல் என்னுடைய பிள்ளைகள் எங்கே யென்று கேட்டேன். அந்தக் குற்றத்துடைய சபபினலே யென்னை யென்ன கேள்வி கேட்பானேவென்று பயந்து கொண்டிருக்கிறேன்; எனக்கு ஷபாஅத்துச்

செய்கிறதற்காக முகமுமில்லை. ஆதலால் நீங்கள் இபுருஹீம் அலைஹிஸ் ஸலாமிடத்திற் போங்கள். அல்லாஹு-த் தஆலா அவரைத் தன்னுடைய தோழனென்று சொல்லி யிருக்கிருனென்று சொல்வார்கள்.

அப்போது மனிதர்களவரிடத்தில் வந்து இபுருஹீம் அலைஹிஸ் ஸலாமே! அல்லாஹு-த் தஆலா தங்களைத் தோழனென்று சொல்லி யிருக்கிருன். நெருப்பைத் தங்களுக்குச் சலாமத்தான குளிர்ச்சியாக்கி வைத்தான். அன்பியாக்களுக் கெல்லாம் இமாமாக்கினுன். ஆதலால் தாங்கள் சிறப்புடைய நாயனிடத்தி லெங்களுக்கு ஷபாஅத்துச் செய்து எங்களை இந்த அமளிகள் பலாய்களைவிட்டுங் கலாசு பெறவைக்க வேண்டுமென்று சொல்வார்கள். அப்போது இபுருஹீம் அலைஹிஸ்ஸலாம், அல்லாஹு-த் தஆலா இன்றையில் ஒருபோதுமில்லாத கோபமுள்ளவனுக இருக்கிருன். பொய்யென் றெண்ணப்படு மென்னத்தக்க மூன்று சொல் நான் சொல்லி யிருக்கிறேன். அதைக் கொண்டு அல்லாஹு-த் தஆலா என்னை யென்ன கேள்வி கேட்கிருனேவென்று பயந்து கொண்டிருக்கிறேன். எனக்கு ஷபாஅத்துச் செய்கிறதற்காக முகமில்லை, நீங்கள் மூஸா அலைஹிஸ்ஸலாமிடத்திற் போங்கள். அல்லாஹு-த் தஆலா அவரைத் தன்னுடனே பேசும்படியாய்ப் பண்ணி வைத்து அவனுடைய ரகசியமறிந்தவராக வாக்கினுனென்று சொல்வார். ஆனுல் இபுருஹீம் அலைஹிஸ்ஸலாம் சொன்ன மூன்று பொய்யாகிறது, மூன்று கிஸ்ஸாவாக இருக்கும்.

அதில் முந்தினதாவது ஒருபோது அவருடைய கௌமுகள் பல பல வகையாகிய வஜீபனங்கள் செய்து புத்துகளுக்கு முன்னுலே வைத்து போட்டுக் கோவிலுடைய வாசலை யடைத்துப் பூட்டிவிட்டு அடங்கலும் மைதானிலே போகிறபோது இபுருஹீம் அலைஹிஸ்ஸலாத்தைக் கூடக் கூப்பிட்டதற்கு அவர் நட்சத்திரங்களைப் பார்த்து நான் நசலா யிருக்கிறேன் யென்று சொன்னுர். அது ஒருபொய். இரண்டாம் பொய்யாகிறது இபுராஹீம் அலைஹிஸ் ஸலாம் தங்களுடைய கௌமுகளடங்கலும் ஊரைவிட்டு மைதானுக்குப் போனபோது அவர் கோயிலிற்போய் பூட்டைதிறந்து உட்சென்று வல்லயத்தை கையிற்பிடித்துக் கொண்டு புத்துகளைப் பார்த்து இந்த லெஸ்ஸத்தான நிஃமத்துகளை நீங்களேன் தின்னவில்லை யென்று கேட்டதற்கு அதற்கது ஜவாபு சொல்லாம லிருக்கிறதைப் பார்த்து நீங்கள் என்னுடனே ஏன் பேசவில்லை என்று கேட்டதற்கும் ஜவாபு

சொல்லாம லிருப்பதைப் பார்த்து, அந்த கோவிலிலிருக்கிற சின்ன புத்துகளை யுடைத்துப் பெரிய புத்துடைய காதையும் மூக்கையுமறுத்து வல்லயத்தை அதினுடைய கழுத்திற் கொழுகிப் போட்டுக் கதவை சாத்திப் பூட்டிக்கொண்டு தங்கள் வீட்டுக்கு வந்து விட்டார்கள். பின்னர் காபிரானவர்கள் கோயிற் கதவை திறந்து இந்த வேலைகளைப் பார்த்து உடனே யவர்களுடைய மனதுகளெல்லா மெறிந்துபோய் அதிகமாகிய கோபத்துடனே இந்த வேலை செய்தது யாரென்று யோசனை பண்ணுகிற போது, முன்னாலே புத்துகளைப் பழிக்கத்தக்கதாகிய இபுராஹீம் அலைஹிஸ்ஸலாம் வாக்கினாலே கேட்டார்களே அவர்கள், இபுராஹீ மென்கிற வாலிபக்காரர் புத்துகளைப் பழிக்கத்தக்கதாக நாங்கள் கேட்டிருக்கிறோம், இந்த வேலையும் அவரே யல்லாத மற்றொருவருஞ் செய்ய மாட்டார்களென்று சொன்னார்கள்.

பிறகு இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாத்தை யழைப்பித்து இந்த வேலை யார் செய்ததென்று கேட்டார்கள். அதற்கிபுராஹீம் அலைஹிஸ்ஸலாம் அந்த காபிர்சட்கு ஜவாபு, பாருங்கள் வல்லயம் எல்லாத்துக்கும் பெரிய புத்து இடத்திலிருக்கிறது, அது அவர்கள் பேரிற் கோபமாயுடைத்துப் போட்டது. அந்த காயமான சின்ன புத்துகளை யிந்த வேலை யார் செய்ததென்று கேளுங்கள், அதுகள் சொல்லுமென்று சொன்னார்கள். இது இரண்டாம் பொய். இனி மூன்றுவது பொய்யாகிறது இபுராஹீம் அலைஹிஸ்ஸலாம் தங்களூரிலிருந்து கிறுனென்கிற ஊரிலே தங்கள் சிறிய தகப்பனாரிடத்திற் போய் அவருடைய மகள் சாறுவை நிக்காஹு செய்தார்கள். மார்க்கத்துடைய பேதகத்தினாலே சிறிய தகப்பனை விட்டுப் பிரிந்து வருகிறபோது மிசுறுக்கு வந்தார். அப்போது மிசுறிலே ஒரு பசாதாகிய ராஜாவிருந்தான். அவனுடைய வழக்கமாகிறது ஒரு அழகாகிய பெண் பிள்ளையைக் கண்டால் வம்பு செய்து பிடித்துக் கொண்டு போகிறதும், அவளுடனே புருஷனிருந்தா லவனை வழக்காளி யென்றெண்ணி யவனை வெட்டிப் போடுகிறதும், அவளுடனே பிள்ளை யாராகிலும் வாரிசுகளிருந்தாலவர்களுக் கேதாகிலும் கொடுத்து ராசிபடுத்திக் கொள்ளுகிறது மாயிருந்தான். இபுராஹீம் அலைஹிஸ்ஸலாம் அந்த ஊருக்குப்போய் அந்த செய்தியைக் கேட்டவுடனே ஹைறானாக இருந்தார். அப்போதந்த அநியாயக்காரனுடைய மனிதர்கள் வந்து அந்தப் பெண்பிள்ளை உமக்கென்ன வேண்டுமென்று கேட்டதற்கு அவர்கள்

சாரு சிறிய தகப்பனுடைய மகளானபடியினுலேயும், மூஃமினுன பேர்கள் ஒருவருக்கொருவர் உடற் பிறப்பென்று அல்லாஹுத் தஆலா திருவுளமா யிருக்கிறபடியினுலேயும், என்னுடைய உடற் பிறந்தாளென்று சொன்னுர்கள். அந்தப்படியே சாருவுக்கு யாராகிலும் கேட்டால் சொல்லும்படியாய் படிப்பித்துக் கொடுத்தார்கள். இது மூன்ருவது பொய்யாயிருக்கும்.

பிறகு அந்த அனியாயக்காரனுடைய மனிதர்கள் சாருவை யவனிடத்திற் கொண்டு போய் விட்டார்கள். சாரு போன பிறகு இபுராஹீம் அலைஹிஸ்ஸலாம் அல்லாஹுத் தஆலாயிடத்தில் துஆச் செய்துகொண்டு தொழுகையி லிருந்தார்கள். அப்போது அல்லாஹு தஆலா அவர்களுக்கும் சாருவுக்கு மிடையிலே மறைவாக விருந்த சுவர்களை யெல்லாம் பூமியிலமிழ்த்தி சாருபீவியை இபுராஹீம் நபியவர்களின் கண்ணுக்குத் தெரியும்படி யாக்கினுன். அதினுலே சாரு அவர்களுடைய கண்ணை விட்டும் ஒரு நிமை கொட்டி விழிக்கிற நேரமாவது மறைந்திருக்கவில்லை. இவ்விதமாக இருக்கும்போது சாருபீவியைக் கூட்டிக்கொண்டுபோய் மனிதர்கள் அந்த துஷ்டனிருக்கும் வீட்டிற் கொண்டுபோய் விட்டார்கள். அந்த அநியாயக்காரன் மூன்று தரம் பசாதுடைய நினைவைக் கொண்டும் சாருவிடத்தில் வருந்தோறெல்லாமவனுடைய மூச்சு கைகாலி வைகளெல்லாம் கட்டுப்பட்டு மௌத்தாகிற தற்கு முடுகுவான்.

அப்போதவன் தௌபாச் செய்து தன்னை இந்த ஆபத்தை விட்டும் சலாமத்துப் பெறும்படியாய் துஆச் செய்யக் கேட்பான். அப்போது சாரு துஆச் செய்வார்கள். அவர்கள் துஆவினுடைய பறக்கத்தினுலே சலாமத்தாவான். பின்ன ரொடுக்கத்தில் தன்னுடைய மனிதர்களைக் கூப்பிட்டு இந்தச் சிஹ்றுடைய பெண் பிள்ளையைத் தீவிரமாகக் கொண்டுபோய் வெளியே விட்டு விடுங்களென்று சொல்லிச் சாருவுக்கு ஹாஜருவை இனுமாக கொடுத்தனுப்பி விட்டான். பின்னர் சாரு இபுருஹீம் அலைஹிஸ்ஸலா மவர்களிடத்தில் வந்து சேர்ந்தார்கள். சேர்ந்தபோது அவர்களந்த வூரைவிட்டும் புறப்பட்டு ஷாமுக்கு வந்து குடித்தனமாக விருந்தார்கள், இதுதான் இபுருஹீம் நபி மூன்று பொய் சொன்னுரென்பதாம். இதுநிற்க,

பிறகு மனிதர்கள் மூஸா அலைஹிஸ்ஸலா மவர்களிடத்தில் வந்து அவர்களைப்பார்த்து யாமூஸாவே! அல்லாஹுத் தஆலா தங்களுடனே

இடையில் யாதாமொரு தூதுமில்லாமற் பேசினன். அதுவுந் தவிரத் தங்களுக்குத் தெளராத்தென்கிற வேதத்தையுங் கொடுத்தான். ஆன படியினல் தாங்கள் அல்லாஹுத் தஆலா விடத்தி லெங்களுக்காக வேண்டி ஷபா அத்துச் செய்யவேணு மென்று சொல்லுவார்கள். அது கேட்டு மூஸா அலைஹிஸ்ஸலாம் அந்த மனிதர்களைப் பார்த்து அல்லாஹுத் தஆலா இன்றைய தினம் ஒருபோதுமில்லாத கோப முள்ளவனக விருக்கிருன். நான் ஹிபத்திக்கிளையி லுள்ளவர்களில் ஒருவனை அல்லாஹுத் தஆலாவுடைய வுத்திரவின்றியே வெட்டிப்போட்டேன். அதைக் கொண்டும் என்னை யென்ன கேள்வி கேட்கிருனே வென்று பயந்து கொண்டிருக்கிறேன். அதனலே ஷபாஅத்துச் செய்கிறதற் கெனக்குச் சக்தியில்லை. ஆதலால் நீங்கள் ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்களிடத்தில் போங்கள். அவர்களை அல்லாஹுத் தஆலா தன்னுடைய றூஹென்று சொல்லி யிருக்கிரு னென்று சொல்லுவார்கள். அது கேட்டு அம்மனிதர்கள் ஈஸா நபியிடத்தில் வந்து, யா ஈஸாவே! அல்லாஹுத் தஆலா தங்களைத் தன்னுடைய றூஹென்று சொல்லியிருக்கிருன். ஜிபுரியில் அலைஹிஸ்ஸலாத்தை தங்களுக்கு றபீகாக்கினன், இன்னும் மிகுதியாகிய திஷ்டாந்தர மெல்லாந் தங்களுக்குக் கொடுத்திருக்கிருன். ஆதலால் இன்றைய தினம் எங்களுக்காக ஷபா அத்துச் செய்து எங்களை இந்த அமளிகள், பலாயிகளைவிட்டும் சலாமத்துப்பெற வைக்கவேணு மென்று சொல்லுவார்கள்.

அதுகேட்டு ஈஸா அலைஹிஸ்ஸலாம் மனிதர்களைப் பார்த்து அல்லாஹுத் தஆலா இன்றையி லொருபோது மில்லாத கோப முள்ளவனக விருக்கிருன். அதேனென்ரு லென்னுடைய உம்மத்துகள் என்னை ஒருவேளை நாயனென்றும், ஒரு வேளை நாயனுடைய மகனென்றுஞ் சொல்லி இந்தப்படிக்கு அவர்களுக்கு நான் சொன்னதாய் சொல்லுகிருர்கள். அதைக்கொண்டு என்னை யென்ன கேள்வி கேட்கிருனே வென்று நான் பயங்கரமாய் இருக்கிறேன். ஆதலால் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களிடத்திற் போங்களென்று சொல்லுவார். அதுகேட்டு அம்மனிதர்கள் நபிநாயக மவர்களிடத்தில் வந்து அவர்களுடைய திவ்விய முகத்தைப் பார்த்து, யா முஹம்மதே! முஸ்தபாவே! அஹ்மதே! தேவரீர் தாங்கள் அல்லாஹுத் தஆலாவுடைய உவப்பாகிய மஹ்பூபாகவிருக்கும். மேலும் அல்லாஹுத் தஆலா துன்யாவில் முன்னுண்டான பாவம் பின்னுண்

டான பாவமடங்கலையும் பொறுத்து விட்டேனென்று நல்மாராயந் தங்களுக்குச் சொல்லியிருக்கிறுன். ஆகலால் அல்லாஹுத் தஆலா மற்ற கல்குகள் பேரிலெவ்வளவு கோபமாயிருந்தாலும் தங்கள் விஷயத் திலப்படியிருக்கமாட்டான். அதேதுக்கெனில் தாங்கள் நபிமார்களுக் கெல்லாம் முத்திராங்கமாக வந்தவர்கள், ஆதலால் தாங்களெங்களுக்கு எதுவேணு முத்திரவு சொன்னுலும் நாங்கள் தங்களை விட்டும் விலகிப் போக மாட்டோம். ஆதலரல் இந்த விஷயத்திலே தாங்களெங்களுக்காக எந்தப்படியும் அல்லாஹுத் தஆலாவிடத்திலே ஷபா அத்துச் செய்து எங்களை இந்த அமளிகள் பல்ரயிகளை விட்டும் சலாமத்துப்பெற வைக்க வேண்டு மென்று சொல்வார்கள்.

அப்போது றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம அந்த மனிதர்களைப் பார்த்து நீங்கள் சொல்லுகிறது மெய்தான் இன்றைய தினம் நானிந்த வேலைக்காக ஷபா அத்துச் செய்கிறது என்னுடைய ஹக்காக இருக்குமென்று திருவுளமாவார்கள். திருவுளமாகி அல்லா ஹுத் தஆலா யிடத்திலே தாங்கள் வருகிறதற்கு உத்திரவு கேட் பார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா எல்லாருக்கும் வெளிரங்க மாய்த் தெரியும்படியாய் புருக்குடனே ஜிபுரியீல் அலைஹிஸ்ஸலாத்தை யனுப்பி வைப்பான். அப்போது நபி நாயகம் யாவரும் பார்க்கத்தக்க தாகப் பார்க்க புருக்கின் பேரிலேறி வானத்தைப் பார்க்க உயர்ந்து போவார்கள். அப்போது மனிதர்களுடைய கண்களுக்கு வானத்தில் ஒரு ஒளியாகிய விஸ்தீரணத்தையுடைய தலமிருக்கிறதாய்த் தெரியும். அந்தத் தலத்திலே நபிநாயகம் இறங்குவார்கள். அதற்குப் பெயராகிறது மகாமன் மஹ்மூதாயிருக்கும். அதில் நின்றும் நபி நாயகம் வருகிறதை மனிதர்களெல்லாம் வழிப்பார்த்துக்கொண்டு புகழ்ந்திருப்பார்கள்.

அப்போது அந்தத் தலத்தில் அல்லாஹுத் தஆலாவின் தாத்து டைய தஜல்லியாகிறது அறுஷில் நின்றும் வெளியாகும். அந்த தஜல்லி யாகிய ஒளியைப் பார்த்தவுடனே சஜதாச் செய்வார்கள். அந்த சஜதா விலே 7-இரவு பகலுடைய அளவு மிருப்பார்கள். அப்போது அல்லா ஹுத் தஆலா நபிநாயகத்தளவிலே திரும்பி, என்னுடைய முஹம்மதே! உம்முடைய தலையை யுயர்த்தும். நீரென்ன சொன்னுலும் கேட்கிறேன் நீரென்ன கேட்டாலும் கொடுக்கிறேன். நீர் ஷபாஅத்துச் செய்தாலுங் கபூல் செய்கிறேனென்று திருவுளமாவான். அப்போது நபிநாயகம் தங்களுடைய பறக்கத்தாகிய தலையை யுயர்த்தி அல்லாஹுத்

தஆலாவை மட்டில்லாது புகழுவார்கள்; முன்னுண்டான பேர்கள் பின்னுண்டான பேர்கள் ஒருத்தரு மந்தப்படிக்குப் புகழ்ந்திருக்க மாட்டார்கள்.

பிறகு நபிநாயகந் தங்கள் திருவாயைத் திறந்து, ஆண்டவனே! துனியாவிலே ஜிபுரியீ லுன்னுடைய சமுகத்தில் நின்றும் என்னிடத்தில் வந்து நானென்ன கேட்கிறேனோ அதை எனக்குக் கொடுத்து என்னைச் சந்தோஷப்படுத்தி வைப்பதாகச் சொல்லும்படிக்குச் சொல்லி நீ யெனக்கு வார்த்தைப்பாடு செய்தாயே அந்த வார்த்தைப் பாட்டை இப்போது நிறைவேற்றும்படியாய் நான் கேட்கிறே னென்று திருவுளமாவார்கள்.

அப்போது அல்லாஹுத் தஆலா நபிநாயகத்தோடும், ஜிபுரியீல் சொன்னது உண்மைதான். அவரொருபோதும் பொய் சொல்ல மாட்டார், ஆதலால் நான் இன்றைய தினத்தில் உம்மை சந்தோஷமாக்கி வும்முடைய ஷபா அத்தைக் கபூல் செய்தேன். நீர்போம். நான் பூமியில் தஜல்லியாகிய அடியார்களை கேள்வி கணக்குக் கேட்டு அவர்களுடைய அமல்களுக்குப் பிரத்தி செய்கிறேனென்று திருவுளமாவான். பிறகு நபிநாயகம் பூமியில் வருவார்கள். அப்போது மனிதர்கள் அல்லாஹுத் தஆலா தங்களுடனே யெங்களுடைய கணக்கில் என்ன திருவுளமானு னென்று கேட்பார்கள். அதற்கு நபிநாயகம் அல்லாஹுத் தஆலா பூமியில் தஜல்லியாகி உங்களுடைய கேள்வி கணக்குகளை கேட்டு உங்களுடைய அமல்களுக்கும் பிரத்தி செய்கிறேனென்று திருவுளமானு னென்று திருவுளமாவார்கள்.

அந்த வேளையில் ஒரு வலுப்பமான ஒளி வானத்திலிருந்து பயங்கரமான சப்தமிடும். அதுகேட்டு மனுடர்க ளெங்களுடைய நாயன் இதிலிருக்கிறானோவென்று கேட்பார்கள். அதற்கு வானவர்கள், நாயனாகிறவன் துய்மையானவன் நாங்கள் துனியாவுடைய வானத்தினது மலாயிக்கத்துகளாக விருக்குமென்று சொல்லிப்போட்டு அவர்கள் பூமியில் வந்து தூரமாக ஓரிடத்தில் நிற்பார்கள். அதற்குப் பிறகு ஒரு வொளி முந்தின வொளியைக்காண அதிகமான அமளியாய் வானத்திலிருந்திறங்கும். அது கிட்ட வந்தவுடனே மனிதர்கள் நாயனுடைய தஜல்லியிந்த ஒளிவிலேயிருக்குதோ வென்று கேட்பார்கள். அப்போது வானவர்கள், நாயன் தூய்மையானவன், நாங்கள் இரண்டாம்

வானத்துடைய மலாயிக்கத்துகளாக விருக்கு மென்று சொல்லி முந்தின வானத்து மலாயிக்கத்துகளுக் கடுத்தாப்போல் போய் நிற்பார்கள்.

இப்படிப்போலே தான் மற்ற வானத்துடைய மலாயிக்கத்துகளும் ஒருவரைக்கான ஒருவர் அதிகமான ஒளிவையும் வலுப்பத்தையு முடையவர்களாய் வந்து முந்தினவர்களுக் கடுத்தாப்போலே ஒருவரைக்கான ஒருவர் முடுகுதலாக நிற்பார்கள். அதற்குப் பிறகு அருஷைச் சூழ்ந்த மலாயிக்கத்துகள் கீழே யிறங்கி எல்லாரைக்காண நெத்தவும் முடுகுதலாய் நிற்பார்கள். அப்போது இசுறுபீல் அலைஹிஸ்ஸலாத்துக்குச் சூறூதும்படியாய் உத்திரவாகும். அந்தச் சூறுடைய சப்தத்தைக் கொண்டு மூஸா அலைஹிஸ்ஸலாம் தவிர மற்றப்பேர்களடங்கலும் பேதகக் கேடாய்ப் போவார்கள். மூஸா அலைஹிஸ்ஸலாத்துக்கு முன்னாலே தூறுசினா மலையில் அல்லாஹுத் தஆலாவுடைய தஜல்லியில் பேதக் கேடுண்டாகித் தெளிவு பெற்றபடியினாலே இப்போது அவர்களுக்குப் பேதக்கேடுண்டாக மாட்டாது.

அப்போது அல்லாஹுத் தஆலா அவனுடைய அருஷிலே தஜல்லியாகுவான். அந்த அருஷுடைய நாலு கோணத்தையும் எட்டுமலாயிக்கத்துகள் சுமந்து கொண்டு பூமியில் வந்து அதில் முந்தினகாலே பைத்துல் முகத்தீசுடைய கல்லிருந்த இடத்தில் வைப்பார்கள். அதற்கு கீழே ஏழுவகை மனிதர்களுக்கு இடங் கொடுக்கப்படும். அவர்களாகிறது ஹதீதில் வந்திருக்கிறது நீதஞ் செய்யப்பட்ட பாத்துஷா, இன்னும் வாலிபத்துடைய துவக்கத்திலே யிருந்து இபாதத்துச் செய்துகொண்டிருந்தவன், இன்னும் யாதொருவருடைய நினைவாகிறது மில்லாமல் திக்றுகள் செய்கிற தற்கும், தொழுகிறதற்கும், பள்ளிவாசலைக் கொண்டுந் தோழமைப் பட்டிருக்கிறவன், இன்னும் தனித்த வேளையில் அல்லாஹுத் தஆலாவைக் கொண்டு ஆசையானவனாகவும், பயந்தவனாகவும், அழுகிறவன், இன்னும் அல்லாஹுத் தஆலாவுடைய பாதையி லிரண்டு பேர் சினேகிதமாக ஹாலிருக விருக்கிறபோதும், மறைந்திருக்கிற போதும் ஒரு மனப்பட்டிருக்கிறவர்கள், இன்னும் அல்லாஹுத் தஆலாவை யொழிய மற்றொருவருக்குந் தெரியாமல் சதக்காக் கொடுக்கிறவன். இன்னும் அழகும் முதலுமுள்ள பெண் பிள்ளை இவனை நாடினபோது அல்லாஹுத் தஆலாவைப் பயந்து விலக்கிக் கொள்கிறவன். இன்னும் சிறிது ரிவாயத்தில் வந்திருக்கிறது, பொழு

இடைய சூடு அதிகமான வேளேயில் இந்த நிழல்மட்டு முண்டாயிருக்கிறபடியினலே, இன்னுஞ் சிறிது பேர்களு மவ்விடத்தில் வருவார்களென்று அறுசிறங்கிறமாதிரி யொருவருக்குந் தெரியாது. அல்லாஹுத் தஆலாவுடைய இராஜாங்கம் அந்தந்த தலத்திலே தரிபாடானபோது, அறுசுடைய திரைகள் எல்லாந் திறக்கப்படும்.

அப்போது இரண்டாவது சூறூதம்படியாய் இசுறாபீல் அலைஹிஸ்ஸலாத்துக்கு உத்திரவாகும். அப்போது மனிதர்கள் தெளிவு பெறுவார்கள். அந்தச் சூறினுடைய சப்தத்துக் கடுமையினலே ஆலம் கைபுக்கும், ஆலம் ஷஹாதத்துக்கும் இடையிலிருக்கிற திறை கிழிந்து போகும். அதனல் மலாயிக்கத்துகள், ஜின்கள் அமல்கள், சுவர்க்கம், நரகம், அறுசு, அல்லாஹுத்தஆலாவுடைய தஜல்லி இவைகளெல்லாம், மனிதர்களுடைய கண்ணுக்குத் தெரியும். அதில் எல்லாருக்கு முதல் நம்முடைய நபிநாயகம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தெளிவு பெறுவார்கள். அவர்களுக்குப் பிறகு அல்லாஹுத் தஆலா நாடினதுபோலே யொருவருக்குப் பின்பு ஒருவராகத் தெளிவு பெறுவார்கள். அப்போது பொழுது நிலவுடைய ஒளிவில்லாமலிருக்கும். வானம், பூமி, உள்ரங்கம், வெளிரங்கம் இவைகளெல்லாம் அல்லாஹுத் தஆலாவுடைய வொளிவைக் கொண்டும் வொளிவாக இருக்கும்.

அப்போது மலாயிக்கத்துகளும், மனிதர்களும் பேசாமலிருக்கும்படியாய் அல்லாஹுத் தஆலா முதல் ஹுக்கும் செய்வான். அதனல் எல்லாரும் வாயை மூடிக்கொண்டிருப்பார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா அடியார்களைப் பார்த்து, என்னடியார்களே! ஆதம் தொடுத்துத் துனியா முடிகிறவரைக்கும் நல்ல சொற்கள், கெட்ட சொற்கள் சொல்லிக் கொண்டிருந்தீர்கள். நான் கேட்டுக் கொண்டிருந்தேன். என்னுடைய மலாயிக்கத்துகள் எழுதிக்கொண்டிருந்தார்கள்; இப்போது என்னுடைய வொருசொல்லை நீங்கள் கேளுங்கள். அதாவது உங்கள்பேரிலொரு அநியாயமில்லை. உங்களுடைய அமல்களை உங்களுக்குக் காண்பிக்கப்பட்டு அதினுடைய பிரத்தியை உங்களுக்குக் கொடுக்கப்படும். அப்போது உங்களில் யாதாமொருவன் நலவைக் கண்டவன் அல்லாஹுத் தஆலாவைப் புகழ்ந்து கொள்ளவும், தீங்கைக் கண்டவன் தன்னைப் பழித்துக் கொள்ளவு மென்று சொல்வான். பிறகு சுவர்க்கத்தையும் நரகத்தையுங் கொண்டு வருகிறதற்கு ஹுக்குமாகும்.

அப்போது சுவர்க்கத்தை நிஃமத்துகள், ஸீனத்துகளைக் கொண்டு ஜோடிக்கப்பட்டதாய் இழுத்துக்கொண்டுவந்து அல்லாஹுத் தஆலாவுடைய தஜல்லிக்கு வலதுபுறமாக நிறுத்தப்படும். அப்போது மிகுதமாகிய அமளிகள், பயங்கரங்கள் நன்றாகத் தெரியும்படியாய் நெருப்பை நன்றாயெறிக்கப் படுகிறதுகொண்டு அதற்கு நீளமாகிய சுடர்களுண்டாகும். அதினுடைய பொறிகள் ஒட்டகையுடைய சுமைகளைப்போலே, ஒன்றுக்குப் பின்னலொன்றாகக் குதிக்கும்; அது கண்டு அல்லாஹுத் தஆலாவைத் தஸ்பீஹு செய்கிறதுகொண்டு ஜின்கள், மனிதர்கள், புத்துகள் இவர்களில் நின்றும் தன்னுக்கிட்டிய வஜீபனங்களைத் தேடுகிறது கொண்டு அமளியாகிய சப்தத்துடனே சப்தம் போடும். அதைக்கேட்ட மனிதர்களெல்லாம் நடுங்கிக் கீழே விழுந்து தவழுவார்கள்.

அதிலே யொருவன் 70-அன்பியாக்களுக்குச் சமானமாகிய நன்மையான அமல்களைச் செய்திருந்தபோதிலும் அந்த அமல்களைப் பார்த்து இந்த நாளுக்காக ஒரு அமலாவது நாம் செய்யாமற்போனேமே யென்றெண்ணுவான். மேலும் நரகத்துக்குத் தலை கழுத்துண்டாயிருக்கும். அதினுடைய வாய்களாலும் கண்களாலும் நாலாபுறத்திலுமிருந்து நெருப்புகள் பறக்கும். அப்படிச் சூடுகள் நாற்றங்கள் 70 வருஷத்து அடிப்பாட்டைக்காண அதிகமாகிய தூரமெல்லாம் வீசும். அப்போது அல்லாஹுத் தஆலாவுடைய ஹுக்கும்படிக்கு நரகத்துடைய பேர்களில் துனியாவில் ரூஅத்தாகச் சந்தோஷத்துடனே ஒருபோதும் வருத்தங்களில்லாதபடிக்கு இருந்தவனைக் கொண்டு வருவார்கள்.

இன்னும் சுவர்க்கத்துடைய பேர்களிலவனைப்போலே துனியாவிலென்னேரமு மிடிமை, நசல், பழிப்பு இவைகளைக் கொண்டு சோதிக்கப்பட்டவன் ஒருவனையுங் காணப்படாதே, அப்படிக் கொத்தவனையுங்கொண்டு வருவார்கள். பிறகு சுவர்க்கவாதியைச் சுவர்க்கத்து வாசற்படியில் ஒரு சாஅத்து நேரம் நிறுத்தாட்டிக் கொண்டு வரும்படியாயும், நரகவாதியை நரகத்து வாசற்படியில் ஒரு சாஅத்து நேரம் நிறுத்தாட்டிக்கொண்டு வரும்படியாயும் அல்லாஹுத் தஆலாவுடைய உத்திரவாகும். அவர்கள் இரண்டு பேரும் மறுபடியும் மஹ்ஷரில் வந்த பிறகு அந்தச் சுவர்க்கவாதியை நீ யெப்போதாவது உன்னுடைய வயதில் வருத்தத்தைக் கண்டிருக்கிறாயாவென்று கேட்கப்படும். அப்போதவன் நான் கண்டதில்லை

என்கிலும் என்னுடைய நரம்புகள், ரோமங்கள், மயிர்க்கால் களெல்லாம் மிருதியாகிற லக்ஷணத்தைக் கொண்டும், ரூஹத்தைக் கொண்டும் நிறப்பப்பட்டிருக்கும். இப்போது என்னுடைய மனதில் யாதொரு வருத்தமுந் தோற்றப்பட வில்லையென்று சொல்வான்.

அந்த நரக வாதியை எப்போதாவது உன்னுடைய வயதிலே லெஸ்ஸத்துகள், ரூஹத்துகள் கண்டிருக்கிருயா வென்று கேட்கப் படும். அப்போதவன் என்னுடைய உறுப்புகளெல்லாம் நொம்பலம், நோக்காடு, ரூஹத்துக் கேடுகளைக்கொண்டு நிரப்பப்பட்டிருக்கிறது. அதனாலே ரூஹத்தும், லெஸ்ஸத்தும் எப்போதாவது நான் அனுப வித்த தாய் எனக்குத் தோற்றப்பட வில்லையென்று சொல்வான். அப் போது அமல்களெல்லா மதினுடைய சூறத்துகளைக் கொண்டு வரும். அதிலேதொழுகை சொல்லும், ஆண்டவனே நான் தொழுகை ஹாலி ருக இருக்கிறேன். நோன்பு சொல்லும், ஆண்டவனே! நான் நோன்பு ஹாலிருக விருக்கிறேன். இப்படிப் போலதான் ஸக்காத்து; ஹஜ்ஜு, ஷஹாதுவுரிமை விடுகிறது; குர்ஆன் ஓதுகிறது; திக்ரு செய்கிறது மற்று முண்டான அமல்களெல்லாம் ஆண்டவனே! நான் ஹாலிருக விருக்கிறே னென்று சொல்லும். அப்போதவர்களுக்கு நீங்கள் நன்மை களாக விருக்கும். இருங்கள் உங்களைக் கொண்டு காரியமிருக்கு தென்று ஹுக்குமாகும். இஸ்லாம் வந்து, ஆண்டவனே! நீசலா மென்கிற பேரையுடைய சலாமாக விருக்கும், நான் இஸ்லாமாக விருக் கும், நான் ஹாலிருக விருக்கிறேன் என்று சொல்லும். அதற்கு நீ கிட்ட ஹாலிருகவே யிரு. உன்னைக் கொண்டே கேள்வி கணக் குக் கேட்கப்படுமென்று ஹுக்குமாகும். இஸ்லாமென்கிறது கலிமா வுடைய மஃனவை நிண்ணயங் கொள்கிறதற்காக விருக்கும்.

பிறகு மலாயிக்கத்துகள் மனிதருடைய இல்முடைய கடுத்தத்தை அவரவர்களுடைய கடுத்சங்கள் அவரவர்களிடத்திற் சேரும்படிக்குப் பரத்தும் படியா யுத்திரவாகும். அப்போதவர்களுடைய கடுத்தங்கள் அவர் கையிலே கதாவில்லாமற் போய்ச்சேரும். ஆனல் மூஃமீனன வர்களுக்கு முன் புறமாக வலது கையில் வரும். காபிருனவர்களுக்கு இடது கையிற் பின் புறமாக வரும். அவரவர்கள் கடுத்தத்தைப் பார்ப்பார்கள். அல்லாஹுத் தஆலா கேள்வி கணக்கென்கிற ஆயத் துப்படிக்கு அவன் ஒரே பார்வையில் நன்மையாளி தீமையாளி அடங் கலையும் பார்ப்பான். ஆனலவனுடைய ஹுக்குமத்தைக் கொண்டு

அவர்களுடைய மறுத்தபா ஹால்கள் வெளியாகிறதற்கு இக்த்தியார் அவர்களுக்குக் கொடுப்பான்.

பிறகு காபிரானவர்கள் இடத்தில் ஓர்மைப் பாட்டைக் கொண்டும், இணையைக் கொண்டும் கேட்கப்படும். அவர்கள் நாங்களொரு போதும் இணை வைக்கவில்லை யென்று சொல்வார்கள். அவர்களைக் குற்றவாளி யாக்கிறதற்கவர்கள் இணை வைத்து கொண்டிருந்த பூமியுடைய துண்டையும் அவர்களுக்கு நேரேயிருந்த வானத்துடைய துண்டையும், அந்த இரவு, பகல், மாதம் இவ்வகைகளையும் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு அன்றுடு அவர்களுடைய பிச்சளங்கள் செய்யப்பட்ட அமல்களை யறிவிக்கப்படுமல்லவா, அவரையும் ஹாஸிறுப்படுத்தப்படும். அவர்களுடைய சொற் செயல்களை யெழுதிக் கொண்டிருந்த மலாயிக்கத்துகளை ஷாஹிதாகக் கொண்டு வந்து விடப்படும். அவர்கள் ஒருவருடைய சொல்லையும் கபூல் செய்ய மாட்டார்கள்.

அப்போதவர்களுடைய வாய்களை முத்திரித்து அவர்களுடைய உறுப்புகள் ஷாஹிது சொல்லும்படியாய்ச் சொல்லப்படும். அந்த உறுப்புகள் ஷாஹிது சொல்வதைக் கேட்டு, அதை யேசி திட்டி இந்தக் காரியம் உங்களுக்காக நாங்கள் செய்வோமென்று சொல்வார்கள். அப்போது உறுப்புகள் அல்லாஹுத் தஆலாவுடைய உத்திரவு கொண்டு நாங்கள் கைவசமாக விருந்தோம். இப்போது அவனுடைய உத்திரவு கொண்டு பேசினோம். நீங்கள் அநீதஞ் செய்தீர்கள். எங்களைப் படைத்த நாயனுடனே யிணை செய்கிறது கொண்டு நீங்களெங்களையும் உங்களுடனே ஆபத்துகளில அகப்படும் படியாய்ப் பண்ணுனீர்கள். அல்லாஹுத் தஆலா எங்களை உங்கள் கைவசமாகப் பண்ணி வைத்ததுக்கு அவனுக்குச் சுக்கூறு செய்யாமற் போனீர்கள். என்ன காரியத்துக்கு எங்களை உங்கள் வசம் பண்ணி வைத்தானென்கிறதை யறியாமற் போனீர்கள். நாங்களிப்போது உண்மையை தவிர மற்றொன்றையுஞ் சொல்ல மாட்டோமென்று சொல்லுவார்கள்.

அப்போது அவர்கள் குற்றவாளியாய் நாங்கள் இணைசெய்தது மெய்தானென்று சொல்லுவார்கள். மறுபடியும் பலவகையான தட்டுதலான விண்ணப்பஞ் செய்வார்கள். முதல் அந்தச் செய்திகள் எங்களுக்குத் தெரியமாட்டாது. எங்களுக்கொருவர் வந்து சொல்லவுமில்லையென்று சொல்வார்கள். அதற்கவர்களைப் பார்த்து அல்லா

ஹூத் தஆலா நபிமார்களை வெளிரங்கமான திஷ்டாந்தரங்களுடனே யனுப்பிவைத்தேன். அவர்கள் தூதாகவந்து உங்களுக்கு விசளமறிவித்தார்கள். நீங்களெங்கே காபிலாக விருந்தீர்கள். அவர்கள் சொற்படிக்கு நீங்கள் நிண்ணயமேன் கொள்ளவில்லை யென்று கேட்பான். அதற்கு அவர்கள்; ஒரு நபிமார்களு மெங்களிடத்தில் வரவில்லை. ஒரு விசளமு மறிவிக்கவில்லை யென்று சொல்வார்கள்.

அப்போது முதல் நூஹூ அலைஹிஸ்ஸலாத்தை ஹாஸிறு படுத்தப்படும். அவர் தம்முடைய ஜெளமுகளைப் பார்த்து, பொய் சொல்லுகிறவர்களே நான் தொளாயிரத்தைம்பது வருடம் வரைக்கும் அல்லாஹூத் தஆலாவுடைய தூதை உங்களுக் கறிவித்து எத்தனை வகையிலேயோ உங்களுக்குப் பயங்களுருத்தினேன். இரகசியத்திலும் பராசியத்திலும் அல்லாஹூத் தஆலா வுடைய ஒருமைப்பாட்டைத் தரிபாடுபண்ணுபடியாய் அதற்காக எத்தனை திஷ்டார்ந்தாங்களையோ காண்பித்து எத்தனை வருத்தத்துடனே இன்ன இன்ன மஜிலீசிலே நானின்ன இன்னபடிக்குச் சொன்னதற்கு நீங்கள் இன்ன இன்னபடிக்குச் சொல்லவில்லையா வென்று முன்னாலே யவர்களுடைய சொல்லுக்கு அல்லற் றட்டிச்சொன்ன சொல்களுடைய கிஸ்ஸாக்களை சொல்லிக் காண்பிப்பார்.

அதற்கந்தக் காபிரானவர்கள், நீரெங்களிடத்தில் வந்து தூதாகிய சொற்கள் சொன்னதுமில்லை, நாங்கள் உம்மை யொரு போதும் கண்டதுமில்லை அறியவமாட்டோ மென்று சொல்லுவார்கள். அப்போது அல்லாஹூத் தஆலா நூஹே! நீ ரவர்களுக்குத் தூதாகிய சொற்கள் சொன்னதற்குச் சாட்சிகள் கொண்டு வாரு மென்று திருவுளமாவான். அப்போது நூஹூ அலைஹிஸ்ஸலாம், சிறப்புடைய நாயனே! என்னுடைய சாட்சிகளாகிறது முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்ல மவர்களுடைய உம்மத்துகளாக விருக்குமென்று சொல்வார். அப்போது அந்த உம்மத்துகளுடைய உலமாக்கள் சித்திகீன்கள் ஷூஹதாக்களை ஹாஸிறப்படுத்தி நூஹூ அலைஹிஸ்ஸலாத்துடைய உம்மத்துகளுக்கு அல்லாஹூத் தஆலாவை ஒருமைப்பாடாக வணங்கவேண்டு மென்று அவன் புறத்தாலே தூதாகிய சொல்லுகள் சொன்னது உங்களுக்குத் தெரியுமா வென்று கேட்கப்படும். அப்போதவர்கள் குறுஆனில் நின்று மொரு ஆயத்தோதுவார்கள். அதன் பொருளாவது நாம் திடனாக

நூஹூ அலைஹிஸ்ஸலாத்தை யவருடைய கௌமுகளளிலே யனுப்பி வைத்தோம், அவர்களிலே அவர் 50-வருஷங் குறைவு, 1000-வருஷம் வரைக்கும் தரிபட்டிருந்தார். அவர்களுக்கு தூபான் வந்து பிடித்தது. அவர்கள் அநீதஞ் செய்தவர்களாகவிருக்குமென்கிற ஆயத்துடைய தலீலைக் கொண்டு நாங்கள் அறிந்து சாட்சி சொல்கிறோமென்று சொல்லுவார்கள்.

அப்போது இவர்கள் நாங்களிருக்கிறபோது நீங்களிருக்கவுமில்லை, யெங்களுடைய அஹ்வால்களை நீங்கள் பார்க்கவுமில்லை, யெங்களுடைய பேச்சை நீங்கள் கேட்டதுமில்லை. அப்படியிருக்க எங்களுடைய காரியத்தில் உங்களுடைய சாட்சி ஒருபோதுங் கேட்கப்படாதென்று சொல்லுவார்கள். அப்போது நம்முடைய நாயகம் நபி ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம், என்னுடைய உம்மத்துகள் உண்மை சொல்கிறார்கள். அவர்களுக்குத் துனியாவிலே தன்னாலே பார்க்கிறதைக்காண மெத்தவும் பெலவந்தமா யிருக்கு மென்னதக்க விசடத்தைக்கொண்டும், அவர்களுடைய காரியத்தைக் கொண்டும் கெட்டியாக அல்லாஹூத் தஆலா அறிவித்திருக்கிறானென்று திருவுளமாவார்கள். அதைக்கொண்டு மந்தக் காபிரீன்களைக் குற்றவாளிகளாக்கப்படும்.

அப்படிப்போலேதான் ஹூது அலைஹிஸ்ஸலாம், ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம், இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம், லூத்து அலைஹிஸ் ஸலாம், ஷுஐபு அலைஹிஸ்ஸலாம், மூஸா அலைஹிஸ்ஸலா மிவர்களுடைய உம்மத்துகளும், மற்றுமுண்டாகிய பேர்களும் ஒருவருக்குப் பின்னொலொருவரைச் கேட்கப்பட்டுக் குற்றவாளியாக்கப்படும். பிறகு எல்லாக் காபிர்களும், நாங்கள் தெரியாதபடிக்குத் தப்பிதஞ் செய்தோம் என்கிலும் சிறிதுபேர்க ளெங்களை வழிகேடராக்கிப் போட்டார்கள், ஆனபடியினாலே யெங்களுடைய அதாபுகளை அவர்களுக்குக் கொடுத்து எங்களை மறுபடியும் துனியாவி லனுப்பி வையும். நாங்கள் நல்ல அமல்களைச் செய்து உன்னுடைய ஹூக்கும்போல் நடக்கிறோமென்று சொல்வார்கள். அப்போது அல்லாஹூத் தஆலா, உங்களுடைய சொற்களை யொருபோதுங் கபூல் செய்யமாட்டேன், உங்களுக் கறிவிக்கவேண்டியது ஹக்கிருந்ததை அறிவித்தோம், உங்களுக்கு நீளமாகிய காலமும், புறசத்தும் கொடுத்திருந்தோம், இனி மேல் துனியாவி லொருபோதும் மீளுகிறதில்லை யென்று சொல்வான். பிறகு காபிரானவர்களுடைய நல்ல அமல்களை யவ்விடத்திலேயே யழிக்கப்படும்.

கெட்ட அமல்களைச் சாபித்தாக்கி வைக்கப்படும், அவர்களுடைய நல்ல அமல் புத்துகளுக்காகச் செய்தபடியினால், அல்லாஹுத் தஆலா கபூல் செய்யமாட்டான், அவர்கள் அல்லாஹுத் தஆலா வுடைய ஏவல்களுக்கு மாறுசெய்த படியினால் அந்த அமலுக்கும் பிரத்தி துனியாவிலேயே முதல்களதிகமாக்கி வைக்கிறது கொண்டு செய்து போட்டான். பிறகு அல்லாஹுத் தஆலா ஆதம் அலைஹிஸ் ஸலாத்துக்கு அவருடைய பிச்சளத்தில் நரகவாதிகளை வேறுக்கும் படியா யுத்திரவு செய்வான்.

அப்போது ஆண்டவனே! எந்தக்கணக்குப்படிக்கு வேறுக்கு கிறதென்று ஆதம் அலைஹிஸ்ஸலாம் கேட்பார்கள். அப்போது 1000 பேரிலே யொருவன் சுவர்க்கவாதியும், 999-பேர் நரகவாதி களென்றும் உத்திரவாகும். அப்போது மனிதர்களுக் கொருபோது மில்லாத கலக்கமுண்டாகும். பிறகு அவர்கள் செய்த அமல்களுக்கு அவரவர்களுடைய நாயனிடத்தில் அதற்குப் பிரத்தி தேடிக்கொள்ள வேணுமென்று உத்திரவாகும். அப்போது அந்தக் கூட்டங்கள் தாங்கள் தாங்கள் வணங்கின நாயனைத் தேடுவார்கள். அவர்களுடைய சூரத்துகளில் ஷைத்தானுடைய றூஹுகள் புகுந்து அவர்களைத் தூங்குகிற போதும், விழித்துக் கொண்டிருக்கிற போதும் அவர்களை வழிகேடராக்கினபடியினால் இப்போது அந்த சூரத்துகளை யவர்களுக்கு முன்னாலே ஹாலிறுப்படுத்தப்படும். அப்போது புத்துகளை வணங்கின வர்கள் அவர்களுடனே யிருப்பார்கள். ஈஸா அலைஹிஸ்ஸலாம், மலா யிக்கத்துகள் மற்று முண்டான அன்பியாக்கள், அவுலியாக்கள் வணங் கினதற்கும் அந்தக் காபிர்களிவர்களைக் கொண்டு கோபமா யிருந்த தற்கும் உள்ளமையில் ஷைத்தான்கள் அந்தக் காபிர்களுக்கு இமாமாக விருந்தபடியினால் இப்போதும், அவர்களுக்கு முன்பாக அந்த ஷைத் தான்களை ஹாலிறுப்படுத்தப்படும். அப்போது மலாயிக்கத்துகளவர் களைப் பார்த்து இவர்கள்தானா நீங்கள் வணங்கின நாயனென்று கேட் பார்கள். அதற்கவர்கள் வாய்பேசாமல் தலைகவிழ்ந்திருப்பார்கள். அப் போது மலாயிக்கத்துகள் அவர்களுக்குப் பின்னாலே நீங்கள்போய் உங்களுடைய அமல்களுக்குப் பிரத்தி தேடிக்கொள்ளுங்களென்று சொல்வார்கள்.

அப்போதந்தக் காபிரானவர்களுக்குத் தாகமதிமாகவுண்டாகி அவர்களிடத்தில் தண்ணீர் கேட்பார்கள். அதற்கு அவர்களுக்கு

தண்ணீரைப்போலே கானலுண்டாகும். அவர்களதை தண்ணீரென்றெண்ணிப் போவார்கள். அதாகிறது உள்ளமையில் நெருப்பாகவிருக்கும். அவர்கள் கிட்ட போனவுடனே அதுகளுடைய சுடர்களைக்கொண்டு அவர்களைக்கொல்லும். சிறிது கூட்டத்தாரை நரகத்திலிருந்து ஒரு கழுத்துப்போலே வந்து பறவைகள் தானியங்களையெப்படி பொறுக்குமோ அப்படிப்போல் அவர்களைப் பொறுக்கி நரகத்துக்குள்ளே போடும். சிறிதுபேர்கள் அந்த நெருப்புக்கு அடுத்தாமையாகப் போய் அபயசத்தம் போட்டுக்கொண்ட விடத்தில் நிற்பார்கள். அப்போது வம்புத்தனமான் மலாயிக்கத்துகள் ஒருவனையொருவன் மேலேபோட்டு இழுப்பார்கள், ஒருவனைத் தலைமுடியையும் காலையும் பிடித்து இழுத்துக்கொண்டு போய் நரகத்திற் போடுவார்கள். மற்றுமுண்டாகிய காபிராகிய கூட்டங்கள் நரகத்துடைய வாசல்களிலிருக்கப்பட்ட நெருப்பில் வந்து கூடிக்கொண்டிருப்பார்கள்.

அப்போது ஷைத்தான் மிகுதியாகிய நெருப்புடனே வந்து நின்றுகொண்டு எல்லாருமுள்ளே வாருங்களென்று கூப்பிடுவான். அப்போதவர்கள் அவனுகிறவன் நமக்கு எஜமானன படியினலிப்போது அவனிடத்தில் நாம் போனல் நம்மையிந்த அதாபைவிட்டுங் கலாசுபெற வைக்கிறதற்கு வழிதேடியிருப்பானென்று உள்ளே புகுந்து அவனிடத்தில் வருவார்கள். அவன் நீங்களறிந்து கொள்ளுங்கள் உங்களைப் படைத்த நாயன் அல்லாஹு தஆலாவாக விருக்கும், நானுங்களுக்கும் உங்களுடைய தகப்பனுக்கும் பகைவனகவிருக்கும், ஆனல் ஒருவரையும் நான் அநீதஞ்செய்து வஞ்சித்து என்னிடத்தில் இழுத்துக்கொள்ளவில்லை, என்கிலும் உங்களுக்குச் சத்தங் கேட்பிவித்து ஆசையூட்டினேன், நீங்கள் உங்களுடைய அசல் கேட்டினுலேயும், அவட்கையினுலேயும் அந்த வசுவாசை யுண்மையென்றெண்ணி யதைத்தடந்தீர்கள், ஆனபடியினலே இப்போது நீங்களென்னைப் பழிக்கவேண்டாம், உங்கள் நபுசைப்பழித்துக் கொள்ளுங்கள். இந்த நரகத்தைவிட்டு உங்களைக் கலாசுபெற வைக்கிறது உங்களுக் குண்டாகுமென்கிற வெண்ணங்கொஞ்சமும் வைக்கவேண்டாமென்று ஷைத்தான் சொல்லுவான்.

அப்போது ஒருவருக்கொருவர் திட்டிப் பேசிக்கொள்ளுவார்கள். இன்னும் ஒருவருடைய அதாபை ஒருவர்பேரிற் போட்டுக் கொஞ்சம் இலேசாக விருக்கலாமென்று நாடுவார்கள் என்கிலும் சக்தி

பெறமாட்டார்கள். மலாயிக்கத்துகள் ஒவ்வொருவனை இழுத்திழுத்துக் கொண்டு போய் அவனுடைய அமலுக்குத் தக்கதாக எந்தெந்த இடத்திற் போட்டு அதாபு செய்யவேணுமோ அந்தந்த இடத்திற் கொண்டுபோய் போடுவார்கள். நரகத்து நெருப்புடைய சூடாகிறது துனியா நெருப்புடைய சூட்டுக்கு 70-பங்கதிகமாக விருக்கும். துவக்கத்தில் அந்த நெருப்புடைய நிறம் வெள்ளையாக விருந்தது. 1000-வருஷத்துக்குப் பிறகு 1000-வருஷம் வரைக்கும் சிவப்பாக விருந்தது. இப்போது கறுப்பாக விருக்கும். நரகத்துக்கு எழு தட்டுண்டு. அதில் ஒவ்வோரு தட்டுக்குப் பெரிய பாரதூரமான வாசற்படி யிருக்கும். முந்தினது முஃமீனானவர்களிற் பாவஞ் செய்த பேர்களுக்கும், காபிரானவர்களிற் குபிருடனே அன்பியாக்களுக் கொத்தாசை உதவிசெய்த பேர்களுக்குமாக விருக்கும். மற்ற தட்டுகள் காபிரான பேர்களுக்கு மட்டுமாக விருக்கும். ஒன்று புத்தை யிணை வைத்து வணங்கினவர்களுக்கும் ஒன்று, மஜூஸிகளுக்கு, ஒன்று காபிரான முல்ஹறதுகளுக்குமா யிருக்கும். அதிலே எல்லாத்துக்குங் கீழ யிருக்கிற தட்டு முனபிக்கீன்களுக்கா யிருக்கும். முந்தின தட்டுடைய பெயர் ஜஹன்னம், இரண்டாவது ஜஹீம், மூன்றுவது சஈறு, நாலாவது சக்கறு, ஐந்தாவது லலா, ஆறுவது ஹாவியா, எழாவது ஹூதமா. ஒவ்வொரு தட்டாகிறது மிகுவிஸ்தீனமா யிருக்கும் அதிலே பலபல வகையான அதாபுகளு மடையாளமான தலங்களு முண்டா யிருக்கும். அதுகளி லொருதலமாகிறது அதற்கு பேர் கை அதினுடைய அதாபுடைய கடிசைவிட்டும் மற்றுமுண்டான நரகம் ஒரு நாளைக்கு 400-தரம் அல்லாஹூ தஆலாவிடத்திலே ஹாலிருகவே இன்னுமொரு தலமுண்டு அதற்குப் பேர் ஜம்ஹறீர். அதிலே கடிசாகிய குளிருடைய அதாபுண்டா யிருக்கும். இன்னும் ஒரு தலம் அதற்குப் பேர் குபபுல் ஹூசுன், சலிப்புடைய கிணறென்று சொல்லப்படும். இன்னுமொரு குடுப்புண்டு அதற்குப் பேர் தீனத்துல் குபால், இன்னுமொரு மலையுண்டு அதற்குப்பேர் சஊஊது. காபிரானவர்களை யடிக்கிறது கொண்டும், ஒட்டுகிறது கொண்டும் 7-வருஷம் வரைக்கும் அதிலேற்றப் படும். அவ்விடத்தி லிருந்து காலா லுருட்டி விடப்படும். அவர்களுருண்டு கொண்டுவந்து நரகத்துடைய ஆழத்திலே போய்ச் சேருவார்கள்.

இன்னுமொரு குளமுண்டு, அதற்கு பேர் ஜமீமென்று சொல்லப் படும். அதினுடைய தண்ணீராகிய கடிசாகிய சூட்டையுடையதா

யிருக்கும். அதை வாய்கிட்டக் கொண்டு போனவுடனே மேலுதட்டைச் சுடுகிறது கொண்டு வீக்க முண்டாய் அதனு லவனுடைய மூக்குக் கண்ணெல்லாத்தையும் மூடிப்போடும். கீழுதடு வீக்க முண்டாய்த் தொப்புள் நெஞ்சு வரைக்கும் வந்து சேரும். நாக்கைச் சுட்டு வாயைக் கிட்டுமையாக்கும். தொண்டையிலே போனவுடனே குடல்கள் இரைப் பட்டைகள் எல்லாந் துண்டந் துண்டமாகிப் போகும். இன்னமொரு குளமுண்டும், அதற்குப் போகீசுலீ னென்று சொல்லப்படும். நெருப்பி லெரியப்பட்ட காபிரான பேர்களுடைய ஊனங்கள், சீழ்கள், அவ் விடத்தில் வந்து சேரும். இன்னுமொருதல முண்டும், அது பெருமை யடிக்கப்பட்ட பேர்களுக்குத் தலமா யிருக்கும். அதற்குப் பெயர் கபு என்கிற ஓடை யென்று சொல்லப்படும், அப்படிப்போலே தான் இன்னும் மிகுதியாகிய தலங்களுண்டு. நரகத்துடைய பேர்கள் சிறிது பேர்களுக்கு அதாபு அதிகமாகிறதற்காக அவர்களுடைய சடலங்களை நீளம் அகல முடையதாக்கப்படும். எல்லா உறுப்புகளும் எல்லா ரோமக்கால்களும் பலபல வகையாகிய அதாபுகளிற் சுடுகிறது, அடிக் கிறது, பாம்பு கடிக்கிறது, தேள் கொட்டுகிறது, முள்ளுகள் பொத்து கிறது தோல்களைக் கிழிக்கிறது, புதிதாயுண்டாகிற சதையில் ஈக்களை யுட்காத்துகிறது, இப்பேர்கொத்த வெளிரங்கமாகிய அதாபுகளைக் கொண்டும், வருத்தஞ் சலிப்பு, விசாரம், மேலெண்ணம் அற்றுப்போ கிறது, தர்க்கம்பண்ணிக் கொள்ளுகிறது, இப்பேர்க்கொத்த வகை வகையான உள்ரங்கமான அதாபுகளைக் கொண்டும் வெகுகாலமாக அதாபு படுத்தப்படும்.

காபிரான பேர்களிலே சிறிது பேருக்குத் தோலாகிறது நாற்பது திருகாய்ச் சட்டையுடைய பருப்பமாகவும், பல்லுகள் மலைகளைப்போல வும், இருக்கிற தலம் மூன்று நாளுடைய அடிப்பாடாகவும், அதற்குத் தக்க உறுப்புகளு முண்டாயிருக்கும். நரகத்துக்கடிசாகிய சூட்டிலே நின்று நெருப்புப்போய்ப் படவும், சடலங் கருகிப் போனவுடனே அதாபை யனுபவிக்கிறதற்காக உடனுக்குடனே புதிதாகிய சடல முண் டாகும். ஒரு சாஅத்திலே 700-தரம் சடலத்தைப் புதிதாக்கப்படும். அவர்களுடைய அசலுறுப்புகளுக்குப் பனுவில்லை யெங்கிலும், சதையும் தொலியுங் கருகிப் போனவுடனே அடிக்கடியுண்டாகும். இன்னும் அதாபுகளுக்கெல்லாஞ் சமானமாகில் கடிசான பசியையுடைய அதாபும் நீண்ட காலம் அந்தக் காபிர்கள் பேரிலுண்டாகும். அப்போது

அதற்குதாங்க மாட்டாமல் வஜீபனங் கேட்பார்கள். ஜஹீமென்கிற நரகத்துடைய ஆழத்தில் முளைத்திருக்கிற உறைப்புக், கசப்பு, நஞ்சு முள்ள இவைகளுடனே கெட்டியாகிய சதுரக்கள்ளியைக் கொண்டு வந்து கொடுக்கப்படும் என்கிலும். அதாகிறது துனியாவிலே பூவையும் தண்ணீரையுமுள்ள சதுரக்கள்ளிபோலல்ல, அதையவர்கள் பசிபொறுக்கக் கூடாதபடியினலே தின்றவுடனே தொண்டையில் விக்கிக் கொள்ளும்படியாய் அதாபு செய்யப்படும்.

அப்போது துனியாவிலே வஜீபனம்விக்கிக் கொண்டால் தண்ணீரைக்கொண்டு இறக்கிவைக்கிறதாசசுதேயென்று நினைத்துத் தண்ணீர் கேட்பார்கள். அப்போது ஹமீமென்கிற ஓடையிலிருக்கிற சுடாகிய ஊனநீரைக் குடிப்பாட்டும்படியாய் உத்தரவாகும். அந்தத் தண்ணீர் வாய்க்கிட்டப் போனவுடனே வாய்களைச் சுட்டுப்போடுகிறது கொண்டும், உதடுகள் வீங்கி முன் நெற்றிவரைக்கும் நெஞ்சுவரைக்கும் போய் எடுத்தும், நாவைச்சுட்டுக் கருக்கிபோடும். தொண்டை குழியும் கிழிந்து குடல்களெல்லாந் துண்டு துண்டாய்ப் போய் பின் துவாரத்தாலே வெளியேவரும். இவைகளினலே வருத்தம் பொருக்காமல் நரகத்திலிருக்கிற 19-மலக்குகளிலே தலைமையாயிருக்கிற மாலிக்கிடத்தில் மெத்தவும் வணக்கத்துடனே மாலிகே! யெங்களை இந்த அதாபை விட்டும் ருஹத்துப் பெறும்படியாய் யெங்களை மௌத்தாக்கிப் போடு மென்று சொல்வார்கள். 1000-வருஷம் வரைக்கும் இந்தப்படி அழுது கொண்டு அபயசப்தம் போட்டுக் கொண்டிருப்பார்கள். 1000-வருஷத்துக்குப் பிறகு ஒரு தரம் மாலிக் அவர்களைப்பார்த்து அல்லாஹுத் தஆலா உங்களை யென்நாளும் ஹயாத்தா யிருக்கும்படியாய் படைத்தான், உங்களுக்கு மௌத்தில்லை யென்று சொல்வார். பிறகு ஆயிரம் வருஷம் வரைக்கும் அப்படிப்போலே அல்லாஹுத் தஆலா யிடத்தில் ஆண்டவனே யெங்களுடைய றூஹை வாங்கிப்போடு, எங்களை உன்னுடைய றஹ்மத்தைக் கொண்டு இந்த அதாபை விட்டுக் கலாசு பெற வையென்று முறையிட்டுக் கொண்டிருப்பார்கள். ஆயிரம் வருஷத்துக்குப் பிறகு அல்லாஹுத் தஆலாவுடைய ஹுக்கும், வாயை மூடிக்கொண்டிருங்கள் என்னுடனே யொன்றும் பேசவேண்டாம்; உங்களுக்கு அந்த நரகத்தை விட்டுங் கலாசு பெறவைக்கிறதில்லை யென்றுண்டாகும்.

அப்போது அல்லாஹுத் தஆலாவை ஆயிரம் வருஷம் கூப்பிட்டதற்குக் கடைசியில் மேலெண்ணாங் கேடுண்டாச்சுது. நாம் சபூறு கேடாக விருக்கிறது, சபூறு செய்கிறதும் சரியாக விருக்கிறது வாருங்கள் சபூறு செய்யலாம் இதைவிட்டுக் கலாசு பெறுவதற்குப் பாதையில்லையென்று சொல்லுவார்கள். இப்படியாக விருக்கும் காபிரான பேர்களுடைய கால்கள் நரகத்திலே யவர்கள் வருகிறதும் போகிறதும், ஓரிடத்திலிருந்து ஓரிடத்திற்குப் போகிறதும், மஹ்ஷரிலிருந்து ஜஹன்னத்துக்கு வருகிறதும், முகங்குப்புற்றவர்களாகவும், அவர்களுடைய கால்கள் உயர்ந்து தலையிலே நிற்கிறவர்களாகவும், இந்த கால்களுடைய வருத்தங்களிலே நின்றும் பயந்து கொண்டிருப்பார்கள். அவர்களுடைய முகசூரத்துகள் மாற்றப்பட்டு சிலபேர்கள் நாயுடைய சூரத்து, சிலபேர்கள் ஓநாயுடைய சூரத்து, சிலபேர்கள் எலியுடைய சூரத்து, சிலபேர்கள் குரங்கினுடைய சூரத்து, சிலபேர்கள் பாம்புடைய சூரத்து, சிலபேர்கள் கழுதையுடைய சூரத்து, சிலபேர்கள் வேறுவேறான சூரத்துகளைக் கொண்டு மிருப்பான். துனியாவிலே பெருமைகளடித்துக்கொண்டு தகப்பனாக யிருந்தவர்கள் மஹ்ஷரிலே எறும்புகளுடைய சூரத்துக் கொண்டு வருவார்கள்.

அப்போது நிறப்பமாகிய பழிப்புடனே. மனிதர்களுடைய ஹாலிலே யகப்பட்டு நசுங்கி அதாபு படுவார்கள். காபிரானவர்களுடைய ஹாலாகிறது இப்படியாக யிருக்கும். ஆனால் இஸ்லாமானவர்கள் மஹ்ஷரிலே பலபலவகையாகிய மறுத்தபாக்களி லிருப்பார்கள். சிலபேர்கள் துனியாவில் அல்லாஹுத் தஆலாவுடைய வலுப்பத்தை நாடி நன்மையுடைய பேர்களைச் சந்தித்து உவப்பாக யிருந்து கொண்டு தீமையுடைய பேர்களை வெறுத்துத் தூரவாக்கி யிருந்தார்களே அவர்கள் அல்லாஹுத் தஆலாவுடைய தஜல்லிக்கு வலது புறமாக ஒளியினுலுண்டாகிய மின்பரின்மேலிருப்பார்கள். சிலபேர்கள் நிரப்பமாகிய தவக்கலுடனே தீன் துன்யாவுடைய காரியங்களில் ஹக்கு அல்லாததை கொண்டு பார்க்க மாட்டார்களே அவர்களுடைய முகங்கள் பதினாலாம் பக்கத்து நிலவுபோலாக்கிக் கேள்வி கணக்கிடையிலிருந்து சுவர்க்கத்துக்குப் பத்திரமாக அப்புறம் ஒரு கூட்டமாய் வேறே யாக்கப்படும்.

சிலபேர்கள் துனியாவை விட்டு மிடிமையுடனே பீஸபீல் செய்தார்களே அவர்களையும் கேள்வி கணக்கின்றியே சுவர்க்கத்திற்கு பாத்திரமாக்கி அவர்களையு மொருகூட்டமாக வேறேயாக்கப்படும்.

இன்னுஞ் சிலபேர்கள் இரவுகளெல்லாம் அல்லாஹுத் தஆலாவுடைய நாட்டத்துடனே அதபாக இபாதத்துச் செய்வார்களே அவர்களுக்கு சாதத்துன்னுசு மனிதர்களுக்கெல்லாம் நாயகமானவர்கள் என்கிற பேரைக்கொண்டு சங்கை செய்து கேள்வி கணக்கில்லாமலே சுவர்க்கத்துக்குப் பாத்திரமாக்கி அவர்களையும் ஒரு கூட்டமாக வேறேயாக்கப் படும். சிலபேர்கள் எல்லா வேளையிலும் இபாதத்துச் செய்கிறதை விட்டும் மறதியாகவிராமல் சங்கடமான வேளையிலும், சந்தேகமான வேளையிலும், அல்லாஹுத் தஆலாவைச் சுக்கூறு செய்து புகழ்ந்து கொண்டிருந்தார்களே அவர்களுக்கு அஷறபன்னுசு மனிதர்களிலே மெத்தவுஞ் சிறப்பானவர்களென்கிற பேரைக்கொண்டு சங்கைசெய்து அவர்களையும் வேறே யாக்கப்படும்.

மற்றுமுண்டாகிய மூஃமீனானவர்கள்; ஸாலிஹானவர்கள், முனுபிக்கானவர்கள், இவர்களைப் பல பலமாதிரியாக வைக்கப்படும்; தொழுகையாளிகள் ஒரு தலத்தில், நோன்பாளிகள் ஒரு தலத்தில் ஸக்காத்து கொடுத்தவர்கள் ஒரு தலத்தில், அல்லாஹுத் தஆலாவுக்குத் தாட்சியாக வழிப்பட்டிருந்தவர்கள் ஒரு தலத்தில், நன்றி செய்து கொண்டு நற்குணமாக விருந்தவர்கள் ஒரு தலத்தில், அல்லாஹுத் தஆலாவைக் கொண்டு மனிதர்கள் பேரிலே கிருபையா யிருந்தவர்கள் ஒரு தலத்தில், திக்றை யுடையவர்கள் ஒரு தலத்தில், விருதை யுடையவர்கள் ஒரு தலத்தில், நெறிநீதஞ் செய்தவர்கள் ஒரு தலத்தில், உண்மைச் சொல்லுகிறவர்கள் ஒரு தலத்தில், வார்த்தைப் பாட்டை நிறைவேற்றினவர்கள் ஒரு தலத்தில், சாலிஹாகிய உலமாக்கள் ஒரு தலத்தில், துனியாவைத் தூஷணித்து இபாதத்துச் செய்து கொண்டிருந்தவர்கள் ஒரு தலத்தில்.

மற்றும் அவாம் கல்குகள் ஆடுமாடுகளைப் போலே ஒரு தலத்தில், அநீதஞ் செய்கிற ஹக்கீம்கள் ஒரு தலத்தில், கூன் செய்தவர்கள் ஒரு தலத்தில், ஸினுச் செய்தவர்கள் ஒரு தலத்தில், சதிமானஞ் செய்தவர்கள் ஒரு தலத்தில், கள்ளர்கள் அடிக்கிறவர்கள் ஒரு தலத்தில், தாய் தகப்பனுக்கு மன நோக்காடு செய்தவர்கள் ஒரு தலத்தில், மனிதர்களை அநீதஞ் செய்தவர்கள் ஒரு தலத்தில், கள்ளுச் சாராயம் குடித்தவர்கள் ஒரு தலத்தில், வட்டி தின்றவர்கள், எத்தீம்களுடைய முதல்களைத் தின்றவர்கள், ஸக்காத்து கொடுக்காதவர்கள் ஒரு தலத்தில், அமானிதங்களைச் சதிமானஞ் செய்தவர்கள் ஒரு தலத்தில்,

வார்த்தைப் பாட்டை நிறைவேற்ருதவர்கள் ஒரு தலத்தில், இப்படிப் போலேதான் ஆயிரமாயிரங் கூட்டங்கள் இரண்டு சிபத்து, மூன்று சிபத்து, நாலு சிபத்துடையவர்கள், இன்னு மிப்படிப் போலதான் நன்மையான நடத்தையுடையவர்கள், தீமையான நடத்தையுடையவர்கள், வேறு வேரு யிருப்பார்கள்.

ஆடுமாடுகளுடைய ஸக்காத்து கொடுக்காதவர்களை முதுகின் பேரில் மல்லார்ந்து படுக்கும்படியாய்க் கிடத்தாட்டி அவைகளைக் கூட்டமாக அவர்கள் பேரிலேரி சவட்டி மிதிக்கும் படியாயும், வாயினுலே கடிக்கும் படியாயும் கொம்புகளினுலே குத்தும்படியாயும் செய்யப்படும். முந்தின கூட்டம் போனதற்குப் பிறகு பிந்தின கூட்டம் போய் அதாபு செய்யும், இந்த படிக்குச் சுற்றி சுற்றி அதாபு செய்து கொண்டிருக்கும். அப்படி போலே தான் வட்டி தின்றவர்களையும், ஷைத்தான் பிடிக்கப்பட்டவர்களைப் போலே யெழுப்பப்படும். அவர்களுடைய வயிறுகளாகிறது வீடுகளைப் போலே பெரிதாக்கி அதிலே பாம்பைக் கொண்டும் தேளைக் கொண்டும் நிறப்பப்பட்டிருக்கும். சூரத்துகளைச் செய்தவர்களை அந்த சூரத்துகளுக்கு றூஹைக் கொடுக்கும்படியாய் அதாபு செய்யப்படும். பொய்யாகிற மனும் சொன்ன பேர்களை இரண்டு ரோமத்துக்கு மிடையிலே முடி போடும் படியாய் அதாபு செய்யப்படும், இரகசியம் ஒளித்திருந்து கேட்கப்பட்டவர்களை அவர்கள் காதிலே ஈயத்தைக் காய்ச்சி யூற்றப்படும். இப்படி போலதான் மற்றும் பாசிகானவர்களை பலபல அதாபைக் கொண்டு அதாபு செய்யப்படும். மஹ்ஷருடைய பூமியாகிறது காபிரானவர்களை விட்டும் அறவே காலியாக விருக்கும்.

அப்போது அந்த மார்க்கத்துடைய இஸ்லாமானவர்களை யெல்லாம் ஒரு விடத்திற் கூட்டி யிருக்கிறபோது அல்லாஹுத் தஆலா அவர்களைப் பார்த்து, மனிதர்களே யெல்லா மார்க்கக்காரரும் தங்கள் தங்கள் தலங்களுக்குப் போஞர்களே நீங்களென்ன காரியத்துக்கு இவ்விடத்திலிருக்கிறீர்களென்று கேட்பான். அதற்கவர்கள் அந்தந்த மார்க்கக்காரர்கள் அவரவர்கள் வணங்கப்பட்ட நாயனுடனே போஞர்கள், நாங்கள் வணங்கின நாயன் எங்களைக் கூட்டிக்கொண்டு போவானென்று சொல்வார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா நானுங்கள் நாயனென்று திருவுளமாவான். அப்போதவர்கள் அந்த சூரத்து அல்லாஹுத் தஆலாவுடைய தஜல்லி யென்று அறியாமல், உன்னை விட்டும்

N55

நாங்களெங்களுடைய நாயனைக்கொண்டு காவற்பாடு தேடுகிறோம், நீ யெங்களுடைய நாயனல்லவென்று சொல்வார்கள்.

அப்போது அல்லாஹுத் தஆலா உங்களுடைய நாயனைக்கொண் டறிவீர்களா வென்று கேட்பான். அவர்கள் நாயனைப் பார்க்கிறதற்கு யெங்களுக் கென்ன வல்லமையிருக்கிறதென்று சொல்வார்கள். அப் போது அல்லாஹுத் தஆலா உங்களுக்கு உங்கள் நாயனை யறிகிறதற் கடையாள மிருக்கிறதா வென்று கேட்பான். அவர்களிருக்கிற தென்று சொல்வார்கள். பிறகு அந்த தஜல்லி மறைந்து போய் வேறே தஜல்லி யுண்டாகி அதினுடைய திரையும் நீக்கப்படும். அப்போது அவர்கள் நீதானெங்கள் நாயனென்று இகுறார் செய்து சஜதாச் செய்வார்கள் என்கிலும் முன் பேர்களுடைய முதுகு கெட்டியாய்ப் போய் சஜதா வுக்கு வளையமாட்டாமல் முதுகின் பேரிலே மல்லாந்து விழுந்து மெத் தவும் வருத்தத்துட னெழுந்திருப்பார்கள். அந்த வலுப்பமாகிய தஜல்லி முன்னாலே போகும்.

அப்போது அல்லாஹுத் தஆலாவுடைய உத்திரவுபடிக்கு சுவர்க் கத்தை யவர்களுக்குக் கொண்டுவரப்படும். நரகத்தை மஹ்ஷறுடைய பூமிக்கும் சுவர்க்கத்துக்கு மிடையிலே வைக்கப்படும். அப்போது எல் லாரும் கடிசாகிய இருளிலே போவார்கள். எல்லா உம்மத்துகளும் அவர்களுடைய நபிகளுடனே போவார்கள். அப்போது ஈமானுடையவர் களுக்கு இரண்டிரண்டு பந்தங் கொடுக்கப்படும், ஒன்று முன்னிலும் ஒன்று வலது புறத்திலும் போகும். அதற்குக் குறைச்சலானவர்க ளுக்குப் பந்தங் கையிலே யுண்டாகும். நுக்ஸானனவர்களுக்கு அவர்க ளுடைய பெருவிரல்களுடைய நகத்திலே ஒளிவு உண்டாகும், அதற்கும் நுக்ஸானனவர்களுக்கு ஒரு ஒளிவு பெருவிரலில் இரவுடைய விளக்கு போலே கொஞ்ச நேரம் வெளிச்சமாக விருக்கிறதும், கொஞ்ச நேரமிருட்டாக விருக்கிறதுமாக உண்டாகும். முனபிக்கானவர்களுக்கு அறவே ஒளியுண்டா யிருக்க மாட்டாது. மற்றப் பேர்களின் ஒளியி னுடைய ஒத்தாசை கொண்டு போவார்கள். நரகத்துடைய ஓரத்திற் போகிற போது அந்த நரகத்துடைய முதுகின் பேரில் ஒரு பால முண்டா யிருக்கும். அது உரோமத்தைக் காண மெத்தவும் மெல்லிய தாகவும், கத்தியைக் காண மெத்தவும் கூர்மையாக விருக்கும்.

அப்போதந்தப் பாலத்தின் பேரிலாச் சுவர்க்கத்துக்குப் போகும் படியா யுத்திரவாகும். அந்தப் பாலமாகிறது ஏற்றம் 5-வருஷம் செய்ப

No. 110912

மானது 5-வருஷம் இறக்கம் 5-வருஷம் ஆக 15-வருஷத் தரிப்பாடாக விருக்கும். சில றிவாயத்திற் கேள்வி கணக்கு மஹ்ஷறுடைய பூமியிலே யுண்டாகி அதினுடைய கணக்குப் படிக்கு பாலத்தின் பேரில் நடப்புக ளுண்டாகு மென்றிருக்கிறது. சில றிவாயத்தில் அந்தப் பாலத்தின் பேரில் ஏழு மைதான வெளி மெத்தவும் விஸ்தீனத்தையுடையதாகவும் குதறத்தையுடையதாகவு மிருக்கும், எல்லா மனிதர்களும் அவ்விடத் தில் முன்னும் பின்னுமாகப் போயக் கூடுவார்கள். அந்த மைதான வெளியில் அமல்களை நிறுக்கிறதற்காகத் தராசுகள் நிறுத்தப்பட் டிருக்கும், ஒவ்வோரிடத்திலும் ஒவ்வோர் வகை அமல்களுடைய கேள்வியாகும்.

அப்போது முந்தின தலத்திலே தொழுகை, நோன்பு, திக்றுகள், துஆக்கள் மற்றும் சரீரத்தையுடைய கேள்வியாகும். அவனுடைய ஹயாத்திலே யெத்தனை தொழுகை யவன் பேரில் கலா யிருக்கிறது, எத்தனை தொழுகை அதாச் செய்தான், உள்ரங்கத்திலும், வெளிரங்கத் திலும் எவ்விதமாய் அதாபுகள் செய்தான், சுன்னத்து எவ்வளவு தொழுதிருக்கிறுன், பறுலுகளில் ஏதாகிலுங் குறைச்சலா யிருந்தால் 70-சுன்னத்தை பொரு பறுலுடைய நிறையில் வைக்கப்படும், தொழுகை இன்சானுடைய சூரத்தாக வரும், நிரப்பமாகத் தொழுதவ னுடைய தொழுகை யெல்லாம் உறுப்புடனே சலாமத்தாக வரும். அதினுடனே திக்ருகள் செய்திருந்தால் அதை உடுமானம், உடமை களைக் கொண்டு அழகாக்கப்பட்டிருக்கும். நுக்ஸாளுக விருந்தால் அதினுடைய உறுப்புகள் நுக்ஸாளுக வெளியாகும். அப்படிப் போலே தான் நோன்பு மற்றும் முதலேயுடைய இபாதத்துகளும், அவைகள் பேரில் அந்தப்படிக்கே நடப்பிக்கப்படும். இன்னுமொரு மைதானிலே முதலைக் கொண்டு முள்ள ஹஜ்ஜு பீஸபீலுடைய கேள்வி, இன்னு மொரு மைதானிலே குணங்கள் கல்புடைய அஹ்வால்கள், துனியாவைத் தூஷணிக்கிறது, அவேட்கை, இல்முகள் படிக்கிறது தரிபாடு இப்படிக் கொத்த கேள்வி, இன்னுமொரு மைதானிலே வெட்டுக் குத்துக் காயங் களுடைய கேள்வி, இன்னுமொரு மைதானிலே முதல்கள் தின்பவனை குடிப்புகள் பாத்திலான செயல்களுடைய குற்றத்துக்கு கேள்வி, இன்னுமொரு மைதானிலே மனிதர்களுடைய ஹக்குடைய கேள்வி.

இவ்விதம் எல்லாத் தலங்களிலும் கேள்வியானவுடனே துனியா விலே சிறிது அமல்களுக்கு தவாபு குறைந்து போனது, சிறிது கெட்ட

அமல்களுக்கு துனியாவிலே தெதிலுள்ள குற்றங் கொடுத்திருத்திக் கொண்டது, சிறிது அமல்களுடைய தவாபு அழிந்து போனது, சிறிது அமல்களுடைய தவாபு வேறே ஒருவருடைய துஆவைக் கொண்டும், யெஹ்சானைக் கொண்டும் அவனுக்குண்டானது அவனை அநீதஞ் செய்து அநியாயக்கார னிடத்திலிருந்து இவனுக்குச் சேர வேண்டிய சவாபு இவைக ளெல்லா மவனுடைய கடிதத்தினல் செம்மையா யெழுதப்பட்டு சிருத் தென்கிற பாலத்தி லனுப்பிவிக்கப் படும். அவர்களுடைய கடிதத்தி லிருக்கிற படிக்கு இவ்விடத்தி லவர்களுக்கு நடப்பிக்கப்படும், அனியாயம் செய்யப்பட்ட பேர்களுடைய ஹக்குகளைக் கனிசம் பார்த்து அநியாயஞ் செய்தவர்களுடைய நன்மையில் அவ்வளவெடுத்து அநியாயஞ் செய்தவர்களிடத்தில் நன்மையில்லாமல் அநியாயம் செய்யப்பட்டவர்களுடைய பாவத்தை எடுத்து அநியாயஞ் செய்தவர்களுக்குக் கொடுக்கப்படும். அநியாயஞ் செய்யப்பட்டவர்களைப் பாவத்தை விட்டும் லேசாக்கப்படும்.

ஆனல் ஈமானையும், கல்புடைய அமல்களுடைய ஜவாபுகளையும் ஒருவருக்குக் கொடுக்கப்படாது, என்கிலும் சடலத்துடைய அமல்கள் தான் ஒருவரிடத்திலிருந் தொருவரிடத்துக்குப் போகிறது, என்கிலும் அந்த அமல்களிலும் முதல் சுன்னத்துகளைக் கொடுக்கப்படும். சுன்னத்துகள் போதாமற் போன லப்போது பறுலுகளி லெடுத்துக் கொடுக்கப்படும். சிறிது ஹிம்மத்துடைய பேர்கள் தங்களுடைய அமல்களைப் பார்க்காமல் அல்லாஹுத் தஆலாவுடைய வரிசையின்பேரில் ஹிம்மத்துசெய்து தங்களுடைய நன்மைகளைப் பிறத்திகளில்லாத முஹத்தாஜான பேர்களுக்குங் கொடுப்பார்கள். அதைப்போலொத்த தவ்புகள் அதற்குப் பகரமாக அல்லாஹுத் தஆலாவுடைய வரிசையினலே அவர்களுக்குக் கிடைக்கும். இன்னும் ஹதீதில் வந்திருக்கிறது, இரண்டுபேர் ஒன்ருக மீசானிடத்தில் வருவார்கள், ஒருவன் அவனுடைய நன்மைதீமையினது தட்டிரண்டுஞ் சரியாக விருக்கும், நன்மையுடைய தட்டில் ஒன்றும் ஒரு நன்மை வைக்கப்பட்டால் அது கனத்துச் சுவர்க்கத்துக்குப் பாத்திரமாவான், மற்ற ஒருவனுடைய தீமையினது தட்டு நிரப்பப்பட்டு நன்மையுடைய தட்டில் ஒரு நன்மையிருக்கும். முந்தினவனுக்கு உன்னுடைய தோழன்மார் ஹக்காளிகள் இடத்திற்போய் ஒரு நன்மை கொண்டு வந்தாயானல் நீ சுவர்க்கத்துக்குப் போவாயென்று சொல்லப்படும்.

அப்போ தவனொரு நன்மைகொடுப்பார்க ளென்கிற யெண்ண முடைய பேர்களிடத்திற்போய்க் கெஞ்சிக்கேட்பான். ஒருவருமவனுக் குக் கொடுக்கமாட்டார்கள். அப்போதிரண்டாவதானவன் அவனுடைய ஹாலைப் பார்த்து என்னிடத்தில் அந்த மிகுதியாகிய பாவங்களுக்கு ஒரே நன்மையிருக்கிறது, உனக்கு அந்த மிகுதியான நன்மையுடனே ஒரு நன்மை குறைச்சலானதற்கு ஒருவரு மொரு நன்மை கொடுக்க வில்லையே. எனக்கு இத்தனை நன்மை யார் கொடுக்கப்போகிறார்கள்? எனக்கந்த ஒரு நன்மையைக் கொண்டு என்ன கிடைக்கப் போகிறது. அந்த ஒரு நன்மையும் உனக்கு நான் கொடுத்துவிட்டேன், நீ சுவர்க் கத்துக்குப்போ, நானும் என்னுடைய நாயனு மறிந்து கொள்கிறே மென்று சொல்வான். அல்லாஹுத் தஆலா அவனுடைய வரிசையைக் கொண்டு இரண்டு பேரையும் ஒன்றாகச் சுவர்க்கத்தில் அனுப்பிவைத்து ஒரே தரஜாவிலிருக்கும்படியாய்ப் பண்ணிவைப்பான்.

அமல்களுடைய நிறையாகிறது தராசிலே அவனுடைய கடிதத் துடனே யாகவிருக்கும், சிறிது வஸ்துகள் அதைக் கொண்டு அல்லா ஹுத் தஆலாவுடைய சமுகத்தில் முடுகினார்களே அப்பேர்க்கொத்த உலூவுடைய தண்ணீர், குறுபானுடைய சதை, இரத்தம், பீசபீல் குதிரையுடைய சிறுநீர், சாணிகள், சிறுபிள்ளை மௌத்தாகிறதைக் கொண்டு சபூறு செய்தார்களே அப்படிக்கொத்த சிறுபிள்ளைகள் இவைகளெல்லா மீசானிலே தாக்கலாகும், அல்லாஹுத் தஆலாவே செய்கிற வலுப்பங்கள் புகழ்கள் அவருடைய அறிவுப்படிக்கும் விஸ்தீனப்படிக்கும் அதிகமாகப்படும், அமல்கள் நிறையிலே யதிகமா கிறதாகிறது அவனுடைய நிண்ணயத்துடைய பெல வந்தத்தைக் கொண்டும், அவனுடைய கல்பிலே கொளுவதாக விருக்கிறது கொண்டு மாயிருக்கும்.

ஒரு றிவாயத்திலே வந்திருக்கிறது, ஒருவனுக்கு தீமையுடைய 99-கடிதமிருக்கும், ஒரு கடிதம் மஷ்றிகு தொடுத்து மக்ரிபுவரைக்கும் நீளமாகவிருக்கும், அதைப்பார்த்தவுடனே சலாமத்துப் பெறுகிறதை விட்டும் மேலெண்ணம் அற்றுப்போகும். அப்போது உனக்கொரு நன்மையிருக்கிறதென்று சொல்லி, மலாயிக்கத்துகள் அவனுடைய நன்மையைக்கொண்டு வாருங்களென்று சொல்லப்படும். அப்போது ஒரு சின்ன உரிமைச்சிட்டு கொண்டுவரப்படும். அப்போதவன் பார்த்து ஆண்டவனே! அந்தச் சிறிய சிட்டு இந்தப் பெரிய பெரிய கடிதங்களில்

எவ்வளவுக் கீடாகும் அதைவைத்து நிறுக்கிறதைக் கொண்டு என்னைப் பலி ஹத்துச் செய்கிருன், நான் நரகத்துக்குப் பாத்திர மாக விருக்கிறேன், நீ யென்னுடைய ஆண்டவன், என்னை எங்கே யனுப்பி வைக்க வேண்டுமோ அங்கே அனுப்பிவையென்று சொல்வான்.

அப்போது சிறப்புடைய நாயன், என்னிடத்தில் அனியாயமில்லை நிறுங்களென்று திருவுளமாவான். ஆது நிறுக்கப்படும். அப்போது அந்தச் சிறியசீட்டுக் கல்லைப்போலே பூமியிலிருந்து சொள்ளும். அந்தக் கடிதங்கள் ஆகாயத்திலே உயரும், அதினுடைய பாக்கத்தினலே அவன் சுவர்க்கத்துக்குப் பாத்திரமாவான். கிதாபு கோர்வை செய்தவர் றஹிமத்துல்லாஹி அலைஹி அந்தச் சிட்டாகிறது, எல்லாப் பாவத்தையு மழித்துப்போடுமென்கிற உரிமைச் சிட்டாக விருக்குமென்று நானெண்ணுகிறேனென்று சொன்னர். உலமாக்கள் இக்த்திலாபானர்கள். மீஸானும் சிருத்தென்கிற பாலமுமொன்ருென்ருகவும் எல்லா மனிதர்களுடையகாரியங்களையு மொன்றைக்கொண்டு நடப்பிக்கப்படு மென்கிறதிலும் அல்லது மீஸானுடைய வகை சிருத்துப் பாலத்துடைய வகை என்கிறதிலும் அதினல் மீஸான் ஸிருத்து ஒன்றல்ல மிகுத முண்டென் கிறதாக விருக்கும்.

குறுஆனிலே திருவுளமானன், அதினுடைய மஃனுவாகிறது நாங்கள் நீதமாக மீஸான்களை கியாமநாளைக்காக வைப்போமென்ற ஆயத்தாகிறது தாசுகள் மிகுதமுண்டென் றறிவிக்கிறது, அதைக் கொண்டு சிருத்தும் ஆளுக்கொன் றென்கிறது. அல்லது உம்மத்துகளுக்கொன் றென்கிறது, அல்லது ஒரு கூட்டத்துக் கொன் றென்கிறதாகவிருக்கும். மனிதர்கள் மஹ்ஷறிலே யிருந்து பாலத்துக்கிட்டப் போவார்கள். ஒரு சப்தம் மஹ்ஷறுடைய பேர்களே வுங்களுடைய கண்களை மூடிக்கொள்ளுங்கள், முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லத்துடைய மகளார் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா சிருத்துப் பாலத்தின் பேரிற் போகிருர்க ளென்றுண்டாகும்.

பிறகு ஒரு கூட்டம் மின்னல் வெட்டி மறைகிறது போலே அதற்குப் பிறகு நல்லவோடுவர்களைப் போலே, அதற்குப் பிறகு வருத்தத்துடனே மெள்ள மெள்ளப் போகிறவர்களைப் போலே போவார்கள். நரகத்திலே நின்றும் நீளமான குறடுகள் புறப்படும், சிறிது பேர்கள் அதை விட்டும் சலாமத்துப் பெறுவார்கள், சிறிது பேர்களுடைய சிறிது உறுப்புகளிலே படும், சிறிது உறுப்புகள் சலாமத்தாக விருக்

கும், சிறிது பேர்களை யிழுத்துக் கொண்டு போய் நரகத்திலே போட்டு விடும். இன்னும் இப்படிப்போலே தான் அந்தப் பாலத்துடைய இரண் டோரத்திலும் எண்ணமும் அமானதமும் கூட வரும், அமல்களைத் தப்பி நடந்தவனை நரகத்திலே போட்டு விடும்.

ஆனல் சலவாத்தும், சாலிஹான அமல்களும் தொழுகையும், நோன்பும் மனிதர்களைக் கையை பிடித்துக் கொண்டு போகும், சதக்கா நெருப்பை விட்டுங் காத்துக்கொள்ளும், குறுபான் ஏறுவாகனமாகும். அந்தத் தலத்துடைய அமளியினலே ஒருவரிடத்திலிருந்தும் சப்தம் புறப்பட மாட்டாது என்கிலும் அன்பியாக்கள் அவர்கள். உம்மத்து டைய ஹக்கிலே றப்பி சல்லிம் சல்லிம் ஆண்டவனே சலாமத்தாக்கு சலாமத்தாக்கென்று சொல்வார்கள். மூஃமினன பேர்கள் பாதத்தின் பேரிற் போனபோது முனபிக்கான பேர்கள் இருளிலேதானே ஹைறு ஞக விருக்கிற போது; தோழமார்களே கொஞ்சம் வழி பாருங்கள், நாங்களு முங்களுடைய வெளிச்சத்துடனே வருகிறோமென்று சொல் வார்கள்.

அப்போது அவர்கள் நீங்களுங் கொஞ்சம் பின்னலே திரும்பி போய் நாங்கள் ஒளிவு வாங்கிக் கொண்ட தலத்தில் நீங்களும் வாங்கிக் கொள்ளுங்களென்று சொல்வார்கள். திரும்பிப் போய் மிகுதியாகிய இருளைப் பார்ப்பார்கள். அந்த இருளைப் பார்த்தவுடனே வலுப்பமாகிய அமளியுண்டாகிக் கலக்கத்துடனே திரும்பி வருவார்கள். அப்போது அந்தப் பாலத்துடைய ஓரத்திலொரு சவரிருக்கும், அதிலே யொரு வாசற்படியுந் திறந்திருக்கும், அதைப் பார்த்துப் பயந்து கலங்கி முஃமினனவர்களைக் கூப்பிட்டு நாங்களுங்களுடனே யிருக்கவில்லையா, நீங்களெங்களைக் கூட்டிக்கொண்டு போகாமற் போகிறீர்களேயென்று சொல்வார்கள். அதற்கு இஸ்லாமானவர்கள், நீர் சொல்லுகிறது மெய் தான், வெளிரங்கத்தி லெங்களுடனே யிருந்தீர்கள். என்கிலும் மன திலே ஷக்குவைத்துக் கொண்டெங்களுக்கும் பொல்லாப்புண்டாகும் படியாயும் காபிரானவர்களுக்குச் சிறப்புண்டாகும்படியும் வழி பார்த் துக்கொண்டிருந்தீர்கள். இப்போது உங்களுடைய கூட்டாளிமார்களு டனே போய்ச் சேர்ந்து கொள்ளுங்களென்று சொல்வார்கள்.

அப்போது நரகத்திலிருந்து சுடர்கள் புறப்பட்டு அவர்களை யிழுத்துக்கொண்டுபோய் ஜஹன்னத்துடைய அடிதட்டிற் போட்டு விடும். இஸ்லாமானவர்கள் மெள்ள மெள்ளவாக நடந்து கொண்டிருப்

பார்கள். சிறிது பேர்கள் மின்னல்வெட்டி மறைகிறுப்போலேயும், கடிசான காற்றடிக்கிறுப் போலேயும், பெலவந்தத்துடனே மெத்தவும் சுறுக்காசப் போனவர்கள் சுவர்க்கம் நரகத்துடைய பாதையில் ஒரு பாலம் வருமென்று கேட்டிருந்தோமே ஒன்றையும் காணவில்லையே யென்று சொல்வார்கள். மற்ற சலாமத்தானபேர்களும் அவர்களுடனே பாலத்துக்கந்த புரம் ஓரத்திலிருக்கிற • மைதானிலே போய் நிற்பார்கள். அப்போது அவர்களுக் கிடையிலுள்ள பாவமில்லாத மற்ற முறைபாடு களை யொருவருக்கொருவர் பிரித்து கொண்டு ராஸியாய் போவார்கள். அப்போது நம்முடைய ஆண்டவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தங்களுடைய கையைக் கொண்டு சுவர்க்கத்துடைய பூட்டைத்திறந்து மனிதர்களைச் சுவர்க்கத்திலே அனுப்பி வைப்பார்கள். ஆண்டவர் நரகத்துடைய பேர்களை நினைத்து அவர்களிலே தங்க ளுடைய உம்மத்துகளைக் கொண்டு மெத்தவும் விசாரப்படுவார்கள்.

அப்போது ஆண்டவர்களுடைய உம்மத்துகள் சுவர்க்கத்துக்கு வந்தவர்கள் நாலிலொரு பங்காகவிருக்கும். அப்போது ஆண்டவர் அவர்களுக்கு நரகத்திலே ஆயிரமாயிரம் பேர்கள் விழுந்து விட்டார் களென்று விசளமறிவிக்கப்படும். ஆண்டவர்கள் றஹ்மத்துல் ஆலமீன் ஆலங்களுக்கெல்லாங் கிருபையானவர்க ளானபடியினலே மெத்சவும் விசாரப்பட்டு அல்லாஹுத் தஆலாயிடத்தில், ஆண்டவனே யென்னுடைய உம்மத்துகளை நரகத்தை விட்டுங் கலாசு பெறவை யென்று முன்னே ஷபா அத்துச் செய்ததுபோலே இப்பவும் 3 நாளைக்கு நீளமான சஜதாச்செய்து அல்லாஹுத் தஆலாவைப் புகழ்ந்து வலுப்பஞ் செய்வார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா யாதா மொருவருடைய கல்பிலே ஒரு கோதுமையளவு ஈமானுள்ளவர் களை நரகத்தை விட்டும் புறப்படுத்தி வைக்கும்படியாய் உத்திரவாகும். ஆண்டவரைத் தொடர்ந்ததும் அன்பியாக்களும் தங்கள் உம்மத்து களுக்கு ஷபாஅத்துக் கேட்பார்கள்.

அப்போது ஆண்டவர் அல்லாஹு தஆலாவுடைய உத்திரவு கொண்டு மலாயிக்கத்துகளை கூட்டிக் கொண்டு தங்கள் உம்மத்துடனே நரகத்துடைய ஓரத்தில் நின்று கொண்டு மனிதர்களே ! உங்களுங்கள் கூட்டாளிமார்களை நினைத்து இன்னரின்னரென் றடையாளஞ் சொல் லுங்கள். அந்த மலாயிக்கத்துகள் போய்க் கூட்டிக் கொண்டு வருவார்க ளென்று திருவுளமாவார்கள். அப்போது ஷஹீதுகளுக்கு 70 பேர்

காபிலுக்கு 10 பேருடைய ஷபா அத்து அவுலியாக்கள் உலமாக்களுக்கு அவர்களுடைய மறுத்தபாப்படிக்கு நூறு நூறு ஆயிரமாயிரம் பேர்களுடைய ஷபாஅத்துக் கொடுக்கப்படும். அவர்களுடைய சொற்படிக்கு மலாயிக்கத்துகள் நெருப்பிலே முங்கி அவர்களைக் கொண்டு வருவார்கள். அப்போது எல்லாருக்கு முன்னாலே ஆண்டவர் அவர்களுடைய பிச்சனங்களில் பாவத்தையுடைய பேர்களை சலாமத்துப் பெற வைக்கப்படும், மற்றும் ஷபா அத்துகளிலேயும் இப்படிப் போலே யாயிருக்கும். கோதுமை யளவு ஈமானுடையவர்கள் அந்த ஷபாஅத்தைக் கொண்டு சலாமத்தான போது ஆண்டவர் அவர்களுடைய உம்மத்துகள் முன்னாலே நாலிலொரு பங்கிருந்தவர்கள் அப்போது மூன்றிலொரு பங்காவார்கள்.

பிறகு ஆண்டவர் உம்மத்துகளைக் கொண்டு விசாரமாய் இன்னுமெத்தனை பேர்கள் நரகத்திலிருக்கிறார்க ளென்று கேட்பார்கள். மனிதர்களின்னம் ஆயிரமாயிரம் பேர்கள் நரகத்திலிருக்கிறார்க ளென்று சொல்வார்கள். அப்போது மறுபடியும் ஆண்டவர் அல்லாஹு தஆலா இடத்தில் முன்னாலே ஷபாஅத்துக் கேட்டது போலே கேட்பார்கள். அப்போது அல்லாஹு தஆலா ஒரு கடுகளவு ஈமான் கல்பிலே யிருக்கிற பேர்களை நரகத்தை விட்டு புறப்படுத்தி வைக்கும் படியாய் ஹுக்குமாகும். அப்போது ஆண்டவர் முன் போலே அஸ்ஹாபிகள், உலமாக்கள் அவுலியாக்களுக்கு நீங்களறிந்த பேர்களை நினைத்து அவர்களை நரகத்தை விட்டுங் கலாசு பெறவையுங்க ளென்று திருவுளமாவார்கள். அவர்கள் அவ்வுத்திரவு படிக்கு ஆயிரமாயிரம் பேர்களை நரகத்தை விட்டுங் கலாசு பெற வைப்பார்கள். அப்போது ஆண்டவர் அவர்களுடைய உம்மத்துகள் அரைவாசியாவார்கள். மறுபடியும் ஆண்டவர்கள் உம்மத்துகள் பேரிலே கிருபையாய்ப் பாவத்சாளிகளை விசாரணை செய்து அல்லாஹு தஆலா இடத்தில் முன் போலே ஷபாஅத்துக் கேட்பார்கள். அல்லாஹு தஆலா ஒருவனுடைய கல்பிலே ஒரு அற்பளவு ஈமானிருக்கப்பட்டவர்க ளெல்லாரையும் புறப்படுத்தி வைக்கும் படியாய் ஹுக்குமாகும்.

அப்போது ஔலியாவுடையவர்கள் ஆண்டவர்களுடைய ஹுக்கும் கொண்டு மிகுதமாகிய மலக்குகளை நரகத்தை விட்டுங் கலாசு பெற வைப்பார்கள். அந்த மூன்றும் ஷபா அத்துக்குப் பிறகு ஆண்டவரவர்களுடைய உம்மத்துக ளெல்லாம் உம்மத்துகளுடைய மட்டு திட்டத்

துக்குச் சமானமாவார்கள். அதன் பிறகு அல்லாஹு தஆலாவை ஓர்மைப் பாடாக வணங்கினவர்களில் ஒருவரும் நரகத்தில் பாக்கியா யிருக்க மாட்டார்கள், என்கிலும் ஒரு சின்ன குற்றம் அன்பியாக் களைக் கொண்டு அறிந்து அவர்களுக்கு வழி படாம லிருந்தவர் களில் என்கிலும் அன்பியாக்களுடைய விசளம் அவர்களுக்குத் தெரியா மலும், அவர்கள் இணை வைத்து வணங்காமலும் ஓர்மைப் பாடாக வணங்கினார்களே அவர்கள் மட்டும் நரகத்திலே யிருப்பார்கள். அப்போது நம்முடைய ஆண்டவர் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய ஹக்கிலேயும் ஷபா அத்துக் கேட்பார்கள்.

அப்போது அல்லாஹு தஆலா அவர்கள் உங்களுடனே சாட்டப் பட்டவர்களல்ல, அவர்களை நாம் சலாமத்து பெற வைக்கிறனென்று திருவுளமாவான். அப்போது நரகத்தி லிருக்கிற இணை வைத்து வணங்கினவர்கள் ஓர்மைப் பாடாக வணங்கினவர்களைப் பார்த்து நீங்கள் துனியாவிலே அல்லாஹு தஆலாவை இணைவைக்கப் படாத ஓர்மைப் பாடாக வணங்க வேண்டு மென்று எங்களுடனே தர்க்கம் பண்ணிக் கொண்டு ஓர்மைப் பாடாக வணங்கினீர்களே இப்போது அந்த ஓர்மைப் பாடுங்களுக்குப் பிரயோஜனங் கொடுக்காமற் போச்சுதே, நீங்களும் நாங்களு மொன்றாகத்தானே ஆகி விட்டோ மென்று மெத்த வுங் குற்றமாகப் பழிப்பார்கள்.

அப்போது அல்லாஹு தஆலாவுக்குச் ஷிறுக்கு வைத்த பேர்க ளுக்குச் சமானமாக ஓர்மையாய் வணங்கினவர்களையு மாக்கினார்க ளென்று கோபமாய், என்னுடைய சிறப்பைக் கொண்டு சத்தியமாக ஓர்மையாக வணங்கினவர்கள் முஷ்ரிக்கானவர்களுக்குச் சமானமல்ல வென்று திருவுளமாய்ச் தன்னுடைய குதறத்துக் கொண்டு ஓர்மையாக வணங்கினவர்களடங்கலையும் 50,000-வருஷம் என்னத்தக்க ஒரு நாளாகிய கியாம நாளுடைய ஒடுக்கத்தில் அவர்களை நரகத்தை விட்டும் கலாசு பெற வைப்பான். பிறகு நரகத்தி லிருந்து புறப்பட்ட கூட்டங் களுடைய சரீரங்கள் கறுப்புநிறமாக யிருக்கிறவர் சுவர்க்கத்து வாசற் படியிலிருக்கிற ஹயாத்துடைய தண்ணீ ரென்கிற ஆற்றில் முழு காட்டப்படும். அப்போது உடனே தீவிரமாக அவர்களுடைய சரீரங்க ளெல்லாம் நன்றாகப் பருப்பத்தையுடையதாகும்.

பிறகு சுவர்க்கத்தில் வருவார்கள், அப்போதவர்களுடைய கழுத் தில் கறுத்தச்சூடு வெகுகாலமிருக்கும். சுவர்க்கத்துடைய பேர்களிடத்

தில் அந்த அடையாளத்தைக்கொண்டு அவர்களுக்கு ஜஹன்னமே யென்று பட்டப்பேர் உண்டாகும். வெகுகாலத்துக்குப் பிறகு அவர்கள் அல்லாஹுத் தஆலா இடத்தில், ஆண்டவனே! எங்களை நரகத்தை விட்டு மெப்படி கலாசுபெற வைத்தாயோ அந்தப்படிக்கு இந்த அடை யாளப்பட்டபேரை நீக்கிபோடென்று கேட்பார்கள். அப்போது அல் லாஹுத் தஆலா கபூல் செய்து அவனுடைய கிருபையைக்கொண்டு இந்த இரண்டையும் அழித்துப் போடுவான். நரகத்திலிருந்து சுவர்க் கத்துக்கு வந்தபேர்களிலே கடைசியில் வருகிறவன் ஒரு மனிதனுகை யிருக்கும். அவனை நரகத்தை விட்டும் அப்புறப்படுத்தி அதினுடைய ஓரத்தி லுட்கார வைப்பார்கள்; ஒரு ஷபாஅத்துப் பிறகு அவனுடைய அக்கலவனுக்கு வரும். அந்த கணக்கில்லாத வருத்தத்தில் நின்றும் ரூஹத்தைப் பார்த்து மறுபடியும் அழுது ஆண்டவனே! என்னுடைய முகத்தை இதைவிட்டுத் திருப்பிவிடென்று முறையிடுவான்.

அப்போது அல்லாஹுத் தஆலா அவனிடத்தி லிதன் பிறகு ஒன்றுங் கேட்கப் போகாதென்று பெலவந்தமான அறுதிப்பாடு வாங் கிக்கொண்டு அவனுடைய முகத்தைத் திருப்பிச் சுவர்க்கத்துக்கு நேரே வைப்பான். அப்போது நல்ல நிழலையுடையதாகவும், குளிர்ந்த காற்றை யுடையதாகவுஞ் சுவர்க்கத்துக்குக் கடுத்தமையா யிருக்கிற சிறிது மரங்கள் அவனுக்குத் தெரியும். அப்போது மறுபடியுமழுது அந்த மரத்துக் கடுத்தாமையாய் விழும்படியாய் முறையிடுவான். அப்போது மெத்தவுங் கெட்டியான அறுதிப்பாடு இனிமேலொன்றுங் கேட்கப்படா தென்று வாங்கிக்கொண்டு அவனை அந்த மரத்துக்கிட்டக் கொண்டு போய் விடப்படும். அந்தப்படிக்கு அப்போதும் சிறிது மரங்களையும தலங்களையும் பார்த்து ஆசையாய் மறுபடியும் வார்த்தைப்பாட்டை முறித்துப்போட்டு புது வார்த்தைப்பாட்டுடனே அவ்விடத்திற் போய்ச் சேருவான். அப்போது சுவர்க்கத்துக்கு முடுகுதலானவுடனே சுவர்க்கத் துடைய அழகுகள் ஜீனத்துகளைப் பார்த்துப் பொறுக்கமாட்டாமல் முன் அறுதிப்பாடு முறித்துப்போட்டு மெத்தவும் அலற்றி சுவர்க்கத் துக்குள்ளாலே புகுதுகிறதைக் கேட்பான்.

அப்போது சுவர்க்கத்துக்குள்ளாலே புகுதுகிறதற்கு உத்திரவு கொடுக்கப்படும். அப்போதவனுடைய சுவர்க்க மனிதர்களைக் கொண்டு நிரப்பப்பட்டிருக்கிறது. இடமகப்படாதென்றெண்ணி ஒரு கிட்டுமை யான இடத்திற்போய் நிற்பான். அப்போது அல்லாஹுத்தஆலா இன்ன

மெத்த இடமிருக்கிறதென்று திருவுளமாவான். அப்போது அவன் ஆண்டவனே! என்னுடனே பரியாசம் பண்ணுகிறாயா? நீறப்பில் ஆலமினுச்சுதே என்று சொல்வான். அப்போது அல்லாஹுத் தஆலா சிறப்புடைய சூரத்தை வெளியாக்கி நீ நாடினதைக்கேளென்று திருவுளமாவான், அவனுடைய நாட்டம் தீர்ந்த பிறகு இன்னும் சிறிது துனியாவிலுள்ள ஆசையான நாட்டங்களெல்லா மவனுக்கு நினைவுண்டாக்குவான். எல்லா நாட்டப்படிக்கும் அவன் கேட்ட தெல்லாங் கொடுத்ததற்குப் பின்னாலே அல்லாஹுத் தஆலா நீ கேட்ட நாட்டங்களும் அதற்குப் பத்துமடங்கதிகமாக ஒப்புவமையில்லாத நிஃமத்துகளுமுனக்குக் கொடுத்தோ மென்று திருவுளமாவான்.

அதாகிறது சுவர்க்கத்துடைய பேர்களில் மெத்தவும் சிறிய மனிதர்களுடைய ஹாலாகவிருக்கும். இன்னும் அப்போது சுவர்க்கத்தையுடையவர்கள் தங்கள் தங்கள் தலத்திற் சென்றபிறகு ஒருவருக்கொருவர் சந்தித்துக்கொண்டு தோழமையாவிருக்கிறபோது அவர்களுக்கு இன்ன நரகவாதி நம்முடனே அப்படிக்கெல்லாம் வழக்காடிக் கொண்டிருந்தானே, அவனுடைய ஹால் எப்படியிருக்கிறதோவென்று நினைப்பார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா நரகத்துப் புறமாக ஒரு சின்ன ஜன்னலைத் திறப்பிப்பான். அவர்களுடைய பார்வையில் அதிகமாகிய கூவத்துங் கொடுப்பான். அப்போது அவனைப் பார்த்துக் கேட்பார்கள். அப்போதந்த நரகவாதி மிகுதியாக அழுது முறையிட்டுச் சுவர்கத்துடைய தண்ணீரும் வஜீபனமுங் கேட்பான். அதற்கவர்கள் அந்த நிஃமத்துகள் உங்கள் பேரிலே ஹறாமாக விருக்குமென்று சொல்லி அல்லாஹுத் தஆலாவுடைய வார்த்தைப்பாடுகளை என்னவாக உண்மையாய்ப் பெற்றுக்கொண்டீர்களோ அதுபோலே நாங்களுமெங்களுடைய வார்த்தைப்பாடுகளை உண்மையாய்ப் பெற்றுக்கொண்டோமென்று கேட்பார்கள்.

அப்போதவர்களுடைய வழிகேட்டையும் மாட்டாக்கி தனத்தையும் வெளியாக்குவார்கள். அப்போது சுவர்க்கவாதிகள் ஜன்னலைச் சாத்திப்போடுவார்கள். சுவர்க்கத்தை யுடையவர்கள் தங்கள் தங்கள் தலத்திலே தரிபாடான பிறகு சலாமத்துப் பெற்ற தங்களுடைய குடும்பத்தாரைத் தேடிப்பார்ப்பார்கள். அப்போது மலாயிக்கத்துகளவரவர்கள் தங்கள் தங்கள் அமல்படிக்குத் தங்கள் தங்கள் தலத்திலேயிருக்கிறார்களென்று சொல்லுவார்கள். அப்போது சுவர்க்கவாதிகள்

அவர்களில்லாதபடிக்கு எங்களுடைய ஒரு லெஸ்ஸத்து ஒரு ரூஹத்து மில்லை. அவர்களை யெங்களுடனே சேர்த்து வைக்கவேணுமென்று கேட்பார்கள். அதற்கு மலாயிக்கத்துகள் இவ்விடத்தி லந்தந்த நபுசுகள் அவைகளுடைய அமலைக்கொண்டாக விருக்கும். அமலின்றியே ஒரு வஸ்துவும் கிடைக்கமாட்டாதென்று சொல்லுவார்கள். அதற்குச் சுவர்க்கவாதிகள் நீங்கள் போய் அல்லாஹுத் தஆலாவின் சமுகத்திலெங்கள் புறத்தால் ஆண்டவனே! உனக்கு எல்லாம் வெளியாயிருக்கும். நாங்கள் துனியாவிலிருக்கிற போது தொழிற்றுறை செய்கிறது கொண்டும், பெரிய மனிதர்களுக்கு வேலைசெய்கிறது கொண்டும் எல்லாக் குடும்பத்தாரும் வளர்த்தார்கள். அவர்களுடைய வளப்பமாகிறது எங்களுடைய கண்ணுக்குக் குளிர்ச்சியாக விருக்கும். இப்போது நாங்கள் உங்களைப்போலே சங்கையானவர்களிலெல்லா மிருந்த சங்கையானவனுடைய பணிவிடை நாங்கள் செய்தோம். அப்படி யிருக்க எப்படி எங்களுடைய குடும்பத்தார்கள் கூட்டாளிமார்களை உங்களுடைய நிஃமத்துகளை விட்டும் பேறுகேடாக்கிறது. நாங்கள் விண்ணப்பஞ் செய்கிறோம். அவர்களை யெங்களுடனே சேர்த்து வைக்கும்படியாய் கேளுங்களென்று சொல்வார்கள்.

அப்போது அல்லாஹுத் தஆலா, மெய்தான் அவர்களுடைய பிச்சளங்களை அவர்களுடனே சேர்த்து வைத்து அந்த உயர்த்தியான தறஜாத்துக்குச் சமானமான நிஃமத்துகள் அவர்களுக்கும் நம்முடைய கஸானாவிலிருந்து கொடுங்கள். அதினால் நம்முடைய கஸானாக் குறைந்துபோக மாட்டாதென்று ஹுக்கும் செய்வான். அப்போது அவர்களுடைய குடும்பத்தாரை அவர்களுடைய சிறு பிள்ளைகளுடனேயும், உயர்த்தியான நிஃமத்துகளுடனேயும் அவர்களுடன் சேர்த்து வைக்கிறது கொண்டு அவர்களுடைய அமல்களினது பிரத்தியுடனே அவர்களைக்கொண்டு நிஃமத்துப் பெற்றுக் கொண்டிருப்பார்கள். அப்போது நம்முடைய நாயகம் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் சுவர்க்கத்தில் தறஜாத்துகள் உயர்த்தியாகிறதற்காக மறுபடியும் ஷபாஅத்துச் செய்வார்கள். அதனால் நபிநாயகமவர்களுடைய உவப்புக்காகவும், முடுகுதலுக்காகவும், அவரவருக்குப் பாத்திரமான தறஜாத்துகளுக்கு மேலான தறஜாத்து அல்லாஹுத் தஆலா உண்டாக்கி வைப்பான். அதனாலே சுவர்க்கத்துடைய பேர்களெல்லாம் சுவர்க்கத்திலே சேர்ந்ததற்கு பின்னாலே ஒரு சத்தம்போடுகிறவன் நாகத்திற்கும், சுவர்க்கத்துக்கு மிடையில் நின்றுக் கொண்டு, சுவர்க்கத்துடைய

பேர்களே! சுவர்க்கத்தினது சுவரோரத்தில் வாருங்கள், நரகத்தினுடைய பேர்களே! நரகத்தினது சுவரோரத்தில் வாருங்களென்று சத்தம் போடுவான்.

அப்போது சுவர்க்கத்துடைய பேர்கள் நமக்கு அல்லாஹுத் தஆலா ஊழி காலம் சுவர்க்கத்திலிருக்கும்படியாய் வார்த்தைப்பாடு செய்திருந்தானே இப்போதென்ன காரியத்துக்குக் கூப்பிடுகிறானென்று பயந்து எல்லாரும் வருவார்கள். நரகத்துடைய பேர்கள் அல்லாஹுத் தஆலா நம்முடைய பிழைகளைப் பொறுத்து நரகத்தை விட்டும் புறப் படுத்தி வைக்கிறதற்காகக் கூப்பிடுகிறானென்று மிகுந்த சந்தோஷத் துடனே யெல்லாரும் வருவார்கள். இவ்விதம் எல்லாரும் வந்த பிறகு மௌத்தை ஒரு வெள்ளாட்டைப்போலே கொண்டு வந்து நரகத்துக் கும் சுவர்க்கத்துக்கு மிடையில் வைத்ததற்குப் பின்னாலே சுவர்க்கத் டைய பேர்களே! நரகத்துடைய பேர்களே! இதை நீங்களறிவீர்களா வென்று கேட்கப்படும். அப்போதெல்லோரும் நாங்களதை நன்று யறிவோம். மௌத்துடைய லெஸ்ஸத்தை அனுபவிக்காதவர்கள் ஒருவருமில்லை. ஆனபடியினாலே அது மௌத்தாகவிருக்கு மென்று சொல்வார்கள்.

அப்போது அதை யறுக்கப்படும். அதை யறுக்கிறவர் எஹ்யா அலைஹிஸ்ஸலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு ஒரு சத்தம் சுவர்க்கத்துடைய பேர்களே! எந்நாளும் சுவர்க்கத்திலிருங்கள். உங் களுக்கு மவ்த்தில்லை. நரகத்துடைய பேர்களே! எந்நாளும் நரகத்தி லிருங்கள்! உங்களுக்கு மௌத்தில்லை யென்றுண்டாகும். அப்போது சுவர்க்கத்துடையவர்களுக்கு மௌத்துண்டா யிருந்தால் அந்தச் சந்தோஷத்துடைய கடிசியினால் மௌத்தாய்ப் போவார்களே. அப் பேர்க்கொத்த சந்தோஷமுண்டாகும். நரகத்துடைய பேர்களுக்கு மௌத்துண்டாயிருந்தால் அந்தச் சலிப்புடைய கடியினால் மவ்த்தாய்ப் போவார்களே அப்பேர்க்கொத்த சலிப்புண்டாகும். பிறகு நரகத்து டைய வாசற்படியின் கீழே யிடித்து அதினுடைய முதுகின்பேரில் விட அப்போது நரகத்துடைய பேர்களுக்கு நரகத்தை விட்டு புறப் படுவோமென்கிற எண்ணங் கொஞ்சமுமிருக்க மாட்டாது. சுவர்க்கத் துடையவர்கள் விசாரமற்று நிஃமத்துகளை யனுபோகம் பண்ணிக் கொண்டு சந்தோஷமா யிருப்பார்கள். சுவர் கட்டப்பட்டது; அதில் ஒரு கல்பொன், ஒரு கல்வெள்ளி கல்லுகளுக்கிடையில் வைக்கப்பட்ட

சேறுகள் கஸ்தூரியும், குங்குமப்பூ, மரகதம், பவளம், பளிங்கு, அதி னுடைய தோட்டங்களாகிறது மேடுபள்ளங்களில்லாமற் செவ்வை யாய்த் துப்புறவானதாய்ப் பொடிகல்களுக்குப் பகரமாக முத்துகள், சிவந்த மாணிக்கம், மரகதம் இப்போர்க்கொத்த இரத்தினங்கள் வளர்ந்து கிடக்கும், மரங்களாகிறது வெள்ளி பொன்னுடைய தொலி பொதிந்ததாயிருக்கும்.

இன்னும் அவைகளுடைய கொப்புகளாகிறது முள்ளில்லாமலும் பெருங்காற்றடித்தாற் கொப்புகள் முறியாமலுமிருக்கும். அதினுடைய பழங்களாகிறது துனியாவின் வஜீபனத்தையுடைய பல பலவகையாகிய ருசியுடைய தாகவிருக்கும். இதற்குக்கிழே ஆறுகள் நாலுவகையாக யிருக்கும், அதுகளில் ஓராறுகிறது இன்பமாகிய லேசான குளிர்ச்சியான தண்ணீரினாலே யாகவிருக்கும், இன்னுமோராருகிறது வெகுநாளிருக் கிறதுகொண்டு அதினுடைய ருசிபேதகமாக மாட்டாதே அப்படிக் கொத்த பாலினாலே யாகவிருக்கும். இன்னுமோராருகிறது மஸ்தில்லா மல் நல்ல நிறத்தையும் நல்ல மணத்தையும், அதிகமாகிய சந்தோஷத் தையு முண்டாக்கி வைக்குமென்ற மதுவினாலே யாகவிருக்கும். இன்னு மோராருகிறது நுரைவாங்கப்பட்ட கலப்பறுதலான தேனினாலேயாக விருக்கும், இந்த நாலுவகை ஆறுகளல்லாம லின்னும் 3-குள முண்டும் அதிலொன்றின் பேராகிறது காபூறு, அதினுடைய குணமாகிறது குளிர்ச்சி, இன்னுமொன்றின் பேராகிறது ஜன்ஜபீ ளென்றும், சலசபீலென்றுமாம் அதினுடைய குணமாகிறது காவா வைப்போலே சூடாகவிருக்கும், ஒன்றின் பேராகிறது தசுநீம், அது நெருப்பாகிய துப்புரவுடனே ஆகாசத்திலே ஓடும். இந்த ஏழுவகைத் தண்ணீர் சுவர்க்கத்திலுண்டும், அந்த மூன்று, குளத்துடைய தண் ணீரில் நின்றும் ஒவ்வொரு பௌலுகள் முடுகுதலான மறுத்தபாவு டையவர்களிடத்திலுண்டாயிருக்கும். அதுவே அவர்கள் குடிப்பார்கள். மருத்தபாவிலே குறைச்சலான பேர்களுக்கு அந்தக் குளத்திலிருந்து சிசாக்களை நீர் நிறப்பி முத்திரையுடனே அவரவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அவர்கள் தங்களுடைய குடிப்புகளிலே பனிநீரைப் போலே அந்தச் சிசாவிலிருக்கிறதிலே கொஞ்சம் ஊற்றிக் கலந்து குடிப்பார்கள்.

அல்லாஹுத் தஆலாவுடைய தீதாறுடைய வேளையில் வேறே ஒரு குடிப்புக் குடிப்பாட்டப்படும், அதற்குப் பேராகிறது சருபுன்

தஹறமனும் என்னும் குடிப்பென்கிறதாக விருக்கும். அந்த குடிப்பாகிறது எல்லாக் குடிப்புகளுக்கும் மெத்தவும் வரிசையான மகாசிறப்பானதாக அதிகமான லெஸ்ஸத்துடையதாக விருக்கும். சுவர்க்கத்துடைய மரங்கள் அதினுடைய அதிகமான உயர்த்தியுடனேயும் மிகுதியான நிழலுடனேயும், அறிவுகளுள்ளதாக விருக்கும்; சுவர்க்கவாதி அதினுடைய பழவர்க்கத்தில் ஒன்றைப் பார்த்து அவ்வேட்கையானல் உடனே அந்தக்கொப்பு அவனுடின பழம் அவன் கையிற்பட்டு அவன் வருத்தமில்லாமற் பறித்துக் கொள்ளும்படியாய் மிகுதியாக வளையும். சுவர்க்கவாதிகளுடைய உடுமானங்களெல்லாம் அந்தப் பூவுகள் மலருகிறதிலிருந்து வெளியே வரும். அவரவர்களுடைய உயர்த்திப்படிக்கும், இச்சையான நிறங்கள் மனப்படிக்கும் வெங்காயத்தோலியைக்காண நாணயத்துடைய சுந்துசென்கிற உடுமானம் ஜரிகை வேலைகள் செய்யப்பட்ட இஸ்தபறுக்கு எல்கிற உடுமானங்களுமாக விருக்கும், அதினுடைய நாணயமாகிறது 79 பிடவைக்குக் கீழேயிருக்கப்பட்ட சடலந்தெரியும். சுவர்க்கத்திற் சூடுமில்லை குளிருமில்லை, பொழுதுடைய சுடருமில்லை. இருட்டுமில்லை. இரவிலிருந்து கிழக்கு வெளுத்து நன்றாய் வெளிச்சமானதற்கும் பொழுது கிளம்புகிறதற்கு மிடையிலே யெப்படி இருக்கிறதோ அப்படிப்போலே அதைக்காண ஆயிரமடங் கதிகமாக விருக்கும்.

அந்த வெளிச்சமாகிறது அறுஷுடைய ஒளிவைக் கொண்டுள்ளது, பொழுது நிலவைக்கொண்டுமல்ல. ஹதீதிலே வந்திருக்கிறது, சுவர்க்கத்துடைய பெண்பிள்ளைகளில் ஒருத்தியாவது, அல்லது அவர்களுடைய உடமைகளில் ஒரு உடமையாவது, அல்லது உடுப்புகளிலொரு உடுப்பாவது துனியாவி லிருக்குமே யானல் துன்யா அடங்கலும் ஒளிவாகவிருக்கும்; அந்த ஒளியுடைய கடிசினலே பொழுதினுடைய ஒளி யெல்லாம் மங்கிப்போய் கண்ணலே பார்க்கும்படியாய்ப் போகும். சுவர்க்கத்துடைய பேர்களுக்கு அருவருப்பான வஸ்துக்கள் மல ஜலம், வாயினுடைய கோழை, இந்திரியம், சடலத்துடைய வேர்வை யொன்று மிருக்க மாட்டாது. ரோமம் தலையிலேமட்டும் இருக்கும். வாலிபத்திலுண்டாகிற தாடி, மீசை மற்றவொன்று முண்டாயிருக்கமாட்டாது, நசலுமில்லை கல்பிலேயுள்ள வினை ஹசது கோபமற்றவையா தொன்றுமிருக்க மாட்டாது.

தூக்கமில்லை, ரூஹுத்துகளுக்காக நிழல்கள் மேல் வீடுகளிலே போவார்கள். அவர்கள் தின்று மிஞ்சின வஜீபனத்தில் அத்தருடைய

வாடையுண்டாயிருக்கும், அவர்கள் விடப்பட்ட ஏப்பங்களிலும் அத்தருடைய வாடையுண்டா யிருக்கும். எவ்வளவு தின்றாலும் உடனே செரித்துப்போகும். இவர்களுக்கு எத்தனை தின்றாலும் செரியாக்குண முண்டா யிருக்க மாட்டாது. பெண் பிள்ளைகளை ஜிமாஹு செய்கிறது கொண்டு அதிகமாகியா லெஸ்ஸத்துண்டாகும். இந்திரியத்துக்குப் பகரமாகக் காற்றுப் புறப்படுகிறது கொண்டு லெஸ்ஸத்துண்டா யிருக்கும். ஜிமாஹு செய்தவுடனே மறுபடியும் பெண் பிள்ளைகளுக்குக் கன்னி யாதாரமுண்டாகும், அது வருத்தத்தையும் அருவருப்பான வஸ்துவையு முண்டாக்கி வைக்க மாட்டாது. அவர்களவ்விடத்தில் உலாத்துகிறது சுற்றிப் பார்க்கிறதாகிறது ஏறு வாகனங்கள் பேரிலும் சிங்காதனங்கள் பேரிலும் ஒரு மாதத் தரிப்பாட்டை ஒரு சாஅத்திலே போகிறது கொண்டு உள்ள தீவிரத்துடனேயாக விருக்கும். சுவர்க்கத்திற்கு பாய்கள் பங்களாக்கள் ஒரு முத்தினாலேயும், மாகதத்தினாலேயும் பவளத்தினாலேயும், வில்லூரியினாலேயும், முத்து இரத்தினங்களினாலேயும் பலபல வகையான நிறங்களுடைய தாயுமிருக்கும், அதினுடைய உயர்த்திகளாகிறது 70-நாளையின் வழிப் பாடாக விருக்கும், அகலமும் அப்படிப் போலேதான்.

ஏனனால் ஒரு தலம் அகலமும் உயர்த்தியு மென்று போலல் லாமற் தூரப்போனால் அது அழகானதல்ல, அந்த வீடுகளுடைய கோணங்களில் மிகுதியான பேர்களிருப்பார்கள். ஒருவர் ஒருவரைப் பார்க்க மாட்டார்கள். ஒவ்வொருவருக்கு மிகுதியான பணிவிடைக் காரர் பெண்ஜாதிமார்களிருப்பார்கள். உடையவன் அவர்களிடத்திலெப்படி நாடுகிறானோ அப்போது போய் ரூஹத்துப் பெறுவான். சுவர்க்கங்கள் எட்டாக விருக்கும், அதிலே ஏழாகிறது மனிதர்கள் குடியிருக்கிறதற்காக விருக்கும். எட்டாவது அல்லாஹுத் தஆலாவுடைய தீதாறைச் சந்திக்கிறதற்காகப் போய்க் கூடுகிறதற்காக விருக்கும். சுவர்க்கத்துடைய நாமங்களாகிறது ஜன்னத்துல் மஃவா, தாறுல் மக்காம், தாறுஸ்ஸலாம், ஜன்னத்துல் குல்து, ஜன்னத்து நஈம், ஜன்னத்துல் பிருதவுசு, ஜன்னத்துல் அதனு. இவைகளில் ஜன்னத்துல் பிருதவுசாகிறது எல்லா சுவர்க்கங்களுக்கு மேலானதாக விருக்கும். இதிலே ஜன்னத்துல் அதன் ஆகிறது தட்டுகளில் மெத்தவும் உயர்த்தியானதாக விருக்கும். எல்லா நேரமு மதிலே அல்லாஹுத் தஆலாவுடைய தஜல்லி யுண்டாகும், மட்டில்லாத வகை வகையான புதிதாகிய நிஃமத்துகளுண்டாகும். எட்டிலும் சுவர்க்கத்துடைய நாமத்

தில் இஃறிலாபு இருக்கிறது. இபுனு அப்பாஸ் றலியல்லாஹுஅன்ஹு அதின் பேராகிறது, இல்லீனென்று சொன்னர். குர்ஆனிலே இல்லீனுகிறது சுவர்க்கவாதிகளின்றி கடுத்தத்துனுடைய தல மென்றும், அல்லாஹுத் தஆலாவுடைய சமுகத்துக்கு முடுகுதலான மலாயிக்கத்துகள் மனிதர்களுடைய தல மென்று வந்திருக்கிறது.

சிறிது உலமாக்கள் அதற்குப் பேர் ஜன்னத்துல் குதூபென்று சொன்னர்கள். அதாகிறது ஒரு ஹதீதிலேநின்று மெடுக்கப்பட்டதாயிருக்கும், அந்த ஹதீதாகிறது மனிதர்கள் கஸ்தூரியினுலுண்டாகிய குதூபென்கிற மணல் மேலிட்டிருப்பார்கள், அப்போது ஒரு காற்று வீசும், அதினலே அந்தக் கஸ்தூரியெல்லாம் அவர்களுடைய பிடவைகளிலேயும், முகங்களிலேயும் விழும். அப்போதவர்களுடைய மணத்துடனே அதைக் கொண்டு மணமிரட்டிப்பாகும், அப்போது அல்லாஹுத் தஆலா தஜல்லியாவான். அப்போதவர்களுடைய வேண்டுதல் படிக்குப் பறக்கத்துகளும், ஒளிவுகளுமுண்டாக்கி வைப்பான். இந்த கிதாபு கோர்வை செய்தவர் சொல்லுகிறுர், என்னுடைய இத்திகாதுபடிக்கு அதினுடைய பேராகிறது மக்குஅதுசிதுகாக யிருக்கும் அதாகிறது குர்ஆனிலே தக்குவாவுடைய பேர்கள் சுவர்க்கங்களிலேயும், அதினுடைய ஆறுகளிலேயும் அல்லாஹுத் தஆலாவுடைய குதுறத்தின் கீழே அவனுக்கு முடுகுதலாகிய மலக்குகளிடத்திலே யிருக்குமென்னத்தக்க அவனுக்குப் பொருத்தமாகிய மக்குஅதுசிதுக்கென்கிற தலத்திலு மிருப்பார்களென்கிற ஆயத்திலே யிருந்து எடுக்கப்பட்டது.

சுவர்க்கத்துடைய தட்டுகளுக் கெல்லா மோரமாக ஒரு தட்டுண்டும், அதற்குப் பேராகிறது வசிலா, அதாகிறது நம்முடைய நாயகம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமர்களுக்கே தனதாக விருக்கும். அதினுடைய குணமாகிறது அவ்விடத்தி லிருக்கிறவர்களுக்கு வசிறுடைய ஹுக்குமாக விருக்கும். சுவர்க்கத்திலுள்ளவர்களில் எந்த உம்மத்துகளுக்கும் யாதொரு நிஃமத்தும் யாதொரு பொருட்டும் அவருடைய பறக்கத்துக் கொண்டு அவருடைய கையைக் கொண்டு சேருமே யல்லாமல் வேறில்லை. அந்த தட்டுகளாகிறது வீடுகளுடைய தட்டுகள் ஒன்றை யொன்று மறைத்துப் போகிறதே அப்படிப் போல யாதொரு தட்டு ஒரு தட்டை மறைக்க மாட்டாது என்கிலும் எல்லாத் தட்டுகளுடைய மேல் மேடாகிறது அல்லாஹுத்த ஆலாவுடைய

அறுவஷாக யிருக்கும். அதுகளாகிறது தாழ்ந்தத் தோட்டம் உயர்ந்தத் தோட்டம் போலே ஒன்றுக்கு நடுவாலே யொன்று ஒன்றைச் சுற்றி வாசற் சூழ்ந்து கொண்டிருக்கும்.

ஒன்றினுடைய விஸ்தீரணம் எவ்வளவு வென்று அல்லாஹுதஆலாவுக்குத் தவிர மற்றொருவருக்குந் தெரியாது. கீழ்த்தட்டிலிருக்கிற மனிதர்களுக்கு மேற்றட்டிலிருக்கிற மனிதர்கள் மகரிப் புறம், அல்லது மகரிப்புறத்துடைய ஓரத்திலிருக்கிற நட்சத்திரத்தைப் போலே தெரியும். ஜன்னத்துல் மஃவா எல்லாத்துக்குங் கீழேயும் ஜன்னத்துல் அதன் நடுவாலேயும் ஜன்னத்துல் பிருதவுசு எல்லாத்துக்கும் மேலாகவு மிருக்கிறதென்கிறதாய் அறியப் பட்டிருக்கிறது. சுவர்க்கவாதிகளில் மெத்தவும் சிறிய தறஜாத்துடையவனு கிறது துனியாவிலே ஆசை வைக்கப்பட்ட தௌலத்துகளைப் போலே பத்து மடங்கதிகமாக அவனுக்குண்டா யிருக்கிறது. இன்னும் ஒரு ரிவாயத்தி லவனுடைய வீடுகள், தோட்டங்கள், வேலைக்காரர், பணிவிடைக்காரர் நிஃமத்துகள், சிறப்புகளிருக்கிற தலமாகிறது 70-வருஷத்து அடிப்பாடாக விருக்கிற தென்று வந்திருக்கிறது. சுவர்க்கத் துடைய நிஃமத்துகளிற் சிறிது பழங்கள் மெத்தவும் பெரிதாகவும், மணமாகவு மிருக்கிறது. அதை யுடைத்த வுடனே அதிலிருந்து மெத்தவும் அழகான முகமும், அழகான பேச்சும், பெருமையான உடுப்புகள் விலை பெற்ற நகைகளுடனே வாலிபமுள்ளவளாய் வெளியே வந்து உடையவனுக்கு கிதுமத்துகள் செய்து கொண்டு அவனுடனே மருகுதலாக விருப்பார்கள்.

சுவர்க்கவாதிகளுடைய உயரமாகிறது ஆதம் அலைஹிஸ்ஸலாத் துடைய உயரத்தைப் போலே துனியாவுடைய மனிதர்களினது முழத்தைக் கொண்டு அறுபது முழமாகவும், அதற்குத் தக்க உறுப்புகளுடையவர்களாயும், சந்தோஷமான அழகாகிய சூரத்தை யுடையவர்களாகவும், முப்பத்து மூன்று வயதுடைய வாலிபக்காரர், போலாகவு மிருக்கிறது, துனியாவில் வருத்தமில்லாமல் மீச்சு எப்படி யெட்டிப் படிகிறதோ அப்படிப் போலே அல்லாஹுதஆலாவுடைய திக்று அவர்களுடைய மனதிலேயும், நாவிலேயும் நடந்து கொண்டிருக்கிறது. சுவர்க்கத்துடைய இன்பங்களைக் கொண்டு சடலமெப்படி அனுபோகம் பண்ணுகிற்தோ அப்படிப் போலே அல்லாஹுதஆலா

வுடைய தஜல்லியைக் கொண்டும், ஒளிவைக் கொண்டும், அவர்களுடைய உள்ளங்கம் லெஸ்ஸத்துப் பெற்றுக் கொண்டிருக்கும்.

சுபுஹானல்லா சுவர்க்கத்தில் ஒரு மாமுண்டு, அதினாலே நாவுகளுக்கு நிஃமத்துகளுடைய லெஸ்ஸத்துகள் எப்படியுண்டா யிருக்கிறதோ அப்படிப் போலே றாஹாசுளும் துப்புறவாகிய தஜல்லியுடைய சந்தோஷத்தை யணைந்ததாக வெகு சந்தோஷமாக யிருக்கும். சுவர்க்கவாதிகள் வகை வகையான நிஃமத்துகள் லெஸ்ஸத்துகளை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். அந்த நிஃமத்துகளிலே யெல்லாம் மெத்தவும் வரிசையான நிஃமத்தாகிறது அல்லாஹூத் தஆலாவுடைய தீதாறு அதாகிறது நாலு மறுத்தபாவின் பேரிலா யிருக்கும். சிறிது பேர்கள் வருஷத்திற் கொருதரம் அந்த வலுப்பமாகிய நிஃமத்தைக் கொண்டு சிறப்புப் பெறுவார்கள். சில பேர்கள் மாதத்திற்கொருதரமும் சிலர் கிழமைக் கொருதரமும் சிறப்புப்பெறுவார்கள். சிறிது காஸ்ஸான பேர்கள் ஒரு நாளைக் கிரண்டுதரம் சிறப்புப் பெறுவார்கள்.

ஹதீதிலே சுபுஹூ அஸருடைய தொழுகையைச் சாளையப் பாட்டுடனே அதபுடனே அதாச்செய்கிறதாகிறது ஒரு நாளைக் கிரண்டு தரம் அந்த சிறப்பைப் பெறுகிறதற்கு மெத்தவும் உதவியாக விருக்கிறதென்று வந்திருக்கிறது. இன்னும் காஸ்ஸான பேர்களில் மெத்தவும் காஸ்ஸான பேர்கள் ராஜாக்களுடைய சமுகத்திலிருக்கிற பயல்கள் வெள்ளாட்டிகளைப் போலே ஒரு நிமைக் கொட்டி முழிக்கிற நேரமாவது தீதாறை விட்டு மறந்திருக்க மாட்டார்கள். தீதாறுண்டாகிறதாகிறது சுவர்க்கத்துடைய ஏழு தட்டுக்கு மேலே யிருக்கிற எட்டாந் தட்டிலே ஒருமைதான், அதிலே ஹூறுல் ஈன்களுமில்லை. மாளிகைகளு மில்லை. அறுசுக்குத் தாழ்வாக விருக்கும், அவ்விடத்தில் மரகதம் முத்து, பவளம், வெள்ளி, பொன் இப்பேர்க் கொத்ததினாலே ஒளிவாகிய நாற்காலிகளுண்டு, அவைகளில் அவரவர்களுடைய மறுத்தபாப்படிக்கு இருப்பார்கள். சில பேர்கள் நாற்காலி யில்லாதவர்கள், கஸ்தூரி அம்பரினாலுண்டாகிய மேடைகளின் பேரிலே யிருப்பார்கள். அவரவர்களுடைய சந்தோஷம், ரூஹத்துகள் மறுத்தபாத் தாழ்வுண்டா யிருக்க மாட்டாது. தங்கள் தங்கள் தலத்திலே சந்தோஷத்தை அணைந்து கொண்டிருப்பார்கள்.

அப்போது குளிர்ச்சியாகிய பல பல வகையான மணங்களுடைய ஒரு காற்று வீசும், அதெப்படிக் கொற்ற காற்றானல், அதைப்போல

துனியாவிலும் சுவர்க்கத்திலும், கண்டிருக்க மாட்டார்களே, அப்பேர்க் கொற்ற காற்று யிருக்கும். அப்போது அல்லாஹுத் தஆலா அவர்கள் பேரில் தஜல்லியாவான், அந்த தஜல்லி ஒருவரைக் கொண்டு ஒருவருக்கு மறைந்திருக்க மாட்டாது. அவரவர்கள் தங்களுடைய ரகசியத்தை மற்றொருவரறியாமற் பேசலாமே, அவ்வளவு மட்டுக்கு அவரவர்களுக்குத் தஜல்லி முடுகுதலாக இருக்கும். வலுப்பத்தையுடைய நாயனது மொழிகள் ரகசியத்திலும், பராசியத்திலும் கேட்பார்கள். அப்போது ஷறுபன் தஹூறுவென்கிற குடிப்பை யெல்லாருக்கும் கொடுக்கும் படியாய் மலாயிக்கத்துகளுக்கு ஹுக்குமாகும். அதினாலே புதிது புதிதாகிய நிஃமத்துகளை அனுபோகம் பண்ணிக் கொண்டு மகா சந்தோஷத் துடனே யிருப்பார்கள்.

அதைக் கண்டவர்கள் தீதாறுடைய லெஸ்லத்திலே யெந்தப் படிக்கு முங்கி யிருப்பார்களானால், அதைத்தவிர மற்ற நிஃமத்துகளை யெல்லாம் மறந்து விடுவார்கள். இன்னும் சுவர்க்கத்துடைய நிஃமத்துகளைத் தீதாறுடைய நிஃமத்துகளுக்குச் சமானமாக்குகிறதில் ஒரு கோதுமைக்குங் கொள்ள மாட்டார்கள். அவ்விடத்தி லிருந்து பயணமாய் வருகிற போது வெளியிலே ஒரு கடை யிருக்கும். அதை ஒருவருங் கண்ணாலே பார்த்திருக்க மாட்டார்கள், காதினாலே கேட்டிருக்கவு மாட்டார்கள், அப்படிக் கொத்த நிஃமத்துகளுண்டா யிருக்கிறது. அவர்கள் அவைகளிலெதை யெதை நாடுகிறார்களோ அதை யதை மலாயிக்கத்துகள் வாங்கிக் கொடுப்பார்கள். இன்னும் அவ்விடத்தில் மெத்தவும் அழகாகிய சூரத்துகளுண்டா யிருக்கும், அந்தச் சூரத்துகளில் அவர்கள் எந்தச் சூரத்தைப் பார்த்து அதின் படிக்குத் தங்களுடைய சூரத்து ஆகவேணு மென்று நாடுகிறார்களோ அந்தச் சூரத்துப் படிக்காவார்கள்.

பின்பு அவ்விடத்தி லிருந்து சுவர்க்கத்திற்கு வந்த போது அவ்விடத்து ஹூறுல் ஈன்கள் அவர்களுடைய அழகைப் பார்த்து ஹைறானுவார்கள். அப்போது அவர்களுடைய அழகு மிவர்களைப் போலதிகமாகும். அப்போதவர்கள் ஒருவருக் கொருவர் நல்மாராயஞ் சொல்லிக் கொண்டு உங்களுக்கழகின் பேரிலே அழகும், நிறப்பத்தின் பேரிலே நிரப்பமும், அதிகமான சபபு என்ன வென்று கேட்பார்கள். அதற்கு ஜவாபு அல்லாஹு தஆலாவுடைய வீட்டைக் கண்டு ஜெயம் பெற்றவர்களுக்கிந்தப்படியே யுண்டாகு மென்று சொல்வார்கள். அல்லாஹு

தஜூலாவும் ஒவ்வொரு வேளை அவர்களுடைய வீட்டிலும் தஜலீல் யாகிறது கொண்டு அவர்களுக்கந்த தஜல்லியைப் பார்க்கிறதைக் கொண்டு சந்தோஷமாகிக் கொண்டு சிறப்புகள் பெற்றுக் கொண்டிருப் பார்கள். சுவர்க்கத்திலுள்ள அழகாகிய ராகங்கள் மூன்று வகையா யிருக்கும். அதில் ஒன்றுவது தூபா வென்கிற மரத்திலே காற்று வீசுகிறது கொண்டு அதினுடைய கிளைகள் இலைகளிலிருந்து அழகாகி ராகங்களுண்டாகும். அதைக் கேட்டவர்கள் மெய்மறந்து போவார்கள். சுவர்க்கத்தி லெல்லா வீடுகளிலும் அந்த மரத்துடைய ஒரு கொப் புண்டா யிருக்கும். அதிலே பலபல லெஸ்ஸத்துடைய பலபல வகை யான உடுப்புகளும், மணமாகிய வாடைகளும், நூதனமான ராகங்களும் மிகுதியாகிய அழகையுமுடைய ஹூறுல் ஈன்கள் சிறிது தலத்திலே கூடிக் கொண்டு தங்களுடைய அழகுகள், நடத்தைகள், குணங்களைக் கொண்டுந் தங்களுடைய புருஷமார்களுடைய உன்னிப்புகளைக் கொண்டும் சொல்லுகிறது கொண்டு மெத்தவும் ராகமான ஓசையுடன் துனியாவிலே கலியாணங்களிலே பாசிக்கான மூதேவிகள் எந்தப் பெண்பிள்ளைகள் பாடுகிறது கொண்டு கேட்கிறார்களோ அப்படிப் போலே ராகம் பாடி வன்னிப்பார்கள்.

மூன்றுவது சிறப்பாகிய நாயனுடைய தீதாருக்குக் கூடி யிருக்கிற போது உத்திரவாகும். அப்போதவனுடைய முடுகுதலாகிய அடியார் களில், மலாயிக்கத்துகளில் இசுறுபீல் அலைஹிஸ்ஸலாம், அன்பியாக் களில் தாவூது அலைஹிஸ்ஸலாம் இவர்கள் அல்லாஹுத் தஜூலாவைத் தசுபீஹு செய்கிறது கொண்டும், வன்னிக்கிறது கொண்டும் அவர்க ளுக்கும் ராகம் வெளியாக்குவார்கள். அந்த ராகத்தைக் கேட்கிறதைக் கொண்டு மனிதர்களுக்கதிகமான லெஸ்ஸத்தும் ஆசையு முண்டாகும். சுவர்க்கத்திலொருவரும் பெண்ஜாதியில்லாமலிருக்க மாட்டார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா சுவர்க்க வாதிகளும் துனியாவிலே கலியாண மில்லாமல் மௌத்தாய்ப் போன பெண் பிள்ளைகள், சிறு வயதிலே மௌத்தாய்ப் போன பெண்களும் இவர்களில் இரண்டு சாலி ஹான பெண்ஜாதியு முண்டா யிருக்கும், சிறிது பெண் பிள்ளைகள் ஒருவனுக்கு பிறகு ஒருவனாய் நாலைந்து புருஷமார்களை யுடையவர்க ளாக யிருப்பார்கள். அவர்கள் துனியாவிலே யெந்தப் புருஷனுடனே யதிகமான உவப்பையும், ஆசையும், துனியாவுடைய நிஃமத்துகளையும் பெற்றார்களோ அவனுக்குச் சுவர்க்கத்திலே பெண்ஜாதியாக விருப் பார்கள். அந்த நிஃமத்துகளுடனேயும், லெஸ்ஸத்துகளுடனேயும்

7000-வருஷம் சென்று போனதற்குப் பின்னாலே ஒரு தரம் நாய னுடைய தீதாறிலே இருக்கிறபோது அல்லாஹூ தஆலா யென்னுடைய அடியார்களே யேதாகிலும் தேட்டறிவு ஆசைகள் உங்களுக்கு வேண் டியது, மிச்ச மிருக்கிறதா வென்று கேட்பான்.

அவர்கள் ஆண்டவனே ! எங்களுக்கு வேண்டியது கிடைக்காதது எங்கள் மனதிலே யொன்றுமில்லை. எங்களுடைய தேட்டறிவைக் காண ஆயிரந் தறஜா அதிகமாக வெங்களுக்குக் கொடுத்தாய், இப்போ தெங்களுக்கு வேண்டுமானதாக ஒரு நாட்டம் அதைக் கொண்டு கேட்கும் படியாய் எங்கள் மனதிலே வரவில்லை யென்று சொல்வார்கள். அப்போது அல்லாஹூ தஆலா மெய்தான் இப்போது உங்களுக்கு ஒரு கவனீதமான நிஃமத்தைக் கொடுக்கிறேன். அதாகிறது யென்னுடைய பொருத்தத்தை அதற்குப் பின்னாலே ஒரு போது முங்கள் பேரிலே கோபமாக மாட்டே னென்று திருவுளமாவான். அப்போது அந்த பொருத்தத்துடைய பறக்கத்திலே குவ்வத்துக்கு அதிகமான ஒரு பெலவந்தம் றாஹூகளிலும், ஜடலங்களிலும் ஒரு லெஸ்ஸத்துண் டாகும். அதைக் கொண்டு சுவர்க்கத்துடைய மற்று முண்டாகிய நிஃமத்துச் சமானமாகிறது கொண்டு புழுதிமையை மலையுடனே சமான மாக்கிறது போலா யிருக்கும்.

சுவர்க்கவாதிகளுடைய காதிம்கள் மூன்று வகையாகவிருக்கும். அதில் ஒன்ருவது அவர்களுக்கும் அல்லாஹூத் தஆலாவுக்கு மிடை யிலே தூதாக வரப்பட்ட மலாயிக்கத்துகளாக விருக்கும். அல்லாஹூத் தஆலாவுடைய புரத்தினாலே யென்ன நிஃமத்து அவர்களுக் குண்டாகிற தோ அதை யவர்களுக்குக்கொண்டு வந்துசேர்ப்பார்கள். இவர்களென்ன சொல்லுகிருர்களோ அதை அல்லாஹூத் தஆலாவுடைய சமுகத்திற் போய் சொல்வார்கள், அப்படிப்போலேதான் அன்பியாக்கள் முடுகு தலான பேர்களுடைய விசளமும் போய்ச் சொல்வார்கள் அவர்கள் இவர்களுடனே தோழமையா யிருப்பார்கள். இரண்டாம் வகையா கிறது சில்மான்களாக விருக்கும், அவர்கள் ஹூறுல் ஈன்களைப்போ லெங்நாளுமொரு வயதை யுடையவர்களாக வேறே யொருபடைப்பாக விருக்கும், கோவைகளிலிருந்து அற்று விழப்பட்ட முத்துகள் எந்தப் படி பூமியில் ஓடுமோ அப்படிப்போலே சுற்றிக்கொண் டிருப்பார்கள்.

மூன்ருவது காபிரானபேர்களுடைய சிறுபிள்ளைகள் நம்முடைய நாயகம் றஸூல் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் தங்களுடைய

உம்மத்துகளுக்கு அவர்களைக் காதிமாக்கும் படியாய்த் துஆக்கேட் பார்கள், அவர்களுடைய துஆக் கபூலாகும். அவர்கள் கேட்குந் துஆ வாகிறது, ஆண்டவனே அந்தக்காபிரான பேர்களுடைய பிள்ளைகள் முன்னாலே அலஸ்துடைய நாளையில் உன்னுடைய ஓர்மைப் பாட்டைக் கொண்டு விண்ணப்பஞ் செய்தார்கள், அதற்குப் பிறகு அவர்கள் உன் னுடைய ஓர்மைப்பாட்டைக் கொண்டு விண்ணப்பஞ் செய்யப்பட்ட புலூகுடைய காலத்தையவர்க ளெத்தவில்லை. ஆனபேர்தே அவர்களில் குபிர் ஒருபோது முண்டாகவில்லை, ஆனபடியினாலே நீ யெந்தப்படிக் குத் துன்யாவிலே அவர்களைச் சிறைபிடித்து அவர்களைப் பயலாக்கிக் கொள்ளுகிறதைக் கொண்டும் என்னுடைய உம்மத்துகளுக்கு ஜாயி லாக்கி வைத்தாயோ அப்படிபோலே சுவர்க்கத்திலும் என்னுடைய உம்மத்துகளுக்கு காதிமாக்கிவை யென்கிறதாக விருக்கும்.

அலஸ்துடைய நாளாகிறது அல்லாஹுத் தஆலா கல்குகளைப் படைக்கிறதற்கு முன்னே அவர்களுடைய றூஹுகளெல்லாம் படைத்து ஆலம் அறுவாஹில் நான் உங்களுடைய நாயனல்லவா வென்று கேட்டானே அப்போது மெய்தான் எங்களுடைய நாயன் நீதானென்று விண்ணப்பஞ் செய்தார்களே அந்த நாளாயிருக்கும். அவைகளெல்லாம் நரகத்துடைய பேர்கள் சுவர்க்கத்துடைய பேர் களுடைய விசளமாயிருக்கும். சிலபேர்கள் அவர்கள் தவாபுக்குப் பாத்திரமாகும் அவர்களினது நன்மைகளினுடைய தட்டு கனக்கவு மாட்டாது. அதாபுக்குப் பாத்திரமாகும்படியாய் அவர்களுடைய தீமைகளுடைய தட்டுக் கனக்கவுமாட்டாது, இரண்டு தட்டுஞ் சரி யாகவே யிருக்கும். அவர்கள் சிறாத் தென்கிற பாலத்தைக் கடந்த தற்குப் பின்னாலே நரகத்துக்கடுத்தாமையா யிருக்கிற தலங்களில் வந்தவுடனே அவர்களை அவ்விடத்திலே தடுக்கப்பட்டு அவ்விடத் திலேயே யிருத்தாட்டப்படும். இன்னும் சிலபேர்களை அன்பியாக்கள் அழைத்தது அவர்களுக்கு எற்றுமலும் நன்மை திமை ஒன்றும் செய்ய வில்லை, அல்லாஹுத் தஆலாவுக்கு இணைவைக்கவில்லை, என்கிலும் ஆடு மாடுகளைப்போலவே உண்கிறதும் தின்கிறதும் புணர்ச்சி செய்கிறதும் ஜீவனத்துக்காகப் பாடுபடுகிறதுமாக யிருந்தார்கள். இன்னுஞ் சில பேர்கள் புலுகான பிறகு பயித்தியம் அதிகமாய்க் கோழைத்தனங் கொண்டு அன்பியாக்களுடைய மார்க்கங்களுடைய கல்புகளைத்திருப்பி இது ஹக்கானது இது பாத்திலான தென்றறிந்து அமல் செய்யா மலிருப்பார்கள், அவர்களெல்லாம் அந்த நரகத்திற்கு அடுத்தாமையா

கிற அஃறுபென்று பேறுடைய தலத்தில் 50,000-வருஷம் ஆகிய மஹ்ஷறுடைய நாள் தீருகிறவரையி லிருப்பார்கள்.

அப்போதவர்கள் நரகத்திலிருக்கிற காபிரான பேர்களுடைய வருத்தத்தைப் பார்க்கிறது கொண்டு அவர்களுக்கு பயங்காமும் திடுக்கமு முண்டாகும். சுவர்க்கத்துடைய பேர்களைப் பார்க்கிறது கொண்டு அதிலே புகுதுகிறதற்கு உத்திரவாக வில்லையே யென்று கை சேதப்பட்டுக் கொண்டிருப்பார்கள், என்கிலும் நரகத்தை விட்டும் கலாசானபடியினலே சுவர்க்கத்திலே புகுதுவோ மென்கிற ஆதரவு வைப்பார்கள். இப்படியிருக்கிறபோது சுவர்க்கத்துடைய பேர்களுக்கு அவர்களுக்குப் பாத்திரமான நல்மாருயம் போலொத்த சொற்கள் சொல்வார்கள். நரகத்துடைய பேர்களுக்கு அவர்களுக்குப் பாத்திர மான பழிப்புகள், கைசேதங்களான சொல்கள் சொல்வார்கள். அதற் குப் பின்னலே அல்லாஹுத் தஆலாவுடைய வரிசைக் கொண்டும் சுவர்க்கத்துடைய பேர்களைத் துடந்தவர்களாகச் சுவர்க்கததில் புகுதி வார்கள்.

இன்னும் சில ரிவாயத்தில் வந்திருக்கிறது, சில கூட்டங்கள் அவர்களில் சிலபேர் புலுக்கை எத்தி ஹக்கையும், பாத்திலையும், பிரித்தறிகிறதற்கு அறிவில்லாத பேர்களையும், சில பேர் அறிவுண்டா யிருந்து அவர்களுக்கு அன்பியாக்களுடைய விசளங்களும் திட் டாந்தரங்களும், அவர்களுடைய காலம் தூரமாயுமிருந்தது. நபிமார் களுடைய பிரசங்கம் அந்தக் காலத்திலில்லாமலு மிருந்த சபபு கொண்டாவது அல்லது அவர்களிருந்த தலம் தூரமாக இருந்து அவ்விடத்தில் நபிமார்களாவது, உம்மத்துகளில் யாராவது போய் நபிமார்களுடைய திட்டாந்தரங்கள், மார்க்கத்துடைய தலீல்கள் அவர்களுக்கு வெளியாக்கி அவர்களை அழைக்காமலிருந்த சபபினலே யாவது ஹக்கையும், பாத்திலையும் அறியாமலிருந்த அந்தக் கூட்டங் களடங்கலையும் அல்லாஹு தஆலா ஒரு தலம் அதற்கு நடுவாலே நெருப்பைக் கொண்டு நிரப்பப்பட்டிருக்குமே அப்படிக் கொற்ற தலத்திற் நிறுத்திவைத்த பிறகு அல்லாஹுத் தஆலா அவர்கள் பேரில் தஜல்லியாகி, என்னுடைய அடியார்களே நான் யாரென்று கேட்பான். அப்போது அவர்கள் முன்னல் அலஸ்துடைய நாளையிற் சொன்னது போல் எங்களைப் படைத்த நாயன் நீதானென்று சொல்வார்கள், அப்போது நாலுங்களுடைய நாயனுன படியினல்

நானென்ன சொல்லுகிறேனே அந்தப்படி செய்யுங்க ளென்று உத்திரவாகும்.

அப்போது அவர்களெல்லாரும் தயாருக விருப்பார்கள். அப்போது நீங்களடங்கலுமிந்த நெருப்பில் விழுங்களென்று உத்திரவாகும். அப்போது சில பேர்கள் உடனே கொஞ்சமும் யோசனை செய்யாமல் அந்த அதிகமாகிய சுடர்விட்டெரியப்பட்ட நெருப்பில் விழுந்து விடுவார்கள். சில பேர்கள் யோசனை செய்து கொண்டு, ஆண்டவனே இந்த வேலைக்கு நாங்கள் சக்திபெறுவோமா, எங்களுக்கது பொல்லாத வேலையாக இருக்கிறது, எங்களாலேயாக மாட்டாதென்று சொல்வார்கள். அல்லாஹுத் தஆலா அந்த நெருப்பில் விழுந்த பேர்களுக்கு அந்த நெருப்பை பூந்தோட்டமாகவும், ருஹுத்தானதாகவும், சலாமத்தான குளிர்ச்சியாகவுமாக்கி யவர்கள் துனியாவிலே என்னுடைய ஏவல்களை எத்தினர்களேயானல் அந்தப்படிக்குச் செய்வார்கள். ஏனெனில் நான் துனியாவில் அந்த நெருப்பைக்காண மெத்தவும் லேசானது என்னையோர்மைப் பாடாக வணங்குகிறதை நான் ஹுக்கும் செய்தேனென்று திருவுளமாகி மற்றொரு கூட்டத்தைப் பார்த்து நீங்கள் துனியாவி லென்னுடைய யேவல்களை யெத்தின போதைக்கும் நீங்கள் உங்களுடைய சரீர இச்சைகள் குடும்பத்தாருடைய உவப்புகளைக் கொண்டு பராக்காக விருந்தீர்கள்.

இப்போது அவைகளொன்றுமில்லை. நான் முகமுகமாகப் பண்ணிய உத்திரவை நீங்கள் தள்ளிப்போட்ட மட்டுக்கும் மறைவிலே யுங்களைப்போலொத்த ஒஜீவனந் தூக்கமுள்ள மனிதர்களுடைய தூதையெப்படிக்கு நீங்கள் நிண்ணயங் கொள்வீர்கள். இப்போது நீங்கள் என்னுடைய உத்திரவைத் தள்ளிப்போட்ட மட்டுக்கும் துனியாவிலெப்படி கபூல்செய்வீர்கள். நீங்கள் காபிரானவர்கள் தான், ஆனபடியினலுங்களுடைய கூட்டத்துடனே நரகத்திலே புகுதுங்களென்று திருவுளமாவான்.

ஆதமுடைய மக்களைப்போல ஜின்களும் மார்க்கங்களைக் கொண்டும் ஏவப்பட்டவர்களாக விருக்கும். அல்லாஹுத் தஆலா அர்ரஹ்மான் என்ற சூரத்திலே, தவாபு அதாபுடைய எல்லா இடங்களிலும் மனிதருடனே ஜின்னையுஞ் சேர்த்துச் சொல்லியிருக்கிறன், என்கிலுங் கேள்வி கணக்குக் கேட்பதற்குப் பின்னலே ஜின்களுடைய கால் எந்த படியாமென்கிறதிலே உலமாக்கள் இக்த்திலா பானர்கள். அதிற்

சில உலமாக்களுடைய சொற்படிக்குக் காபிரான ஜின்களுக்கு ஊழி காலம் நரகமாக விருக்கிறது, சாலிஹான ஜின்களுக்கு அறவே சுவர்க் கத்திற் புகுதுகிறதில்லை என்கிலும் ஆடு மாடுகளைப் போல மண்ணுய்ப் போவார்கள். சில உலமாக்களுடைய சொற்படிக்குச் சாலிஹான ஜின் களுக்கும் ஊழிகாலம் தவாபுண்டாயிருக்கும், என்கிலும் சுவர்க்கத்தை அல்லாஹுத் தஆலா நம்முடைய தகப்பனர் ஆதம் அலைஹிஸ்ஸலாத் துக்கு நன்கொடையாக கொடுத்தபடியினல் அந்தச் சாலிஹான ஜின்கள் சுவர்க்கத்துக் குடையவர்களாக மாட்டார்கள்.

என்கிலும் குடியாண்வர்களைப் போல சுவர்க்கத்துடைய சுவருக்குச் சூழவர விருப்பார்கள். பிரயோஜனங்கள் நிஃமத் துகளெடுத்துக் கொண்டு போகிறதற்காக நாட்டுப்புறத்தாரைப் போலே சுவர்க்கத்துக்கு வந்து போய் யிருப்பார்கள். சுவர்க்கத் துடைய அந்த ஜின் நிஃமத்துகளைக் கொண்டும், பெண் பிள்ளைக் கொண்டும் அவர் பிரயோஜனம் பெறுவார்கள். இன்னமொரு கவுலைக் கொண்டும் அவர்களும் ஆதமுடைய மக்களைப்போலே சுவர்க்கத்திற் புகுந்து சுவர்க்கத்தை யுடையவர்களாக விருப்பார்கள். நடுத்தரமான சொல்லாகிறது யோசனைக்கு மெத்தவும் முடுகுதலாக அப்படியே ஹதீதும் வந்திருக்கிறது. அல்லாஹுத் தஆலா குர் ஆனிலே பூமியில் ஊர்வினை தன்னுடைய விர்ண்டு சிறகைக் கொண்டும் பறக்கிற பறவினை இவைகளெல்லா முங்களைப் போலே உம்மத்துகளே யல்லாமல் வேறில்லை. லவ்ஹுல் மஹ்பூலிலும் அவைகளொன்றையும் விடவில்லை. பின்பு அவர்களுடைய நாய னளவிலெழுப்பப்படுவார்களென்கிற ஆயத்தாயிருக்கும். ஊர்வினை பறவினை அடங்கலுக்கும் எழுப்புகிற துண்டென்றும் அதில் அநீதஞ் செய்தவைகளிலிருந்து அநீதஞ் செய்யப்பட்டதுகளுக்குப் பழிவாங்கிக் கொடுக்கப்படுமென் றறிவிக்கிறது. அதாகிறது அவை களிலே கொம்பிருக்கிறது கொம்பில்லாததற்கும் பெலமில்லாதற்கும் பெலமும் கொடுத்து நொம்பலப் படுத்தும்படியாய் பண்ணப்படும்.

அதன் பிறகு அவர்களுக்கு நரகமும் சுவர்க்கமுமில்லை, என்கிலும் சுவர்க்கத்துடைய மண்ணுய்ப்போவார்கள், அவைகளில் அல்லாஹுத் தஆலாவுக்காக குறுபானைப் போலொத்ததில் அறுக்கப்பட்டது களுக்கு மறுத்தயா உயர்த்தியாகும். மனிதர்களுடைய ஹாஜத்தில் அல்லாஹுத் தஆலர்வுடைய திருநாமத்துடனே யறுக்கப்பட்டது

களுக்கு அதைக்கான மறுத்தபாவிலே குறைந்ததாகவும் சுவர்க்கத்து டைய மண்ணிலே வைக்கப்படுவார்கள்.

சுவர்க்கத்துடைய மண்கள் மரங்களைக் போலறிவுள்ளதாக ஒரு வகை லெஸ்ஸத்தை அனுபவிக்கவும் மற்றதைத் துனியாவுடைய மண்ணிலே சேர்த்து துனியாவுடைய பண்ணழிகிற இடத்திலழிந்து போகும், பூமியை இன்பமாகிய கோதுமை மாவைப் போலாக்கிச் சுவர்க்கவாதிகளுக்கு ஜீவனத்துக்குச் சிலவு பண்ணப்படும், பூமியை மாவாக்கிறவேளை மனிதர்களெல்லாம் சிறுத்தென்கிற பாலத்திற் போய்ப் பூமிகாலியாக விருக்குமே அப்போயிருக்கும் சிகாகென்கிற கிதாபிலே மனிதர்கள் சிறுத்தென்கிற பாலத்தைக் கடந்து ஒரு மைதானிலே தடுக்கப்படுவார்கள். அப்போது ஒருவருக்கொருவர் முறைப்பாடுகள் மற்ற லஈபான ஹக்குகளையும் பொருப்பித்துக் கொண்டு துப்புரவாகச் சுவர்க்கத்துக்கு போவார்கள். அப்போது சுவர்க்கவாதிகளுக்கு முன்னால் ஒரு மாடும் ஒரு மீனும் ஹாலிருகி ஒன்றுக்கொன்று சண்டைபோட்டு ஒன்று மற்றொன்றைக் காயமாக்கு வதினாலது செத்துப் போகும்.

அப்போது முதல் மீனுடைய ஈரலைச் சுட்டுக் கபாபாக்கிச் சுவர்க்க வாதிகளுக்கெல்லாம் பங்கிட்டுக் கொடுக்கப்படும், அதன் பிறகு அந்த இரண்டையும் சுட்டுக் கபாபாக்கி பூமியைக் கோதுமை மாவாக்கின மாவுடனே தின்கிறதற்கு கொடுக்கப்படுமென்கிறது. அப்படி மண்ணைப் போலே யழிக்கப்படும் என்கிலும், துனியாவுடைய வஸ்துகள் சில வஸ்து அழியமாட்டாது, அதாகிறது நாற்கால் மிருகங்களில் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாத்துக்குப் பகரமாகக் குறுபான் செய்த துப்பை ஆடும்; சாலிஹு அலைஹிஸ்ஸலாத்துடைய ஒட்டகையும் அஸ்ஹாபுல் கஹ்புடைய நாயும் பூமியில் முளைக்கிற வஸ்துகளில் நம்முடைய நாயகம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லத்துடைய மின்பர் தங்களில் கஹுபாதூறு என்கிற மலை பைத்துல் முகத்தீசுடைய கல் நாயகமான றஸூல் ஸ்ல்லல்லாஹு அலைஹிவஸல்லத்துடைய றவுலாவுக்கும் மின்பருக்கும் பள்ளிவாசலுக்கு மிடையிலிருக்கிற தலம், இவைகளை அதுகளுடைய சூரத்து அழகாக்கிச் சுவர்க்கத்துடைய தைளிபும் ஜீனத்துகளுங் கொடுத்து சுவர்க்கத்திற் கொண்டு வந்து என்நாளும் பத்திரமாக வைக்கப்படும்.

கேள்வி கணக்குடைய 50,000-வருஷத்துடைய நாளாகிய நாள் தீர்ந்து போனதற்குப் பின்னாலேயும் நரகத்தின் பேரில் தூண்கள் நிறுத்தாட்டினதற்குப் பின்னாலேயும் ஊழிகாலத்துடைய நாள் சுறுக்காகும். அல்லாஹுத் தஆலா திருக்கலாமாகிய குர்ஆனில் நபிநாயகத்துடைய ஹதீதிலும் வந்திருக்கிறது, சுவர்க்கத்துடையவர்களுக்கு எந்நாளும் நிஃமத்துகள், முடீகுதல்கள், தறஜாத்துகள், அதிகமாகிறதுண்டாயிருக்கும், நரகத்துடையவர்களுக்கு எந்நாளும் அதாபுகளும் அதிகமாகிய வேதனைகளும், நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வரும். இந்தப்படிக்கு ஊழியுள்ளகாலந் தரிபாடாக விருப்பார்கள். யாதொன்றுக்கும் பனாவில்லை. ஆகையால் அல்லாஹுத் தஆலா முஃமீன் முஸ்லிமான அடியார்களடங்கலையும், ஈமானுடனே மவுத்தாகி கபுறுடைய அதாபை விட்டுஞ் சலாமத்துப் பெற வைத்து மஹ்றஷருடைய அதாபுகள், அமளிகள், கடுசுகள், வருத்தங்களை விட்டுங் காத்து நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய ஷபாஅத் நஸீபாக்கி சுவர்க்கத்திற் புகுதவைத்து அவனுடைய தீதாரையும் திருவுளப் பொருத்தத்தையும் நம்மனைவோர்களுக்கும் தந்தருள்வானாகவும், ஆமீன் ஆமீன் யாறப்பில் ஆலமீன்.

கியாமநாள் விசளம் முற்றிற்று.

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# தஜ்ஜால் நாமா.

## கடவுள் வணக்கம்

### அறபு வசனம்

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன், வல் ஆகிபத்து லில் முத்தகீன், வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா றஸூலிஹி ஸெய்யிதினா முஹம்மதின் வஅலா ஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன்.

### அம்மாபஃது

இந்த மஜ்லிசில் தஜ்ஜாலுடைய கிஸ்ஸாவைப் பேசுகிற கிதாபா யிருக்கும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒருநாள் புதன்கிழமை அன்று பொழுது கிளம்புகிற நேரத்தில் மதீனத்துப் பள்ளியில் நான்குயார்களோடு மிருக்கையில், அப்துல்லா மகன் மல்ஹூ னென்கிறவரும் முஹம்மது ஸல்லமென்கிறவரும் ஆகிய இவ்விரண்டு அஸ்ஹாபிகளும் வந்து நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர் களுக்கு சலாஞ் சொல்லிச் சொன்னார்கள், அதென்னவெனில், முஸ்தபா என்கிற ஊரில் அசிரென்கிறவரிடத்தில் நாங்கள் போயிருந்தோம், அந் நேரத்தில் அல்லாஹுத் தஆலாவுடைய முனிவுபெற்ற தஜ்ஜால் பிறந் தான். அம்மூதேவி பிறந்தவுடனே தாய் தகப்பனிடத்திற் போயிருந்து கொண்டு அவர்களின் பேரைச் சொல்லி கூப்பிடுகிறான், ஒரு மந்திரத் தை ஓதித் தன் பேரில் ஊதிக்கொள்ளுகிறான். உடனேமலை போல் வளருகிறான். அவனுடைய தாய் தகப்பன் எஹூதியா யிருக்கும், அவ னுடைய தகப்பன் பெயர் ஸாஹித, அவனுடைய தாய் பெயர் குதம், அவனுடைய தாயாகிறவள் பெண்களிலே பொல்லாத வஞ்சனைக்காரியா யிருக்கிறாள், அவனுடைய தகப்பன் தஜ்ஜாலுக்குப் பேர் வைத்தது

அவுசென்றும், அவள் தாய் தஜ்ஜாலென்றும் பேர் வைத்தார்கள். அவனை ஊரெல்லாம் மெத்தப் புதுமையாகப் போய்போய்ப் பார்க்கிறார்கள்.

அப்படிக் கோதாரியாம் பார்க்கிறதென்ன காரணமென்று அதினுடனே நாங்களும் போய்ப் பார்த்து வருகிறோமென்று கேட்டோம். அதற்கவர் நல்லதென்று உத்திரவு கொடுத்தார். அப்படியே நாங்களிருவரும் தஜ்ஜாலுடைய வீட்டிற் போயவனைப் பார்க்கும் பொழுது அவனெற்றியி லொருவரி யெழுதி யிருந்தது. அந்த வரியின் பொருளாவது அவன் அல்லாஹுத் தஆலாவினிடத்திலே காபிரா யிருக்குமென்று எழுதியிருந்தது. அந்த வரியையும் வாசித்துக் கொண்டு இப்படிக்கொத்தவன் காபிர்தா னென்று எண்ணிக் கொண்டோம். பின்பு அவன் தாய் தஜ்ஜாலைக் கூப்பிட்டுச் சொன்னாள், அடா மகனே! றஸூலுல்லாவுடைய தோழமாரி லிரண்டு பேர் வந்து உன்னைப் பார்த்து நிற்கிறார்களென்கிற போது, அவன் சொன்னான், றஸூலுல்லா என்கிறவர் என் கணக்கிலே பகைஞரா யிருக்கு மென்று சொன்னான். அந்த விஷயமெல்லாங் கேட்டு நாங்கள் திரும்பி மதீனத்துக்கு வந்துவிட்டோம், யாறஸூலுல்லாவே! என்றார்கள். பின்பு நீங்களவனை தஜ்ஜாலென்று எப்படி அறிவீர்களென்று நபிநாயகம் கேட்டார்கள். அதற்கவர்கள் சொன்னார்கள், யாறஸூலுல்லாவே! அந்த ஊரில்லுள்ளோர்க ளெல்லோரு மவனை தஜ்ஜாலென்று சொல்லுகிறார்கள். அவனுடைய அலாமத்துமிப்படி யிருக்கிற தென்றார்கள். அதன் பின்பு றஸூலுல்லா மறுநாள் உமறிபுனு கத்தாபவர்களோடும், அப்துல்லா அபீலுஞ் சில அசுஹாபி மார்களுமாகக்கூடி முஸ்தபா யென்கிற ஊரை நாடிப் பிரயாணமாகிப் போனார்கள்.

அப்போது தஜ்ஜாலுடைய வீட்டின் கதவு அடைத்து கிடந்தது. அதுகண்டு றஸூலுல்லா அந்த வீட்டில் மனிதரைக் கதவைத் திறவுங்களென்றார்கள். அதுகேட்டுத் தஜ்ஜாலுடைய தாய் வந்து கதவு நீங்கலாயிருக்கிற சந்தில் கண்கொண்டு பார்த்தாள். பார்த்தபோது றஸூலுல்லாவையும், அசுஹாபிமார்களையுங் கண்டாள். கண்டவுடனே மகன் கிட்டப்போய்ச் சொன்னாள். அதுகேட்டவன் தாயைப் பார்த்து என்னுடைய பகைஞருக்குக் கதவைத் திறவென்றான். உடனே அவள் கதவைத் திறந்தாள், திறந்த போது றஸூலுல்லா தங்களுடைய

இடதுகாலை முன்னே வைத்து நுழைந்தார்கள். அப்போது றஸூ லுல்லா அசுஹாபிகளுடனே திருவுளமானார்கள், நம்முடைய மனதிலே நினைத்ததைச் சொல்வானேயாகில் அவன்தான் தஜ்ஜால், அப்படிச் சொல்லா விட்டால் அவன் தஜ்ஜாலல்ல. ஆனதால் நாமிப்போது "அலீபுலாமீம் என்கிற ஸூரத்தை", நினைத்துக் கொண்டு போவோ மென்று நினைத்துக் கொண்டு போனார்கள். அப்போதவன் மந்திரத்தை யோதி அவன் மேலே ஊதிக்கொண்டான். உடனே மலைபோல் வளர்ந் தான். அவனுக்கு இந்த் நினைவேயொழிய வேறே நினைவில்லை; போன வர்களை வாருமிருவென்று சொல்லவுமில்லை. பின்பு அவர்கள் நாம் தானே முந்திகேட்போ மென்று அவன் கிட்டப்போய் அடா! அல்லாவுடைய லஃனத்துப் பெற்றவனே! அல்லா வொருவ னென் றும் அவனுடைய தூதர் முஹம்ம தென்றும் சொல்லென்றார்கள். அதற்கவன் நீங்களென்னைத் தம்பிரானென்று சொல்லுங்களென்றான். அது கேட்டு றஸூலுல்லா கோபமாகி அல்லாவுடைய முனிவு பெற்ற வனே, நான் வாசற்படியி லென்ன நினைத்து வந்தேன் சொல்லென் றார்கள். அதற்கவன் சொன்னான், தலை வாசலிலே நின்று அலீபுலாமீம் என்கிற ஸூரத்தை நினைத்து வந்தீரென்றான். அப்போது உமறிபுனு கத்தாபு கோபமாய் வாளையுருவி அவன் தலையை வெட்டினார்.

அந்த வெட்டு அவன் தலையிலே பட்டு உடைந்து மறுபடி திரும்பி உமரிபினுகத்தாபு தலையிற் பட்டு நால் விரற்கடை அறுந்து போயிற்று. அப்போது றஸூல் நாயகம் உமறிபுனுகத்தாபவர்களைப் பார்த்து திருவுளமானார்கள்! யா உமறே! என்ன புதுமை நீ அவனை வெட்டப் போனீரே, அல்லாஹுத் தஆலா கியாமநாள் வருமளவும் தஜ்ஜாலுடைய ஹயாத்து அழிவில்லை யென்றும், என்னும்மத்துகளை நேர்வழியே மாற்றி நரகத்தில் விழுத்தாட்டுவானென்றுஞ் சொல்லி யிருக்கிறானென்றும் சொல்லி உமறிபுனுகத்தாபைக் குதிரை மேலேற் றிக் கொண்டு மதீனத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். அப்போது தஜ்ஜாலென்பவன் நம்மை வெட்டி விட்டுப் போகிறார்களென்று பின் றொடர்ந்து சண்டை யிட்டான். அப்போது றஸூலுல்லாவும், உம றிபுனுகத்தாபும் மற்ற அசுஹாபி மார்களுமாக மதீனத்திற்கு வந்து விட்டார்கள். பின்பு றஸூலுல்லாவுடைய தோழன்மார்கள்கூடி அவன் பேரிற் படை யெடுத்தார்கள், அவனுமிவர்கள்பேரி லெதிர்த்தான். அப்போது அசுஹாபிமார்கள் அவன் பேரிலே கல்லுங் கட்டையு

மெடுத் தெரிந்தார்கள். இவர்களிவ்விதமெரிகிற கல்லையும், அம்பும் அவன் நில்லென்றால் நிற்கும், அந்தக் கல்லும் கட்டைகளும், அம்பும் அவனுக்குக் கோட்டைக் கட்டானது போற் சுற்றிலும் விழுந்து விடும். அவனுடனே நாற்பதனாயிரம் அசுஹாபிகளு மெதிர்த்துஞ் ஜெயிக்க முடியவில்லை. அவன் எல்லோரையும் ஒரு மலைப் பொதிம்பி லொதிக்கி ஒரு மலையைப் பிடுங்கி வழியில்லாதடைத்து விட்டுத் தானு மவ்விடத்தில் நின்றான். அந்த அசுஹாபிகளெல்லோரும் சிறையிலகப் பட்டவர்கள் போல் அபயமிட்டார்கள்.

அப்போது அந்தச் சத்தம் உமறிபுனுகத்தாபவர்கள் கேட்டு ஓடி வந்து ரஸூலுல்லா முன்னே நின்று சலாஞ் சொல்லி, அல்லா வுடைய ரஸூலே! தஜ்ஜாலுடைய கலக்கமாய் கியாம நாளெடுத்த தென்றார். அதற்கு ரஸூலுல்லா அதென்ன விதமென்று கேட் டார்கள். அதற்கு உமறிபுனுகத்தாபு சொன்னார்கள், நம்முடைய அசுஹாபிக ளெல்லோரையும் ஒரு மலைப் பொதும்பி லடைத்து விட்டான். அவனுடனெதிர்ப் பவ ரொருவரு மில்லை யென்றார். அதை ரஸூலுல்லா கேட்டு கையை யெடுத்து யாபாரிகு யாகுதாவே, எவ்வஸ்துவையும் படைத்தானுகிற நாயனே! தஜ்ஜாலுடைய கெடு தியை நீக்குவாய், உன்னுடைய கற்பனையானது துன்யா முடிவுநா ளடுத்தல்லோ வருவது. இதற்கிடையில் வருகிறதில்லை யென்றாயே அந்த தஜ்ஜாலை எங்களை விட்டும் அகற்றுவாயென்று துஆவிரந்தார்கள். அப்போது அல்லாஹு சுபுஹானஹூவத் தஆலா, ஜிபுரீலே தஜ்ஜா லானவன் ரஸூலுல்லா பேரிலே சண்டை செய்கிறான். ஆதலால் நீர் பருந்து வேஷமாய்ப் போய் அவனைக் கொத்தி எடுத்துக் கொண்டு கோபுக்காமலைக்குப் புறங்கொண்டு போய் எழுபதினாயிரம் துடர்ச் சங்கிலி பூட்டி அதனோடு ஒரு மலையைப் பிடுங்கி மூடி வைத்து வாருமென்று திருவுளமானான்; அப்படியே ஜிபுரீல் பருந்து வேஷ மெடுத்து அவன் தலைமேலே பறந்து வந்து கோழிக் குஞ்சைப் பருந்து எடுத்துக் கொண்டு போவது போல தஜ்ஜாலை யெடுத்துக் கோபுக்கா மலைக் கப்புறம் அல்லாஹுத் தஆலாவினுடைய சொற்படிக்குச் செய்து விட்டார்.

அப்போது அவன் ஆயிபந்தரம் பரிதாபமாகக் கூப்பிட்டு யா ரஸூலுல்லாவே! நான் தீனிலே வருகிறேன். என்னை விட்டு விடு மென்றான். அதையுங் கேளாமல் அவன் சொல்லுக்குப் பதிலுஞ்

சொல்லாமல் அல்லாஹுத் தஆலாவினுடைய உத்திரவின்படி போய் விட்டார். அதின் பிறகு றசூலுல்லாவுக்குப் போய்ச் சொல்லென்று அல்லாவுடைய சப்தமுண்டாயிற்று. அது கேட்டு ஜிபுரீல் வந்து றஸூலுல்லாவுக்கு அந்த வகையெல்லாஞ் சொன்னார். அது கேட்டு அசுஹாபிகள் யாறஸூலுல்லாவே! தஜ்ஜாலென்பவன் துனியாவிலே எப்போது வருவானென்று கேட்டார்கள். அதற்கு றஸூல் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லங் திருவுளமானார்கள், உனக்குப் பிறகு 40-அடையாள முண்டும் அந்த அடையாள மெல்லாங் கண்டதின் பின்பு தஜ்ஜால் வருவா னென்றார்கள்.

தஜ்ஜால் நாமா முற்றிற்று.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொன்ன முடிவுகாலத்தின்

# நாற்பதடையாள விபரம்.

அபூபக்கர் ஸித்தீகு றலியல்லாஹு அன்ஹு எழுந்திருந்து யாறஸூலுல்லாவே! எங்களுக்கு அந்த 40-அடையாளமும் அறிவிக்க வேண்டுமென்றார்கள். அப்போது றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லந் திருவுளமானார்கள். அதென்னெனில்,

1-வது அடையாளம்—லப்பைமார்கள் மிகுதமாகி ஆலிம்கள் குறைந்து போவார்கள், அந்த அறிவாளரும் அந்த அறிவின்படி நடக்கமாட்டார்கள், அதனாலே அவர்களைக் கண்டபேரும் ஆசாரஞ் செய்யமாட்டார்கள், அந்தக் கெடுதியினால் இஸ்லாமானவர்கள் வருத்தப்படுவார்கள். 2-வது அடையாளம்-இஸ்லாமான பிள்ளைகளுக்கு நஸலுண்டானால் காபிரானவனிடத்தில் குலிசம் வாங்கிக் கட்டுவார்கள். 3-வது அடையாளம்-கூத்தாடி வேஷக்காரர்களுக்கு மிகுந்த அன்பு ஆசாரஞ் செய்வார்கள், அந்தக் கெடுதலினாலே அல்லாஹுத் தஆலா பூமியில் வகைவகையான பலாயை இறக்குவான். 4-வது அடையாளம் இஸ்லாமானவர்கள் பிள்ளைகளுக்கு அறபின் இல்மை முதலில் கற்பிக்காமல் குபிரான இல்மைக் கற்பிப்பார்கள், அதனாலந்தப் பிள்ளைகள் குபிரிலாய் கல்புகளும் கறுத்துப்போகும். 5-வது அடையாளம்-சயிர் கொப்பவர்கள் கிருபையில்லாமல் பஹீலாயிருப்பார்கள், அதனாலவர்கள் வீட்டிற் பறக்கத்தில்லாமற் போகும். 6-வது அடையாளம்-ஓதியபேர்களுக்குச் சங்கையும் வைக்கமாட்டார்கள், அல்லாஹ்வின் வேத முறைப்படியும் நடக்கமாட்டார்கள், அதனாலவர்கள் கல்பு கறுத்துப் போகும். 7-வது அடையாளம்-லஞ்சம் வாங்கினவர்கள் அந்த லஞ்சம் கொடுத்தவர்கள்மேலே கிருபையாயிருப்பார்கள். அதனாலே அல்லாஹுத் தஆலா அவர்களை நரகத்திற்போட்டு அதாபு செய்வான். 8-வது

அடையாளம்-பெண்கள் மிகுந்த வெட்கமில்லாமல் வன்னவன்னப் பிடவைகளை உடுத்திக்கொண்டு கடைகளிற் போய்க் கொள்ளவும், விற்கவும், புறப்படுவார்கள். அதனாலே துனியாவில் பறக்கத்துமாரி வரிசையுமில்லாமற்போகும்.

9-வது அடையாளம்-ஆணாய் பிறந்தவர்கள் ஹறாமான உடைகளும் பட்டுடைகளும் உடுப்பார்கள். அதனாலே துன்யாவில் வகைவகையான லஃனத்தை அல்லாஹு தஆலா இறக்குவான். 10-வது அடையாளம் ஹறாமும் மிகுதியாகும். இரவும் பகலும் தேகியாபகமாகவும் செய்வார்கள், ஹயாவில்லாமற் போகும், அதனாலே துனியாவிற் கிருபைமாறிப் போகும். 11-வது அடையாளம்-கள்ளு சாராயங் குடிப்பார்கள், அதனாலே இரக்கமும், கிருபையும், பறக்கத்தும் மாறி நாகவேதனையும் பாடுவார்கள். 12-வது அடையாளம்-சிறுபிள்ளைக ளதபுகேடாக விளையாடுவார்களதனாலே கல்பில் இன்ப மற்றுப்போகும். 13-வது அடையாளம்-ஆண்பிள்ளைகள் ஒன்றுக்கொன்று சேர்க்கை செய்வது மிகுதியாகும். அதனாலே துனியாவில் கலக்கமும் பஞ்சமும் வரும் 14-வது அடையாளம்-ஓதினபேர்கள் கைக்கூலி லஞ்சத்துக்காக மெய்யைப் பொய்யென்பார்க ளதனாலவர்களிடத்திலே பறக்கத்து மாறிப்போகும். 15-வது அடையாளம்-பிள்ளைகள் தாய்தகப்பனுக்குச் சங்கை செய்ய மாட்டார்கள், பேச்சுகளைத் தட்டி நடப்பார்களதனாலே இரணமாறிப் போகும். 16-வது அடையாளம்—மழை மாறிப்போகும் அதனாலே துனியாவில் பறக்கத்து மாறிப்போகும்.

17-வது அடையாளம்-இஸ்லாமானவர்கள் தொழுகையைத் தொழாமலிருப்பார்கள். அதனாலே பஞ்சமும், ராஜாங்க ளனியாயமுண்டாகும். 18-வது அடையாளம்-பொய் பேசுவோர்கள் மிகுதியாகவும், மெய்பேசுவோர்கள் குறைச்சலாகு மதனாலே அல்லாஹுத் தஆலாவுடைய றஹ்மத்து மாறிப்போகும். 19-வது அடையாளம்-பெண்பிள்ளைகளின் சொற்கேட்டு ஆண்பிள்ளைகள் நடப்பார்க ளதனாலே பெண்டுகள் புருஷருக்குச் சங்கை செய்ய மாட்டார்கள். 20-வது அடையாளம்-இராஜாக்கள் நீதமின்றி அனியாயஞ் செய்வார்களதனால் மழை குறைந்துபோகும். 21-வது அடையாளம்—முரீதுக்காரர்கள் தன்னுடைய ஷைகு மார்களை விசுவாசிக்கமாட்டார்களதனால் ஷைகுடைய தறஜாத்தும், றஸூலுல்லாவுடைய ஷபாஅத்தும் பெறமாட்டார்கள். 22-வது அடை

யாளம்—வாலிபகாரர்களுக்கு ஹயாவில்லாமற் புரட்டுரட்டு மூடத் தனம் பேசுவார்களதனல் பறக்கத்துமாறி முகங் கறுத்துப் போகும். 23-வது அடையாளம்—பிள்ளைகளுக்குப் பாட்டாட்டம் படித்துக் கொடுப்பார்க ளதனலே சிறுபிள்ளைகள் வருத்தப்படுவார்கள்.

24-வது அடையாளம்—சீமானானவன் ஏழைகளுடைமையை எடுத்துக்கொண்டு கூத்தாடி குடியனுக்குக் கொடுத்துத் தாங்களும் உண்பார்களதனு லவர்கள் செய்த நன்மை யெல்லாம் அல்லாஹுத் தஆலா பறித்து அந்த உடைமைக்காரனுக்குக் கொடுப்பான். 25-வது அடையாளம்—தாய் தகப்பன் இளைத்திருந்தால் அவர்கள் மக்கள் அன்ன வஸ்திரங் கொடுக்க மாட்டார்களதனல் அல்லாஹுத் தஆலா வகை வகையான பலாயை யிறக்குவான். 26-வது அடையாளம்—மின் னலு மிடியுமாய் மேகம் வரும், மழை பெய்யாது. 27-வது அடையா ளம்—சொக்கட்டான், சோழிபச்சிசு இவைகளை மிகுதியாக ஆடுவார்க ளதனல் இராஜாக்களுக்குப் பலாய் பிடிக்கும். 28-வது அடையாளம் வட்டி வாங்குவோர்கள் மிகுதியாய் வட்டிக்கணக்கு வழியிலே பேசியும், கூடியிருந்து வழக்குகள் தீர்ப்பதும் வல்லமை பேசுவதும் அனியாய மாக வழக்கு தீர்ப்பது மிகுதியா யிருக்கும், அதனலவர்களுக்கு அல்லா ஹுத் தஆலா பலாயை யிறக்குவான். 29-வது அடையாளம்—அல்லா ஸுபுஹானஹுவத் தஆலாவினுடைய ஏவலைத் தவிர்த்து விலகலைச் செய்வார்களதனல் அல்லாஹுத் தஆலா அவர்கள் பேரில் பலாயை யிறக்கி நரகவாதி யாக்குவான். 30-வது அடையாளம்—அமானிதத்தை யழித்துப் போடுவார்களதனலவர்களுக்கு அல்லாஹுத் தஆலா கொடிய அதாபைக் கொடுப்பான். 31-வது அடையாளம்—முகத்திச் சைக்காக உண்மை பேசமாட்டார்களதனல் அல்லாஹுத் தஆலா அவர்களுக்குப் பலாயை யிறக்குவான். 32-வது அடையாளம்—மழை பெய்யாமல் மாரி கோடை, கோடை மாரி யாகுமதனலே கொடுங்காற் றடித்துப் பயிர்களெல்லாம் தீய்ந்து போகும்.

33-வது அடையாளம்—பொய்யும், புறமும், படுதூறம், பேசும் பேர்கள் மிகுதியாயிருப்பார்கள். அதனல் அல்லாஹுத் தஆலா வகை வகையான பலாயை யிறக்குவான். 34-வது அடையாளம்—பெண் பிள்ளைகள் மிகுதியாய் ஆண் பிள்ளைகள் குறைந்து போவார்கள், 35-வது அடையாளம்—மனிதர்களுடைய வயது குறைந்து இருபத் தைந்திலே நரையாகும். 36-வது அடையாளம்—கீழ் ஜாதி மேல்

ஜாதியாய் மேல் ஜாதி கீழ் ஜாதியாய் கணக்கு வழக்கத் தீர்ப்பார்கள். பட்டணங் காடாகும், காடு பட்டணமாகும், பள்ளிகள் மிருதியாய்க் கட்டுவார்கள் அதில் பக்கீர்களடைந்து மஸ்ஜீதை கெடுப்பார்கள். 37-வது அடையாளம்—றமலான் மாதத்தில் நோன்பு வைக்காமல் வெள்ளிக்கிழமை மாத்திரம் நோன்பு வைத்து மற்ற நாள் வைக்க மாட்டார்கள். 38-வது அடையாளம்—ஒரு காபிரானவன் புறப்படு வான், அவன் அல்லாஹுத் தஆலாவுடைய முனிவு பெற்றவன், அவன் பேர் ருஹா, ஹயாவில்லாதவன், தீனி லுட்பட்டவனல்ல, அவன் வசபு வெள்ளைக் கண்ணுள்ளவன், இஸ்லாமானவர்களை அனி யாயம் பண்ணுவான். அவன் குருமூஸாவுடைய சீமையிலிருந்து வரு வான். பின்னும் இன்னொருவன் பகுதாது, றாமு, ஷாமு குறுசானி யென்கிற இந்தச் சீமையெல்லாம் வெட்டிப் பிடித்து அதிலுண்டான இஸ்லாமானவர்களை அனியாயஞ் செய்து கருபாக்குவான், அதனால் அல்லாஹுத் தஆலா அவர்கள் பேரிலே சோபமாய் பலாயை விடுவான் அதிலவர்களழிந்து போவார்கள்.

பிறகு இஸ்லாமான பேர்கள் தங்கள் சீமையெல்லாம் வெட்டிப் பிடித்துக் கொள்ளுவார்கள், ஒளித்திருந்த இஸ்லாமானவரும் இவர் களு மொன்றாய் கூடியிருப்பார்கள். 39-வது அடையாளம்—ஒரு காபிரானவன் வருவான், அவன் பேர் குருமூசு, அவன் காபிராயிருப் பான், அவன் கெட்ட வழகுள்ளவன், மேலுக்குப் புறக்காப் போட்டுக் கொண்டு துனியா வெல்லாம் வெட்டிப் பிடித்து இஸ்லாமானவர்க ளெல்லாரையும் வெட்டிச் சூலாயிருக்கிற பெண் பிள்ளைகளைப் பிடித்து வயிற்றைக் கீறிப் பார்ப்பான், அந்தப் பிள்ளைகளுயிரோடிருந்தால் பேஹுறுமத்துச் செய்வான், அந்தப் பிள்ளைகள் வயிற்றிலிறந்திருந் தால் தனக்குப் பொல்லாத நேரமென்று சொல்வான், அப்படி துனியா விலுள்ள இஸ்லாமானவர்க ளெல்லோருங் கூடி இனி நமக்கொருவரை இராஜாவாக வைப்போ மென்று கூபாராஜ்ஜியத்திற்குப் போய் ஹபஷி இபுனு அப்பாஸென்பவரை இராஜாவாக வைத்துக் கொள்வார்கள். இந்தச் சேதி அந்த காபிரான இராஜன் கேட்டு அப்போது முப்பதா யிரங் குதிரை மஹரிபு ராஜ்ஜியத்திற்கும், முப்பதினாயிரங் குதிரை மஷ்ரிகு ராஜ்ஜியத்திற்கும், சில குதிரைகள் கூபாராஜ்ஜியத்திற்கும், ஹபஷி உபுனு அப்பாசின் பேரிலும் அனுப்புவான். அந்த விஷய மவர்கள் கேட்டு நாமவன் பேரில் படையெடுத்து வெட்ட வேண்டு மென்று படை யெடுத்துச் சண்டை செய்வார்கள்,

அப்போது இஸ்லாமானவர்கள் படை முறிந்து ஓடுவார்கள். அது கண்டு காபிரானவர்கள் உதாசினம் பேசுவார்கள். அதெப்படி என்றால் நாங்கள் மதீனத்துக்குப் போய் றஸூலுல்லாவுடைய கபுறை வெட்டி நெருப்புப் போட்டு எரிப்போ மென்று போவார்கள். அதன் பின்னர் கூபாராஜ்ஜியத்தி லிருக்கிற இஸ்லாமானவர்களும், மற்று முண்டான பேர்களும் அல்லாஹு தஆலா விடத்திலே துஆக் கேட்பார்கள், யாறப்பில் ஆலமீனே! உன்னுடைய தோழர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய கபுறை வெட்டி நெருப்புப் போட்டு எறிக்கிறோ மென்று போகிறார்களே அவர்களை நீ கறுபாக்கென்பார்கள். அப்போது வானத்தி லிருந்து அடியார்களே! உங்களுக்குதவியாக மஹ்தி யென்பவரை அனுப்புகிறே னென்றொரு சத்த முண்டாகும். அதன் பின்னர் காபிரானவர்களும் மதீனத்தைப் பிடித் தழிப்போ மென்று சொல்வார்கள்.

40-வது அடையாளம்-மேற்கே வழக்கம் தப்பிப் பொழுது புறப்படும். அப்போது பொழுது கிளம்பிற்றென்று பறவைகள் மேயப் புறப்படும். அப்போது பொழுது சல்தியிற் மறைந்து போகும். அதினாலே பறவைகளும், காலிகளும் மேயமாட்டாது. அப்போது மேற்கே புறப்பட்ட பொழுதைக் கிழக்கேபோ வென்று அல்லாஹு தஆலாவினுடைய சத்தமுண்டாகும். பிறகு குறுமு சென்பவனுடைய படையையும் குதிரையையும் பிடித்து விழுங்கென்று பூமிக்குச் சத்த முண்டாகும். அப்போது மதீனத்தை நோக்கி வந்த படை யெல்லாம் பூமி விழுங்கி விடும். அப்போது மதீனத்தி லுண்டான பேரும் மக்கத்தி லுண்டான பேரும் கூபா ராஜ்ஜியத்தி லுண்டான பேரும் இவர்களெல்லோரும் இந்தச் சங்கதியைக் கேட்டுச் சஜதாச் செய்வார்கள். அவ்வேளையில்.

மஹ்தி வருகிறாரென்று அல்லாஹு தஆலாவுடைய சத்த முண்டாகும். இவருடைய அடையாளமாவது வாலிபமும் அகண்ட முகமும் உயர்ந்த மூக்கும், கூடு புருவமும், கறுத்த கண்ணும், முழியும், ஒற்றையாளுமாய், மிடியார் பேரிலும், சீமான்கள் பேரிலும், ஒரே கிருபையுள்ளவருமாய், மிசுறுக்கு நாற்பத்திரண்டாயிரம் குதிரையுடனே வருவார். பின்னர் மீக்காயீல் அலைஹிஸ்ஸலாமும் நாற்பதினாயிரம் குதிரையுடனே மஹ்தியும் மக்கத்திற்கு வருவார்கள். அந்த நாளாகிறது றமலான் மாதம் பொழுதைக் கிரணம் பிடிக்கும். இப்படிப்

பதினொன்றும் நாளும், பதினாலாம் நாளும் சென்ற பின்னர் மஹ்தி யென்பவரைக் கண்டு எங்களுக்கு அல்லாஹுத் தஆலா துணையாக வரக் காட்டினான். நாங்கள் காணப்பெற்றோமென்று சொல்வார்கள்.

பிறகு மக்க மதீன மற்றுமுள்ள சீமைகளெல்லாம் வெளிச்சமாகும். அப்போது குருமூசுடைய சீமையை இஸ்லாமாக்க வேண்டி ஒரு ஆளை யனுப்புவார். அது விசளம் குருமூசு கேட்டு நூற்றிரு பதினாயிரம் குதிரையை யனுப்புவான். அப்போது இஸ்லாமான படை குறைந்து காபிரான படை மிகுதியா யிருக்கும். அப்போது மஹ்தி யென்பவர் அல்லாஹுத் தஆலாவுடைய உதவியைக் கொண்டு முஹர்ரமாதம் பிறை பிறந்த ஐந்தாம் நாள் இருவரும் படை யெடுத்து வெட்டுவார்கள். அதில் காபிரான படை முறிந்தோடுவார்கள். இஸ்லாமானவர்கள் எண்பதினாயிரங் குதிரையும் பிடித்துக் கொண்டவ்விடத் திற் பாளைய மிறங்கிருப்பார்கள். அது விசளம் குருமூசு கேட்டுப் பெரும் படை சேர்த்தனுப்புவான். அதை இஸ்லாமானவர்கள் கண்டு பயப்படுவார்கள். அவர்களைப் பார்த்து மஹ்தி யென்பவர் சொல்வார், என் தோழமார்களே! நீங்கள் பயப்பட வேண்டாம். நீங்களெல்லோரும் பாங்கு சொல்லுங்கள், அல்லாஹுத் தஆலா அவர்களை அழித்துப் போடுவா னென்பார். அப்படியே பாங்கு சொல்லித் தக்பீர் கட்டுவார்கள், அவ்வேளையில் காபிரான படைகள் தங்களிற்றானே வெட்டிக் கொண்டு சாவார்கள்.

அதன் பிறகு அந்த இராஜாவையும் வெட்டி, அந்தச் சீமையிலுள்ள காபிர்களையும் வெட்டி இஸ்லாமாக்கி அவ்வூரில் நாற்பது வருஷமிருந்து ஆளுவார்கள். அப்படி யிருக்கும் நாளையில் லஃனத்துப் பெற்ற தஜ்ஜா லென்பவன் மிகுந்த ஆரவாரத்துடனே கோவேறு கழுதையின் மேலேறிக் கீழ்சீமையி லிருந்து புறப்பட்டு வருவான். அந்தக் கோவேறு கழுதையின் னெற்றியில் இவன் அல்லாஹுத் தஆலா விடத்திலே காபிரென் றெழுதி யிருக்கும். அந்தக் கழுதையி னீளம் 12-லட்ச மைலும் அகலம் 4-லட்ச மைலுமா யிருக்கும். அதன் இடது கால் வெள்ளையாக யிருக்கும். அந்தக் கோவேறு கழுதை கடலிலிறங்கினால் அதன் புறங்கால் நனையாது. துனியாவிலுண்டான காபிர்களும் எஹூதிகளும், கூத்தாபுகளும் கூட்டமாகக் கூடிக் கொண்டு வருவார்கள். அவன் ஏழு வருஷத்திற்கு முன்பாகவே யிருந்து தொடுத்த பஞ்சமாக விருக்கும் அவனுடன்

வருவோர்களுக்குத் திலதப் பொட்டிட்டு வைப்பான். அதனல் அவர்கள் தஜ்ஜாலெங்கே போனலு மங்கே போவார்கள். பூமிக்கு நான் தம்பிரானென்று சொல்லி வலதுபுறத்தி லொரு மலையும், இடது புறத்தி லொருமலையும் பிடுங்கி வைத்துக்கொண்டு வருவான். அந்த வலது புறத்தின் மலையில் மாடிகள், பொன், வெள்ளியினற் செங்கல் களும், அதிலுள்ள மரங்களெல்லாம் பச்சை மரகதத்தினலும், அந்த மரத்தினுடைய இலைகளெல்லாம் பட்டு வஸ்திரத்தைக் கொண்டு அதற் குள் ஷைத்தான்களை ஹூறுல்ஈன் பெண்களென்றும், அதற்குள்ளே தேனறும், பாலாறும், மதுவாறும் தண்ணீராறும் ஓடவைத்து இடது புறத்து மலையில் நெருப்பும், தேளும், பாம்பும், கள்ளிமரமும் நெருப் பாறு முண்டாக்கி வைத்து, தான் பூமிக்குத் தம்பிரானென்று சொல் வதைக் காபிரானவர்கள் மெய்யெண்ணிப் பூமிக்கு தம்பிரானக வந்த வரே எங்கள் தாய், தகப்பன், பெண்சாதி, உடன் பிறந்தான் இவர்க ளெல்லாரும் இறந்து போனர்களே அவர்களை எழுப்பித் தரவேண்டு மென்று கேட்பார்கள். அப்போது லஃனத்துப் பெற்ற தஜ்ஜால் ஷைத்தான்களை அழைத்தவைகளோடும் இவர்களுடைய தாய் தகப் பன்போல் வேஷமெடுத்து வாருங்களென்று சொல்வான்.

அதுபோலவர்கள் அவர்களுடைய தாய் தகப்பன் வேஷமெடுத் துக்கொண்டு வருவார்கள். வந்தவுடனே அவர்களெங்கள் தாய் தகப்பனை எழுப்பித் தந்ததுபோல் மற்றவர்களையு மெழுப்பித்தர இவரே தம்பிரானென்று சொல்லுவார்கள். அப்போது தீனில் இஸ்லாத் தில் நிலையாகிய இஸ்லாமானவர்கள் எக்கீன் கொள்ளாமற் பொய்யென்று சொல்வார்கள். அந்த விசளத்தைக் கேட்டவுடனே லஃனத்துப் பெற்ற தஜ்ஜாலவர்களைப் பார்த்து நரகத்திற் போடுங்களென்று தன்னு டைய ஏவலோருக்குத்திரவு செய்வான். அது போலவர்கள் அவர் களைப் பிடித்து நரகத்தில் போடுவார்கள். உடனே அல்லாஹுத் தஆலா அவர்களைச் சுவர்க்கத்திலாக்கி விடுவான். அந்த தஜ்ஜால் பார்த்துச் சுவர்க்கத்தில் விட்டபேரை அல்லாஹுத் தஆலா நரகத்தி லாக்கி விடுவான். இப்படி துனியா ஆலமெல்லாம் சுற்றுவான். மக்கம் மதீனம், பைத்துல் முகத்திஸ், தூரிசினைமலை இந்த நாலு இடத் துக்கும் போக மாட்டான்.

அப்போது ஈஸா நபி நாலாம் வானத்திலிருந்து இறங்கி வந்து தஜ்ஜாலைத் தேடுவார், அப்போது தஜ்ஜாலுக்கு ஈஸா நபிபேரில்

நினைவுவரும். வந்தவுடனே அவருடைய கஸ்தூரிவாசம் தஜ்ஜாலுடைய மூக்கில் வீசும். அப்போது அவன் நமக்கு நாள் வந்ததென்று ஓடுவான். அப்போதவனை ஓடவிடாமற் காலைப்பிடித்துக் கொள்ளென்று பூமிக்குச் சத்தமுண்டாகும். அப்படித்தானே தஜ்ஜாலைப் பிடித்துகொள்ளும். அப்போது ஈஸா நபி முடுகிவந்து வல்லயங்கொண்டு அவனுடைய மார்பிலெறிவார்கள். எறிந்தவுடனே அது அவன்மேல் பட்டு மண்ணில் விழுந்திறந்து போவான். அல்லாஹுத் தஆலா அவனை நரகத்திலே தாக்கல் செய்வான். அதன் பிறகு ஒளித்திருந்த இஸ்லாமானவர்களெல்லோரும், ஈஸா நபியைக் கண்டு சொல்வார்கள், அல்ஹம்துலில்லாஹி எல்லாப் புகழ்ச்சியும் அல்லாவுக்கென்று சொல்வார்கள். எங்கள் கண்ணிலே தங்களைக் காணத்தக்கதாக பெற்றோமென்பார்கள். அப்போது மறியம் பீவிவுடைய மகனார் ஈஸா நபிச் சொல்வார், முஹம்மது நபியினுடைய உம்மத்துகளே தீனில் நடவுங்கள். முஹம்மது நபியினுடைய தீனுகிறது மெத்த ஏற்றமானதாக இருக்கும். அந்த வழிப்பாட்டில் நடவுங்கள். உங்களுக்கு இரண்டுபேரை இமாமாக வைத்துக் கொள்ளுங்களென்று சொல்லுவார்.

அதன் பிறகு இஸ்லாமானவர்களெல்லோரும் கூடி முஹம்மது ஹனிபா அவர்களையும், முஹம்மது இப்னு அப்துல்லா என்பவர்களையும், இமாமாக வைத்துக்கொண்டு காபிர்களடங்கலையும் வெட்டி இஸ்லாமாக்குவார்கள். அப்படி ஈஸா நபி நாற்பது வருஷம் சிமையை யாண்டு ஸஜதாவிலிருந்தாப் போலேயே வபாத்தாகிப்போவார்கள். அப்போது எல்லா கல்குகளும் கைசேதப்பட்டு ஒடுங்கிப் போவார்கள். ஈஸா நபியடங்கின மூன்றும் நாள் யாஜூஜு மாஜூஜு என்கிற கூட்டம் புறப்படும், அவர்களை யிவ்வளவென்று எண்ணக் கூடாது. அவர்களில் முடிபெருத்த ராஜாக்கள் எழுநூறுயிம மிருப்பார்கள், அந்த ராஜாக்கள் மூன்று கூட்டமாகப் பிரிவார்கள், அதில் முதல் கூட்டத்தார் நல்லத் தண்ணீர், ஆற்றுத் தண்ணீர், குளத்துத் தண்ணீர், ஊற்றுத் தண்ணீர், இவைகளெல்லாம் வற்றிப்போய்க் குடித்து விடுவார்கள். இரண்டாங் கூட்டம் கடலின் தண்ணீரெல்லாம் குடித்து விடுவார்கள். அவர்கள் பிறப்பு முதற்கூட்டம் ஒரு ஜான் நீளமும் ஒரு ஜான் அகலமும் இரண்டாங் கூட்டம் ஒரு முழ நீளமும் ஒரு முழ அகலமும், மூன்றுங் கூட்டம் நாற்பது முழ

நீளமும் நாற்பது முழ அகலமும், அவர்களிலிளைத்தவன் நூறு மணங்கு பாரத்தை எடுத்துக் காதவழி தூரங் கொண்டு போவான்.

அந்தப்பெண்கள் ஒவ்வொருத்தி ஐநூறு ஆண்பிள்ளையும் பெற்று துனியாவில் 3-4 வருஷமிருந்து, சிமை யெல்லாம் வெட்டிப்பிடித்து மக்கம், மதீனம், பைத்துல் முகத்திஸ், தூரிசினுமலை, இந்நாலு தலத்திற்கும் போகமாட்டார்கள். நாம் பூமி எல்லாம் வெட்டிப்பிடித்தோமே இனி வானத்தின் ராஜாவையும் வெட்டிப்பிடிப்போம் என்று வில்லெடுத்து அம்பைப் பூட்டி வானமெல்லாம் மறைய எறிவார்கள். அப்போது அல்லாஹு ஸுபுஹானஹுவத் தஆலா மலாயிக்கத்துகளோடும் ஒஹோ! மலாயிக்கத்துமார்களே அந்த அம்பை யெல்லாம் பிடித்து இரத்தக்கடலிலே துவைத்துப் போடுங்களென்று சந்தமுண்டாகும். அது போலவர்களம்புக ளெல்லாவற்றையுந் துவைத்துப் போடுவார்கள். அதுகளைக் கண்டு வானத்தையும் பிடித்தும் போட்டோமென்று குரவையிட்டுச் சொல்லுவார்கள். அப்போது இஸ்லாமானவர்கள் கைகளை யெடுத்து யாபாரிவு யாகுதாயே எங்களைப் படைத்து ஆளுகிறநாயனே! உன்னையும் வெட்டிப் போட்டோமென்று சொல்லுகிறார்களே, அவர்களை நீ கருபாக்கென்று துஆகேட்பார்கள். அவர்கள் கேட்ட துஆவை அல்லாஹுத் தஆலா கபூல் செய்து ஒவ்வொரு பலாயாக அவர்கள் பேரில் பல பலாயையிறக்குவான். அது எப்படிக் கொத்தானால் மூடிய கண் விழிக்குமுன்னே அவர்களெல்லோருமழிந்து போகும்படி ஒரு மழையை யிறக்குவான், அதிலவர்க ளெல்லாருமழிந்து போவார்கள். அதன் பின்பு ஏழாநாள் சபாமறுவா மலைக்கிடையில் பூமி வெடித்து, 3-நாள் தலை புறப்படும், 3-நாள் நெஞ்சு புறப்படும், 3-நாள் கால்கள் புறப்படும். அதன் முகம் மனிதர் முகம் போலவும், கழுத்து புலிக் கழுத்துப்போலவும் உடல் பக்கிஷாரம் போலவும், கால் யானைக் கால்போலவும், முகம் பதினாலாம் பக்கத்து நிலவுபோலவும், அதன் வலதுகை சுண்டு விரலில் சுலைமான் நபியுடைய முத்திரை மோதிரமும், இடதுகையில் மூஸா நபியுடைய ஆசாக்கோலும் பிடித்ததாய் தாப்பத்துல் அறுலென்கிற பக்கிஷாரம் புறப்படும்.

அது எழுவான் படுவான் வரைக்கும் பறக்கச்சே அது அல்லாஹுத் தஆலாவுடைய நேர்வழி பெற்றவர்களைக் கண்டால் வலது கை முத்திரை மோதிரத்தைக் கண்டு அவர்கள் முகத்தில் தடவும், உடனே அவர்கள் முகம் பதினாலாம் பக்கத்து நிலவு போலிலங்கும். மற்றப்

பாவிகளைக் கண்டால் இடதுகை ஆசாவாலே தடவும்; தடவினவுடனே அவர்கள் முகங்கறுத்துப்போகும். இப்படி துனியாவெல்லாம் சுற்றி மக்கத்துக்கிடையில் வந்து நிற்கும். அந்த நாளையில் ஆண் பிள்ளைகள் குறைந்து பெண் பிள்ளைகள் மிகுந்து பெண்ணோடே பெண் சேர்க்கை செய்வார்கள். அப்படி யிருக்கிற நாளையில் ஒரு வாலிபக்காரன் வருவான். அவனை நாற்பது பெண்கள் பின்றொடர்ந்து அவனைப் பிடித்துத் துணியைபுரிந்து கொள்வார்கள். அவன் நிருவானத்தோடு மோடிப்போய் ஒரு பெரிய மரத்திலேறிக் கொள்வான். அந்த நாற்பது பெண்களும் அந்த மரத்தை சூழ்ந்து கொண்டிருப்பார்கள். அந்த நேரத்தில் அல்லாஹுத் தஆலா இசுறாபீலுக்குச் சூறாத வுத்திரவு செய்வான். அவரப்படியே சூறாதுவார். அதனால் 2-மாதம், 3-மாதம், 4-மாதமுள்ள கர்பமெல்லாம் விழுந்து போகும். மலைகளெல்லாம் பஞ்சாப் பறந்து போகும். மறுதரம் சூறாத உத்திரவு செய்வான். அது போலவர் ஊதுவார். அதனால் ஆலத்திலுண்டான மனிதர்களும், அந்த மரத்தை சூழ்ந்த பெண்களும், அந்த வாலிபக்காரனும் தாப்பத்துல் அறுலென்கிற பக்கிஷாரும், எழுபது நூறாயிரம் ஜீவஜெந்துகளும் ஏழு வானத்திலுண்டாகிய மலக்குகளும் பனுவாய்ப் போவார்கள்.

அப்போது அல்லாஹுத் தஆலா, யாமலக்கல் மவுத்தே! இன்னும் வானங்களிலும், பூமிகளிலும் உயிராயிருக்கிற பேர்களுண்டோ வென்று கேட்பான், அப்போது மலக்கல் மவுத்து சொல்லுவார் யாபாரிவு யாகுதாயே! எங்களைப் படைத்து ஆளுகிற நாயனே! எல்லா ரகசியமுமறியப்பட்டவனே! ஏழு வானத்திலும், ஏழு பூமியிலும் உள்ள வஸ்துக்கள் எல்லாம் மவுத்தாயிற்று. நாங்களெட்டுப் பேரொழிய வென்பார். அதற்கு அல்லாஹுத் தஆலா யாரென்று கேட்பான். அதற்கு மலக்கல் மவுத்து சொல்லுவார், உன்னுடைய அறுஷைச் சுமக்கும் மலக்கு நால்வரும், முகற்பான மலக்குகளும் என்று சொல்லுவார். அதற்கு அல்லாஹுத் தஆலா அறுஷைச் சுமந்த மலக்குகளுடைய உயிரை வாங்கென்று சொல்வான். மலக்கல் மவுத்து அந்த மலக்கினுயிரையும் வாங்குவார். பின்னும் மலக்கல் மவுத்தே! இன்னும் உயிராயிருக்கிறவர்களுண்டோ வென்று சத்தமுண்டாகும்.

அப்போது மலக்கல் மவ்த்து, யாபாரிவு யாகுதாயே! எங்களைப் படைத்து ஆளுகிற நாயனே! நாங்கள் நால்வரொழிய மற்றவரெல்லாம் மவுத்தென்பார். அந்த மூவருடைய உயிரையும் வாங்கென்

பான். அப்படியே உயிரை வாங்கிடுவார். அப்போது அல்லாஹுத் தஆலா யாமலக்கல் மவுத்தே உன்னுயிரை நீயே வாங்கிக் கொள்ளென்று சப்தமுண்டாகும். அப்போது மலக்கல் மவுத்து சொல்லுவார், இந்த ஆலமெல்லாம் படைத்து ஆளுகிற நாயனே! ஒருவரு மறியாத ரகசியமெல்லாம் அறியப்பட்ட நாயனே! என்னுடைய வல்லுயிர் எனக்கு வரமாட்டாதே என்று அழுவார். அப்போது மறுபடியும் சத்தமுண்டாகும். அதுகேட்டுத் தன்னுயிரைத்தானே வாங்குவார். நாயனே! என்னுடைய உயிர் எனக்கு வரவில்லையே சதையும், நரம்பும் தெறித்துப் போகுதே. இப்படி நீ செய்வா யென்று அறிந்தேனுகில் ஒரு காலும் நானுயிர் பிராணிகளுடைய உயிரை வாங்க மாட்டே னென்கிற சத்தம் பூமியில் கேட்டுதாகில் உயிரென்னப்பட்டதெல்லாம் மடிந்துபோகும். அதன் பிறகு அவருடைய ஒரு காலைக் கீழ் பூமியிலூன்றி, மற்றொரு காலை வானத்திலூன்றிச் சீலையைச் சூறைமுல்லிற் போட்டு வாங்குவது போல் நரம்பெல்லாந் தெறிக்க உயிரை வாங்கிக் கொள்வார்.

அதன் பிறகு அல்லாஹுத் தஆலா ஒருவனொழிய மற்ற வானம் பூமியிலுண்டான உயிர் பிராணிகளெல்லா மடிந்து போகும். அப்போது அல்லாஹுத் தஆலா திருவுளமாவான், வானத்திலுண்டான மலக்குகள் நாலு வேதம், நூறு சுகுபும், அவ்வேதப்படி நடக்காத ஜாஹில்கள் என் கட்டளையைத் தவிர்ந்து நடந்த அடியார்களெங்கே மிராசுக்காரர் மிராசுக்கு அடித்து கொண்டவர்களெங்கே யென்று இப்போது ஒரே சிமையாக்கிக் கிடக்கின்றதே, மறு காலத்துக்கும் பிற்காலத்துக்கும் யாரென்று தன்னில் தானே திருவுளமாவான். பின்பு அல்லாஹுத் தஆலா மடிந்தவரெல்லாரையு மெழுப்பி நன்மை தீமையின் கணக்குக் கேள்வி கேட்டு நன்மை செய்தவர்களைச் சுவர்க்கத்திலும் தீமை செய்தவர்களை நரகத்திலும் விடுவோமென்று இசுறுபீலை யெழுப்பிச் சூறாதென்று சத்தமுண்டாகும். அப்போது உயிர்களே உங்களுடலிலும் உடலைவிட்டு போன மாங்கிஷம், நரம்பு, ரோமங்களைப் பார்த்து உங்கள் தலங்களில் போய்ச் சேர்ந்து எழுந்திருங்கள். நாற்கால் மிருகங்களே! மலைகளே இடிந்து விழுந்து தண்ணீரில் விழுந்தும் மீன்கள் புலிகள் தின்றவர்களே எல்லாம் எழுந்திருங்கள். அல்லாஹுத் தஆலா நன்மை தீமை கேட்கிற நாளாச்சுது எல்லா மெழுந்திரு மென்று ஊதுவார். முதலாவது நபி நாயகத்தையும்

பிறகு ஈஸா நபியையும் பின்பு நாலு யார்களையும் அப்பால் மற்றும் கல்குகளையும் எழுப்பப்படும்.

அப்போது சமூலத்துடனே படைப்பெல்லா மெழுந்திருக்கும். எழுந்து இது கியாம நாளென்று மறிவார்கள். அப்போது பூமி செம்பு நிறம்போலாகிப் பொழுது ஒரு வல்லயப் பிரமாணமாக வந்து கொடிய சூட்டைத் தாவிநிற்கும். அந்தச் சூட்டில் மூளைக ளெல்லா முருகி அவரவர் செய்த தீமைப்படி கணைக்காலளவும், முழங்காலளவும், இடுப்பளவும், மார்ப்பள்வும், கழுத்தளவும் நீந்தி ஆதாரமில்லாமல் நிற்பார்கள். அப்போது யார்களெல்லாருங் கூடிக் கேட்பார்கள், அல்லாவுடைய றஸூலே! இப்படி எத்தனை வருஷம் அதாபு படுவார்களென்று கேட்க, அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமாவார்கள், அந்த அதாபு ஐம்பதினாயிரம் வருஷம் படுவார்கள். அப்படிப் படுத்தி நன்மையாளியைச் சுவர்க்கத்திலும், தீமையாளியை நரகத்திலும் விடுவான். அப்போது அல்லாஹுத் தஆலா 20-கூட்டமா யெழுப்புவான். அதில் 19-கூட்டம் நரகவாதியும் 1-கூட்டம் சுவர்க்க வாதியு மென்று திருவுளமாவார்கள். அதுபோல் அல்லாஹுத் தஆலா நம்மனைவோர்களையும் பூமியில் நன்மைக்காளாகி ஆகிறத்தில் சுவர்க்கப் பதவி தந்து ரட்சிப்பானாகவும். ஆமீன் ஆமீன் ஆமீன் யாரப்பில் ஆலமீன்.

நாற்பதடையாளங்கள் முற்றிற்று.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 110912
EGMORE, MADRAS

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

Printed at Shahul Hameedia Press, Madras

வெளிவந்து விட்டது முதல் பதிப்பு

# பத்ஹுர் ரஹ்மான் பில்பிக்ஹின் னுஃமான்

(ஹனபி மதுஹபுக் குரியது)

பிரயோஜனமான கல்வி பிரயோஜனமில்லாத கல்வி என்று இரண்டு வகையுண்டு. உலக வாழ்வை மட்டும் நமக்கு எடுத்துச் சொல்வது பிரயோஜன மில்லாத கல்வி; நம் மனமும் ஒழுக்கமும் சீர் பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தரக்கூடியதே பிரயோஜன மான கல்வியாகும்.

தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான ஒழுக்க முறைகள் என்னும் பிக்ஹு மஸ்அலாக்களையும் கற்றறிந்து அமல் செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடைய கடமையாகும். இது தான் இம்மை, மறுமை இரு லோகத்தில் பிரயோஜனம் தரவல்லது.

இந்த நூலில் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒழுக வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. உதாரணமாக ஈமான் இஸ்லாம், கலிமா, பரிசுத்தம், தொழுகை, ஜும்ஆ மகிமை, ஜியாரத் துல் குபூர், ஜக்காத், நோன்பு, ஹஜ்ஜு முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கம், ஸுன்னத்தின் சிறப்பு, ஸபருடைய ஒழுக்கம், இபாதத்தின் மகிமை மற்றும் சகல விதமான போதனைகளும் அடங்கி யிருக்கின்றன.

நல்ல சுத்த தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல் புதிய பதிப்பு. ஆங்காங்கு அறபு மொழியில் ஓத வேண்டிய கலிமா துஆ முதலானவைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருமை நேரில் பார்த்தால் தான் தெரியும். இதன் விலை ரூ. 3—0—0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# தாரீகுல் குலபா

## இஸ்லாமிய கலீபாக்களின் அரசாங்க சரித்திரங்கள்

நமது இஸ்லாமிய கலீபாக்களின் சரித்திர விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது எல்லா முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமான கடமையாகும். ஏனெனில் இச்சரித்திரங்களில் இஸ்லாமின் ஆரம்பமும், இஸ்லாத்தை நிலை நாட்டிய தத்துவங்களும், இஸ்லாத்தின் பக்தி விசுவாசங்களும், இஸ்லாத்தின் சமத்துவங்களும், இஸ்லாத்தின் நீதி பரிபாலனங்களும் ஒருங்கே நிறைந்திருக்கின்றன. ஆதலின், இம்மகிமை பொருந்திய சரித்திரங்களை ஒவ்வொரு முஸ்லிமும் முஸ்லிம் அல்லாதாரும் அவசியம் வாசிக்க வேண்டும்.

இதில் முதற் பாகமாக நம் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரமும், முதல் கலீபாவாகிய ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் அடங்கியது. கிளேஸ் காகிதத்தில் கிரௌன் 8-பேஜ் ஸைஸில் அச்சிடப்பட்டு பைண்டு கட்டியது. விலை ரூ. 1—8—0

மேற்படி இரண்டாவது பாகம்: இதில் ஹஜரத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரம் விரிவாய் எழுதப் பெற்றது. விலை ரூ. 1—4—0

ஷை மூன்றும் பாகம்: இது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாபத்தும், ஹஜ்றத் அலி (ரலி) அவர்களின் கிலாபத்தும், ஹஜ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களின் கிலாபத்தும், பனீ உமையாவின் கிலாபத்தும், அப்துல் மலிக் அவர்களின் கிலாபத்தும் ஆக 5-கிலாபத்து ஆட்சி வரலாறுகள் அடங்கியது. விலைரூ. 1—4—0 மேற்படி மூன்று பாகமும் சேர்ந்தது. ரூ 3–8–0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.